ஒக்டோபர் 03 - 09, 2004
October 03 - 09, 2004

3/10/2004

24 பக்கங்கள்
16.00
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI
සුඩර් ඔළි
வார மலர்







## கடத்தல்

ஈராக்கில் பெருகிவரும் தொழில்



## வவுனியாவைக் கலக்கும் காணிப் பிரச்சினை!

- என்று தீரும் இவர்களின் அவலம்?

ஜெனீவாவில் அரசியல் ஆலோசனை

## சமாதான முயற்சிகளின் அடுத்தகட்ட நகர்வுக்கு விடுதலைப் புலிகள் தயார்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒரு புறம் சமாதானம் என்று பம்மாத்து மறுபுறம் யுத்தத்துக்கு ஆயத்தம்

ஜனாதிபதி சந்திரிகாவின் சதுரங்க ஆட்டம் பலிக்காது. எவ்வளவுதான் அவர் சாமர்த்தியமாகக் காய் நகர்த்தினாலும் அவர் ஆட்டத்தில் அவுட்தான்.

ஒரே நேரத்தில் தலைநிமிர்ந்து ஜனநாயகத் தலைவியாகவும், மறுபக்கத்தில் ஆணவம் மிக்க சர்வாதிகாரியாகவும் காட்சி கொடுக்கின்றார் ஜனாதிபதி.

இதுவரை அவருடைய உள்மனதில் ஆழம் புரியாமல் இருந்தது. ஆனால், இப்போது அது வெளிப்பட்டுவிட்டது.

ஜனாதிபதியின் அண்மைக்காலப் பேச்சுக்கள் சமாதானப்பேச்சுத்தொடர்பான நெகிழ்ச்சித்தன்மை அழிந்து இறுக்கமான போக்கையே காட்டுகின்றன.

சமாதானப் பேச்சுக்களுக்கு நான் தயார், புலிகளே மறுக்கின்றனர் என்று வெளிநாடுகளில் பறை அடித்துவிட்டு நாடு திரும்பி உள்ளார் ஜனாதிபதி.

இங்கே கால் வைத்தவுடன் கதையையே மாற்றிவிட்டார்.

சமாதானப் பேச்சுக்குமுன் அது தொடர்பான கருத்துப் பரிமாறிக்கொள்வதற்கான தேசிய ஆலோசனைச் சபையில் அங்கம் வகிக்குமாறு கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தார்.

இவருடைய அழைப்பை ஐக்கியதேசியக் கட்சி உட்பட எதிர்கட்சிகள் நிராகரித்துவிட்டன. இந்த ஆலோசனைச் சபையில் கலந்து கொள்ளப்போவதில்லை என்று கூறிவிட்டன.

அப்படியானால், ஜனாதிபதியின் ஆலோசனைச் சபையில் அங்கம் வகிக்கப்போகிற கட்சிகள் எவை? புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கு நேர் எதிரிகளான ஜே.வி.பியினரும், ஜாதிக ஹெல உறுமயவினரும் தான்.

இவர்கள் தான் அரசும், புலிகளும் செய்து கொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையே ரத்து செய்யவேண்டும் என்று உயர் நீதிமன்றத்துக்குச் சென்றவர்கள்.

இடைக்கால நிர்வாக அமைப்பு தொடர்பாகப் பேச்சு என்றால் அரசுக்கு வழங்கி வரும் ஆதரவை முறித்துக் கொண்டு அரசாங்கத்தை விட்டே வெளியேறிவிடுவோம் என்று ஜே.வி.பியினர் போர்க்கொடி தூக்கி வருகின்றனர். இவர்கள் வீடு எரிக்கும் ராஜாவுக்கு நெருப்பு எடுத்துக் கொடுக்கும் மந்திரிமார் போன்றவர்கள்.

இவர்களால் எப்படித் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகளை வழங்க முடியும்?

இனவாதம் பேசும் இவர்களால் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உறுதுணையாகச் செயற்பட முடியுமா?

இந்தக் கூட்டாளிகளை வைத்துக்கொண்டு சந்திரிகா அம்மையார் பொம்மலாட்டம் காட்டுகின்றார் என்பது தான் உண்மை.

## புலிகளின் நிலைப்பாடு

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை கட்டமைப்புத் தொடர்பாக அரசும் – புலிகளும் முன்வைத்துள்ள ஆலோசனை வரைவுகளை அடிப்படையாகக் கொண்டு பேச்சுகளை ஆரம்பிக்கலாம் என்பதே புலிகளின் நிலைப்பாடு.

சமாதான முன்னெடுப்புகளைப் பொறுத்த வரையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழ் தேசியக் கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தடைப்பட்ட இடத்தில் இருந்து பேச்சை ஆரம்பிக்கும் போது தமது முழு ஆதரவும் உண்டு என வெளிப்படையாகத் தெரிவித்துவிட்டன.

அதேவேளை சிறுபான்மை அரசை ஸ்திரமாக்கவும், இடைக்காலத்தன்னாட்சி அதிகார சபை ஆலோசனைகளின் அடிப்படையில் பேச்சை ஆரம்பிக்கவுமே அரசுக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளோம், என ஆட்டம் கண்ட அரசுக்கு முண்டு கொடுத்துள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் கூறி உள்ளது.

இங்கே மற்றும் ஒரு விடயத்தையும் தொட்டுப் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதாவது இ.தொ.காவின் மறைந்த தலைவர் சௌமிய மூர்த்தி தொண்டமான் புலிகளிடம் ஐந்து வருடங்களுக்கு நிர்வாகப் பொறுப்பை ஒப்படைத்துப் பார்க்க வேண்டும் என்று அப்போதே கூறியிருந்தார். ஆனால், ஜனாதிபதி சந்திரிகாவோ அதிலும் ஒருபடி மேலே போய் வடக்கு– கிழக்கு நிர்வாகப் பொறுப்பை பத்துவருடங்களுக்குப் புலிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அப்பொழுது கூறினார்.

இவற்றை எல்லாம் ஜனாதிபதி சந்திரிகா மறந்திருக்கமாட்டார், மறக்கவும் மாட்டார். அப்படிச் சொல்லவில்லையே என்று கூறிவிடவும் முடியாது.

இப்பொழுது ஜனாதிபதி நெஞ்சைத் தொட்டுப் பார்க்கட்டும். சமாதானப் பேச்சுக்களை இழுத்தடிப்பவர்கள் யார் என்பதை?

## அரசுக்கு ஏற்பட்டுவரும் நெருக்குதல்கள்

ஜனாதிபதி உலக நாடுகளில் வெள்ளைக் கொடியை ஏந்திக்கொண்டு யாசகம் கேட்டுக் கொண்டிருக்கும் அதேவேளை, அவரது கூட்டாளிகளான ஜே.வி.பியினரும் வெளியில் இருந்து ஆதரவு வழங்குவதாகக் கூறும் ஜாதிக ஹெல உறுமயவினரும் சிவப்புக்கொடிகளை ஏற்றிக்கொண்டு யுத்தம் ஒன்றுக்குத் தயாராகின்றனர்.

நோர்வே உறவை உடனடியாகத் துண்டிக்க வேண்டும், புலிகளுடன் பேசவே கூடாது, இடைக்கால நிர்வாகம் என்ற பேச்சுக்கே இடமில்லை என கை எழுத்து வேட்டையாக ஆரம்பித்துவிட்டனர்.

ஜே.வி.பியினரோ ஜனாதிபதி சந்திரிகா இடைக்கால நிர்வாக ஆலோசனை அடிப்படையில் பேசத் தலைப்பட்டால் அரசாங்கத்தில் இருந்தே வெளியேறிவிடுவோம் எனப் பகிரங்கமாகவே சவால் விட்டுள்ளனர்.



## ஜனாதிபதி செயலகத்தின் குட்டு வெளிப்பட்டது

இதனால் ஜனாதிபதி சர்வதேச சமூகத்தினர் மத்தியில் ஒன்றையும், உள்நாட்டில் கூட்டாளிகளைத் திருப்திப்படுத்தும் வகையில் வேறொன்றையும் பேசிவருகின்றார்.

அண்மையில் ஜனாதிபதி ஐ.நாவில் ஆற்றிய உரையில் சில பகுதிகளை ஜனாதிபதி செயலகம் நீக்கிவிட்டு நண்பர்களை திருப்திப்படுத்தும் வகையில் வெளியிட்டதும் இப்பொழுது அம்பலமாகிவிட்டது.

பூனை கண்களை மூடிக்கொண்டால் பூலோகமே இருண்டுவிட்டது என ஜனாதிபதி செயலகம் இன்றும் புரிந்து கொள்ளாமல் இப்படி மக்குத்தனமாகச் செயற்பட்டது தான் வேடிக்கை.

இணையத்தளங்களும், செய்திகளும் ஜனாதிபதியின் உரையை எழுத்துக்கு எழுத்து அப்படியே வெளியிட்டதால் ஜனாதிபதி செயலகத்தின் திருகுதாளம் வெளிப்பட்டு குட்டு உடைக்கப்பட்டது. இனிமேலும் இவர்கள் இப்படிப் பொறுப்பற்ற வகையில் நடந்துகொள்ள கூடாது.

## வரவு செலவுத்திட்டத்தை எப்படித் தயாரிப்பது?

நவம்பர் மாதம் வரவு செலவுத்திட்டத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். அதற்கான நிதியை எப்படித்திரட்டுவது? காலம் காலமாக இருந்து வந்த வரி மன்னிப்புச்சட்டத்தை ரத்துச் செய்ததன் மூலம் வர்த்தக சமூகத்தினரினதும், முதலீட்டாளர்களினதும் ஆதரவையும், ஒத்துழைப்பையும் இழந்துவிட்டது அரசாங்கம்.

சமாதானப் பேச்சுகள் தடைப்பட்டுவிட்டதால் இறக்குமதிகள் அதிகரித்துவிட்டன. அதனால் இலங்கை நாணயத்தின் பெறுமதியும் குறைந்துவிட்டது.

உல்லாசப் பிரயாணிகளின் வருகையும், உலக முதலீட்டாளர்களின் முதலீடுகளும் பெரும் வீழ்ச்சி கண்டுள்ளன. வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மூலம் கிடைத்த வருமானத்திலும் ஆட்டம் கண்டுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து சொல்லொணாத் துன்பங்களுக்கும், பாலியல் கொடுமைகளுக்கும் ஆளான பல ஆயிரம் இலங்கை யுவதிகள் கட்டிய ஆடையுடன் நாடு திரும்பும் அவலம் வெளிநாடு செல்லும் ஆர்வத்தை அப்படியே தணித்துவிட்டது. உணவின்றி செத்து மடிந்தாலும், உடலை விற்று வாழ நாம் தயாரில்லை என்ற நிலைக்கு இலங்கைப் பெண்கள் துணிந்துவிட்டனர்.

மற்றும் ஒரு வழியில் வெளிநாட்டு செலாவணியைத் தேடித் தந்தது தான் ஆடை ஏற்றுமதி. அடுத்த ஆண்டு முதல் இதுவரை கிடைத்து வந்த கோட்டாமுறை ரத்து செய்யப்பட்டுள்ளது.

இந்தியா, சீனா, தாய்லாந்து போன்ற நாடுகளும் ஆடை உற்பத்தியில் ஆர்வத்துடன் போட்டியிடத் தயாராகிவிட்டன. இதனால், தரமான ஆடைகளை எந்த நாடுகள் தருகின்றனவோ அந்த நாடுகளிடம் இருந்து ஆடைகளை இறக்குமதி செய்வதென ஐரோப்பிய நாடுகள் தீர்மானித்துவிட்டன.

ஆகக் கூடுதலான இலங்கையிடமிருந்து ஆடைகளைப் பெறும் நாடு அமெரிக்கா. அமெரிக்கா இதுவரை வழங்கிய கோட்டா முறையினால் தான் இங்கு பல லட்சம் பேர் தொழில்வாய்ப்புக்களைப் பெற முடிந்தது. இந்தக் கோட்டா முறை ரத்தானால் வெளிநாட்டுச் செலாவணி மட்டுமல்ல, உள்நாட்டில் வேலை இல்லாப் பிரச்சினையும் தலை தூக்கி விடும்.

பட்ஜெட் தயாரிப்பதற்கு கை கொடுத்து வந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு, ஆடை ஏற்றுமதி, தேயிலை உற்பத்தி என்பன இப்பொழுதே சிவப்புக்கொடிகளை உயர்த்தி விட்டன.

கூட்டாளிகளான ஜே.வி.பியினரால், ஆஸ்பத்திரி, மின்சாரசபை, ரயில்வே மற்றும் போக்குவரத்துத் துறைகள், பல்கலைக்கழகங்கள் எனப் பல துறைகளிலும் முடுக்கி விடப்பட்ட சம்பள உயர்வுப்போராட்டம், அரசாங்கம் உறுதியளித்த 70 வீத சம்பள உயர்வு, இவை எல்லாம் ஜனாதிபதியை மூச்சுத்திணற வைத்துள்ளன.

(19 ஆம் பக்கம் பார்க்க)

இரா.புத்திரசிகாமணி

# வாசகர் இதயம் பேசுகிறது

*ரீ.அஞ்சலோ, கல்முனை.*

வாராந்தம் பல்சுவை அம்சங்களுடன் வலம் வரும் அன்பின் சுடர் ஒளிக்கு எனது வாழ்த்துக்கள்.

நீ சுமந்து வருகின்ற அம்சங்கள் அத்தனையும் நலம். வாராந்தம் நீ சுமந்து வருகின்ற தகவல்களுக்காய் காத்திருக்கின்றேன் நான்.

*சுபாஜினி, வவுனியா.*

வாரம் தோறும் இல்லங்களில் இனிய வரமாய் தவழ்ந்து வரும் சுடர் ஒளியே! உன்னுடல் தாங்கி வரும் அனைத்து பகுதிகளும் முத்துக்களுக்கு நிகரானவை. இன்று போல் என்றும் உண்மையின் உறைவிடமாய் பவனிவந்து எம்மை மகிழ்வூட்ட வாழ்த்துகிறேன்.

*சி.நித்தியா, கிளிநொச்சி.*

அன்புள்ள என் அபிமான சுடர் ஒளியே! உனக்கு எனது வணக்கம். நீ தாங்கிவரும் ஆக்கங்கள் யாவும் தரம். அத்தனையும் எனக்குப் பிடிக்கும். அதிலும் கவிதைப் புனல், சினிமாப்பக்கம், பித்தன் பதில், சிறுகதை, நெட்போன்ற ஆக்கங்கள் என்னை மிகவும் கவர்ந்தவை.

சுடர் ஒளியோ வாழ்கவளமுடன், வளர்க உன்பணி உலகெங்கும்.

நன்றி

*அ.ஜெகன், பூநகரி.*

முத்தான ''சுடர் ஒளி;  
என் மெய் ஒளியே!  
பொங்குகின்ற கடலிலே  
துள்ளி எழுகின்ற  
அலைகளை அள்ளி எடுத்து  
எண்ணி கணக்கிடலாம்  
அது போல்  
நீல வானில் மின்னிடும்  
அந்த விண்மீன்களையும் எடுத்தள்ளி எண்ணிடலாம்.  
ஆனால, உன்னுடைய  
மேனியிலே சுமந்து வரும்  
முத்தான முத்து கருத்துக்களையும்  
அறிவுரை செய்திகளையும்  
எண்ணிக் கணக்கிட முடியாதுள்ளது  
சுடரே நீ இன்னும் பிரகாசமாக  
சுடர்விட என்றும் என் வாழ்த்துக்கள்.

*சி.நித்தியா, கிளிநொச்சி.*

அன்பான என் இதயச்சுடர் ஒளியே!

உனக்கும் உனது பணியாளர்கட்கும் வணக்கம். ஒளியே நீ தாங்கிவரும் ஆக்கங்கள் யாவும் தரம். அதிலும் எனக்குப் பிடித்த கவிதைப்புனல், பித்தன் பதில் போன்றவை மிகச்சிறப்பு. எனவே நீ உலகெங்கும் சுடர் விட்டு ஒளிகொடுக்க தமிழீழ மக்களின் வாழ்த்துக்கள்.

சுடர் ஒளி வாழ்க.

வளர்க ஒளிர்க.

# சர்ச்சைக்குரியதாக இருந்துவரும் தாஜ்மஹாலின் வயது

முகலாயப் பேரரசின் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட தாஜ்மஹாலின் மகிமை பற்றி, நாம் அறிந்திருக்கும் வழமையான விடயங்களை மிஞ்சிய சில ஆராய்சிபூர்வமான வாதங்களும், சர்ச்சைகளும் இந்தியத் தொல் பொருள் ஆராய்ச்சித்துறையாளர் மத்தியில் ஏற்பட்டு வருகின்றன.

2004 – 2005 ஆம் ஆண்டுகளை உத்தரப் பிரதேச அரசு சர்வதேச தாஜ்மஹால் ஆண்டாக அறிவித்துள்ளது. இதனாலேயே இக்காதல் நினைவுச்சின்னம் தொடர்பான சர்ச்சை ஆரம்பமாகி இருக்கிறது.



முகலாய பேரரசர் ஷாஜகான் தனது காதல் மனைவியான மும்தாஜின் நினைவாகக் கட்டிய இத்தாஜ் மஹால், வெறுமனே நினைவுச் சின்னமாக அமையாது, பல கட்டட நுட்பங்களையும் தன்னகத்தே கொண்டது. இன்று உலகத்தவர் அனைவரும் விரும்பிச் செல்லும் சுற்றுலாத்தளமாகவும் இது காணப்படுகிறது. தாஜ்மஹால் உலக அதிசயங்களில் ஒன்று. இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

தற்போது ஆராய்ச்சியாளர்களது வாதம், தாஜ்மஹாலுக்கு எத்தனை வயது என்பதாகும். இது தொடர்பாக இந்தியத் தொல் பொருள் ஆய்வாளர்கள் இன்னோரன்ன கருத்துக்களை முன் வைக்கிறார்கள்.

உத்தரப்பிரதேச சுற்றுலா இயக்குனர்களின் முதன்மைச் செயலாளர் அசோக் சின்கா, தாஜ்மஹாலுக்கு இப்போது 350 வயது என்கிறார். இதனை நினைவு கூறும் முகமாகவே 2004 – 2005 ஆம் ஆண்டுகளை உத்தரப் பிரதேச அரசு சர்வதேச தாஜ்மஹால் ஆண்டாக அறிவித்துள்ளது. மேலும் தனது வாதத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் வரலாற்று ஆதாரங்களையும் எடுத்து விளக்குகிறார்.

தாஜ்மஹால் 1632 இல் கட்ட ஆரம்பிக்கப்பட்டு 1654 இல் பூர்த்தியாக்கப்பட்டது என்பதே இவரது வாதம். இதற்கான வரலாற்றுச் சான்றுகளையும் எடுத்து விளக்குகிறார். ஷாஜகானின் அரச சபையின் தொகுப்புகள் இதை உறுதி செய்கின்றன.

ஆனால், தொல் பொருள் ஆராய்ச்சித் துறையைச் சேர்ந்த ஜோஷி என்பவர், 1994 ஆம் ஆண்டிலேயே தாஜ்மஹால் 350 ஆண்டுகளைத் தாண்டிவிட்டது என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்

## விழித்திரு ஒரு வேளை........!

நித்திரை
என்னுள் விடை கொடுத்து
எங்கோ....
சுகமாகத் தூங்குகிறதோ.....!
தூங்க நான்
முயற்சிக்கிறேன்
சிறிதளவும்
தூக்கம் வரவில்லையே.....!
நினைவுகளை
புரட்டி நான் நிதானித்தேன்
மனச்சாட்சி!
விடிவுக்காய்
விதைத்த விதை
பயிராகுதே தவிர
முற்றிக் கதிராகவில்லையே.......!
நீ இப்போதா தூங்குவது!
முன்பு நடந்தவைகளை
ஞாபகித்துப் பார்
வேலி கூட
பயிரை மேயலாம்
என்கிறதே
ஒரு வேளை.......!...?

தமிழ் செம்மண்
ரீ.வி.பிரபா
வவுனியா.

## மாமன் மகள் வேண்டும்!

காம வெறியுடனே
கட்டியணைக்க அல்ல—என்
கோமா நிலையுதறி
கோமகனாய் வாழ்வதற்கு.
பூமாலையோடு நிதம்
பூச்சாண்டி காட்ட அல்ல
மாமன் மகளிடம்—என்
மனதைத்தான் தொலைப்பதற்கு.
கால நாயகிக்கு—என்
காதலை இழந்திட்டு
நீல விழிகசிய
நிலைமாறும் எந்தனுக்கு
கோலமயிலது போல்—என்
கோமா நி... ...ற்ற
தாயை ஒத்த ஒரு
மாமன் மகள் வேண்டும் !

வ.செல்வன்
புதுக்குடியிருப்பு

## சின்னங்கள்

எண்ணங்கள் தடுமாற
உணர்வுகள் பூப்பறிக்க
காலங்கள் வழி விட
இணைய முடியாத –இணையத்தோடு
மறக்க முடியாத சிநேகம்
சிநேகத்தின் இறுதிச்
சின்னமாய் உன்னிடம்
நான் யாசகம் செய்வது
என் மரணத்தில்
நம் நட்புக்காகச்
நீ சிந்தப் போகும்
அந்த ஒற்றைத் துளி கண்ணீரைத் தான்...
தோழி.

துளசிநிலா— யோ
நல்லூர்.

## நீயா பேசியது.....!

தென்றலாய் வந்து என்னை
தீண்டி விட்டுப் போனவனே
மருண்ட விழியால் என்னை
மயக்கிப் போன மாயவனே
அழகென்றால் நீஎன்று
அழகழகாய் சொன்னவனே
தேன் போன்ற குரலென்று
தீந்தமிழால் உரைத்தவனே!
உன் சீதை நானென்றாய்
உன் உயிர் கூட நானென்றாய்
ஊர் பார்க்க நீ என்னை
கட்டிக் கொள்வதுறுதியென்றாய்
இன்றென்னை பார்த்து
என்ன கேள்வி கேட்கிறாய்
பத்து லட்சம் தந்தால் தான்
பதி விரதையா நானுனக்கு
எத்தாகிலும் இனியுன்னை
எள்ளளவும் எண்ணமாட்டேன்.

கு.மகாலக்ஷ்மி
மிருசுவில் வடக்கு.

## ஏனோ



ஏனோ
நான்
உன்னை
சந்தித்தேன்!
ஏனோ
நான்
உன்னை
நேசித்தேன்!
ஏனோ
உன் நினைவுகளை
சிந்தித்தேன்!
உன் வார்த்தைகளுக்கு
ஏனோ நான்
செவிசாய்த்தேன்!
உன்னை
ஏனோ
ரசித்தேன்!
மொத்தத்தில்
ஏனோ
நான்
உன்னை
சுவாசித்தேன்!
உன்னை யாசித்ததால்
இன்று
நான்
பித்தாய் ஏனோ
தவிக்கிறேன்!

மஹீஸா
புத்தளம்.

## ஒரு தலை

ஒவ்வொரு
தொலைபேசி
அழைப்புக்களிலும்
தொலையுது
மனசு!
ஆங்கில
முத்தத்தில்
அராபிய தண்டனை!
அவள்
செப்படி வித்தைக்கு
தினம் சாவு!
மரணம்
வரும் வரை
மனசு மறக்காது!
நிறைமாத
கர்ப்பிணியாய்
நினைவுகள்!
அரை நொடிப்பார்வை
அமிலமாய்க்
கரையுது!
உயிர்
ஒழுகி
ஊமையாகுது!
ஹிப்னாடிக்ஸ்
வார்த்தையில்
ஹிரோஷிமா
வெடிக்கிறது!
ஊமையின்
வேதனையாய்
உளற முடியவில்லை!
உன் மௌனங்களில்
மௌத்தானது-போதும்
என் மௌத்திலாவது
மௌனிக்காமல் இரு!

நஸீம் ரூபி
புத்தளம்.

**வானவில்**
யார் கை பட்டுஆகாயத்தில்
வண்ணமாகியதோ

**மெழுகுவர்த்தி**
இருண்ட உலகில்
ஒளிக்காக தன்னையே
அழிக்கும் தியாகி.

**தீக்குச்சி**
தலையில் தீயிட்டு
அழிந்து போகும்
வித்தியாசம்
பிறவி.

**கல்லறை**
நிம்மதியற்ற
உலகில்
நிம்மதியாய் உறங்கும்
மறுவுலகம்

**கண்ணாடி**
நீ...நீயாயிருக்க
உன்னைப் போன்று
ஒருவரைக் காட்டும் மந்திரவாதி.

இளங்கவி கையூம்
காத்தான்குடி—03

## சுரேஸ்"க்கு ஒரு மடல்

கால்வயிற்றுக் கஞ்சிக்கும்
தம்முயிர் மானத்திற்கும்
காலம் எல்லாம்
அவர்கள் சிந்தும்
வேர்வைமீதேறி
கதிரைக்காய் கை
ஏந்துபவர் முழங்கையேந்தும்
கன்றுக்குட்டிக்கு ஒரு மடல்
காலத்தால் வரைகிறேன்!
வந்தமர்ந்த இடமறியா
வசைபாடும் நிலை கண்டு
உன் வம்சம் எதுவோ
என நோக்க காரணமும்
நீதான்.
முப்பது நிமிடங்கள்
மூச்சைப் பிடித்தமர்ந்து
முழுதாகவே முடியாத
உனக்கு
முப்பது வருட அரசியல்
அனுபவம் என்றொருமுலாம்
நீ பூசிக் கொண்ட சேறு.
வார்த்தை புரியாது
வரலாறு புரியாது
வார்த்தைகள் கோர்த்து
வடிவாகப் பேசவும் முடியாத
உனக்கு வரலாறு வருமென்று
நினைத்தது தப்புத்தான்.
வரலாற்றின் ஏடுகளோடு
வயலெல்லை பாராது
வாயில் வந்தது எல்லாம் பேச
ஏந்திப் பிழைக்கும் உனக்கு
என்ன அருகதை?
ஏணியாய் நின்ற மக்கள்
ஏங்கித் தவித்திட
எச்சில் சோற்றுக்காய்
ஏலம் போன நாய்கள்
எஜமானைக் கடித்தது போல்
தமிழர் தம் தரம் கதைக்க
தகுதி உனக்கென்ன காண்?
வெட்கம் கெட்டவனே
வெள்ளை சேட்டெதற்கு?
வெள்ளை கொடி காட்டி
வருகின்ற எதிரியிடமும்
ஏந்திப் பிழைப்பதற்கா?
ஓடிய குதிரைகள் எல்லாம்
ஓரமாய் ஒதுங்கும் போது
சாக்கடை கழுதை
உனக்கென்ன சவால் பேச்சு?
உறுதியாய் உனக்கென்று
உரைக்கின்றோம் கேள்!
தமிழின விடுதலையென்பது
உலகத் தமிழினம்
உரைத்திட்ட உறுதி
தலைவன் பின் தமிழினம்
விடுதலை விளிம்பில்
தமிழினம் நாளை தனியினமாய்
தலை நிமிர்ந்து வாழும் போது
தலை குனிந்து போவாய் நீ
மாறிடு உன்னினமாய்
இல்லை காலம் மாற்றிடும்
உன்னை தன்னினத் துரோகியாய்.

புதியவன்
யாழ்ப்பாணம்.

## உனக்காய்

உன் வருகையின் வழியே
என் கனவுகள் படிய
நித்தம் உன் நினைவுகளில்
அலை மோதும் எண்ணங்களை
நீயாக ஏற்று
ஆர்ப்பரிக்கும் வரையில்
நானாகக் காத்திருப்பேன்
உன் வருகையின் வழியே

பி.மேனகா
ஆலையடி வேம்பு

## சிலந்திகளின் நம்பிக்கையில்

நேற்றுப் போன்று
இன்றும்
என்னால் அடங்கி
ஒரு கூட்டுக்குள்
இருக்க முடியவில்லை.
எனினும் சுதந்திரத்தைப்
புதைக்கும்
தீவில்–ஒரு
குருடனாய்
ஊமையாய்
சித்த சுவாதீனம்
அற்றவனாய் நான்.
வெண்புறாக்களைப் பறக்க
விட்டவர்களும்
அதன் சிறகொடிந்து
குருதிப் புனலில்
கையலம்புகின்றார்கள்.
என்றோ ஒருவன்
தனக்காக எழுதி முடிய
சாசனப் பொக்கிஷங்களுள்
புதைக்கப்பட்டுப் போகிறது
வாழ்க்கை.
மக்கள் தீர்ப்பு
உயர் நீதிமன்றம்
சட்ட மன்றம்
எல்லாம் எதற்கு
இத்தனை இருந்தும்
இல்லை......
எத்தனை இருந்தும்
பேரினவாதத்தின்
வாதப் பிரதிவாதங்கள்
இன்றும் விடியலைத்
தேடித் தரவில்லை.
இழப்புக்களும் ஏமாற்றங்களும்
எல்லை மீறிய நிலையில்
இன்றும் காத்திருப்பு
சத்தியத்தின்
நம்பிக்கையில்....
பேச்சுக்களும்
கைச்சாத்துக்களும்
எமக்கு கிரீடம்
தரப் போவதில்லை.
சமாதானத்திற்கு சங்கூதும்
கூட்டமைப்புக்கள்
எமக்கு வேட்டு வைக்கலாம்?
இத்தகைய நெருக்குதல்
வாழ்க்கைக்குள்
எங்கள் சிலந்திகளும்
தாவுதலில் தவறலாம்.
மரணத்துள்
வாழ்வது பற்றி
சிலந்திகளும் அறியும்
என்றோ ஒரு நாள்
சிலந்திகளின் தாவுதலில்
இலக்கை அடையும்
அதன் நம்பிக்கையில்
நாங்கள் இங்கே!

எஸ்.எஸ்.ராஜன்.

**காதல்**
மனசுடன் மனசு
சேரும் போது
ஏற்படும் புனிதமான
உறவது!

**கல்யாணம்**
மெய்யுடன் பொய்
சேர்த்து
புரோக்கர்கள்
நடாத்தும்
ஓர் அற்புத நாடகம்!

**தாலி**
பெண்களுக்கு
வழங்கப்பட்ட
பாசக்கயிறா.....?
இல்லை தூக்குக் கயிறு!

**விவாகரத்து**
சந்தேகங்கள்
சங்கடங்களாகி
சட்டத்தால் பிரிவது.

க.சதீஸ்
யாழ். பல்கலைக்கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெட் கற்பனை

நாம் வாழும் உலகில் காலத்துக்குக் காலம் புதிய புதிய பாஷன்களில் ஆடைகள் வந்து அசத்துவது வழக்கம். இங்கே தரப்பட்டிருப்பது - எதிர் காலத்தில் இப்படியான பாஷன்கள் வந்து உலகைக் கலக்கலாம் என்று இணையத்தளம் ஒன்று செய்த கற்பனை....



முட்டை ஓம்லெட் பாஷன் ஆடை



ஐஸ் கிறீம் பாஷன் ஆடை



போத்தல் பாஷன் ஆடை



வாழைப்பழ பாஷன் ஆடை

## ஜோக்ஸ்

பத்திரிகை ஒன்றின் விளம்பரப் பகுதியில் வந்திருந்த விளம்பரம் இது. "எனக்கு அடுத்தடுத்துப் பிறந்தநான்கு குழந்தைகளும் ஆண் குழந்தைகள் தான். எனவே அடுத்ததாக ஒரு பெண் குழந்தை பிறக்க எனக்கோ - அல்லது எனது கணவருக்கோ ஆலோசனை வழங்கினால் அதற்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்" என்று ஒரு பெண் விளம்பரம் வெளியிட்




டிருந்தார்.

உலகில் பலர் அப் பெண்ணுக்கு உதவ முன் வந்தனர். அமெரிக்கர் ஒருவர் "தொடர்ந்து முயற்சி செய்யுங்கள் வெற்றி நிச்சயம்" என்று ஆலோசனை வழங்கினார்.

கனடாக் காரர் ஒருவர் "நல்ல மருத்துவரிடம் காட்டி ஆலோசனை பெறுங்கள்" என்று எழுதி இருந்தார்.

ஆபிரிக்கக்காரர் சில குறிப்பிட்ட உணவு வகைகளை எழுதி அவைகளை சாப்பிடச் சொல்லி எழுதி இருந்தார்.

இந்தியர் ஒருவர் சில யோகா குறிப்புக்களை எழுதி அவைகளை பின்பற்றச் சொல்லி எழுதி இருந்தார்.


ஆனால், இலங்கையர் ஒருவர் மட்டும் "நானே நேரிலே வந்து ஏதேனும் உதவி செய்யட்டுமா?" என்று கேட்டு எழுதி இருந்தார்.

## நெட் குறும்பு



ஆஹா
அந்த GAS தான் பட்டென்று பத்திக்கொள்ளும் என்று பார்த்தால் இந்த GAS அதைவிட மோசம் போல் தெரிகிறதே.


## கண்ணாமூச்சி



அருகேயுள்ள படத்தைப் பாருங்கள். படத்தின் மையப் பகுதியை பார்த்தபடி - உங்கள் தலையை முன்னுக்கும் பின்னுக்கும் அசையுங்கள். என்ன தெரிகிறது? சுற்றி வர உள்ள வட்டங்கள் சுற்றுகின்றன அல்லவா...?

## ஒளிந்திருக்கும் ஓவியம்

அருகே அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் படம் ஓவியமாக வரையப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த ஓவியம் எவ்வாறு வரையப்பட்டுள்ளது என்பது சோகமான வரலாறு. அதாவது வழமையாக பெயின்ரை எடுத்து பிறஷ்ஷில் தோய்த்து ஓவியம் வரைவார்கள். ஆனால், இது அப்படி அல்ல. ஈராக் யுத்தத்தில் கொல்லப்பட்ட அமெரிக்க இராணுவத்தினரின் படங்களை எல்லாம் இணைத்து இந்த ஓவியம் உருவாக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்

# கடத்தல்

## ஈராக்கில் பெருகி வரும் தொழில்

ஈராக்கில் கடத்தப்பட்ட இத்தாலியப் பெண்கள் இருவர் கடந்த வாரம் விடுவிக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கொஞ் சம் அதிர்ஷ்டம் இருந்திருக்கிறது. இந்த உலகில் இன்னும் கொஞ்சக் காலம் உயிர் வாழும் தகுதி இருந்திருக்கிறது. இல்லாவிட் டால் தலை சீவப்பட்டிருப்பார்கள்.

இத்தாலியப் பெண்களின் விடுதலைக் குப் பின்னால் நிச்சயம் பெரிய வியாபாரம் நடந்திருக்கும். கடத்தல் இப்போது ஈராக்கில் பெருகிவரும் ஒரு தொழில். பல லகரங்கள் கைமாறும் மிகப் பெரிய வர்த்தகம். கடத்தப் பட்டவர்களை மீட்க பலப்பல லட்சங்கள் கைமாறுகின்றன. பேரம் படிவதற்குள் தப்பி இருப்பவர்களுக்கு உயிர் வாழும் அதிர்ஷ் டம் இருக்கிறது என்று அர்த்தம். இல்லை யேல் தலையைக் காவு கொடுக்க வேண்டி யது பரிதாபம்.

இத்தாலியப் பெண்களை மீட்கத் தாம் ஒரு சதம் கூடச் செலவழிக்கவில்லை என்று அந்த நாட்டுப் பிரதமர் கூறி இருக்கின்றார். ஆனால், 10 லட்சம் டொலர் கைமாறியது என்கின்றன அரபுப் பத்திரிகைகள்.

ஈராக்கை அமெரிக்கா ஆக்கிரமித்த பின் னர், அங்கே சாதாமின் படைகள் கலைக்கப் பட்டன. அவர்களுக்கு வேலை இல்லை. இதனால், அவர்கள் வன்முறையில் குதிக் கிறார்கள். அல்குவைதா தீவிரவாதிகளின் செயற்பாடுகள் வேறு கொடிகட்டிப் பறக் கின்றன. போதாக் குறைக்கு மதத் தலை வரான அல் சதாரின் ஆதரவா ளர்கள் போன்றோ ரின் கிளர்ச்சி. இப் படி அல்லோல கல் லோலப்படுகின் றது ஈராக்.



இந்த அமளி யில் ஆங்காங்கு சிறியசிறிய ஆயுதக் குழுக்கள் முளைக் கின்றன. அமெரிக் கர்களை எதிர்ப்பது தான் இவர்களின் நோக்கம் என்று வெளிப்படையா கக் கூறப்படுகிறது. இவற்றின் செயற் பாட்டுக்கும் ஆயுதக் கொள்வனவுக்கும் பெரும் தொகைப் பணம் தேவைப் படுகின்றது. இதனால், ஆள்களைக் கடத்த இவர்கள் தயங்குவதில்லை.

ஆட்கடத்தல்தான் இப்போது ஈராக் கில் இலகுவான, பெருகிவரும், லாபக ரமான தொழில். கடத்தப்பட்டவர்கள் பற்றி சரியான எண்ணிக்கை தெரி யாது. சில நூற்றுக்கணக்கானவர்கள் கடத்தப்பட்டிருக்கலாம் என்று உத்தி யோகபூர்வ அறிக்கைகள் கூறினாலும் ஆயிரக்கணக்கானவர்கள் கடத்தப் பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படு கிறது. அவர்களில் பலர் ஈராக்கியர் கள்.

பல குழுக்கள் இந்த ஆள்கடத்தல் தொழிலில் ஈடுபடுகின்றன. கடத்தப் பட்டவர்களை விடுவிப்பது அத்தனை சுலபமாக இல்லை. சில குழுக்கள் பணத்தைப் பிடுங்க மட்டும் கடத்து கின்றன. சில குழுக்கள் தமது தீவிர வாத நோக்கம் கருதிக் கடத்துகின்றன. இதில் யாரிடம் சிக்குவது என்பது கடத்தப்படுபவரின் பூர்வஜென்ம பல னைப் பொறுத்தது.

இந்தக் கடத்தல் தொழில் தெரு வோர ரவுடிக் கும்பல்களில் ஆரம்பித்து சங்கிலித் தொடராக அல் குவைதா தீவிரவாதிகள் வரை நீள்கிறது. வியா பாரிகள் ஒரு பொருளை மற்றவருக் கும் அவர் இன்னொருவருக்கும் விற் பது போல் கடத்தப்பட்டவர்கள் விரை வாகக் கைமாற்றப்படுகிறார்கள். இதன் ஒவ்வொரு கட்டத்திலும் பெரும் தொகைப் பணம் கைமாறுகிறது.

கடந்த வருடத்தில் மட்டும் 52 பேர் கடத் தப்பட்டனர். அவர்களில் 35 பேர் விடுவிக் கப்பட்டனர். இது தெரிந்த எண்ணிக்கை. தெரியாதது எத்தனையோ? இந்த வருடத்தில் இதுவரை நூறுக்கும் மேற்பட்டவர்கள் கடத் தப்பட்டுள்ளனர் என்று தெரிந்திருக்கிறது.

கடத்தப்பட்ட நபர் எங்கிருக்கிறார்? எப் படி மீட்பது? என்பதை அறிய அவர் சார்ந்த நிறுவனங்கள் மகூதிகள், நிறுவனங்கள், பழங்குடியின குழுக்கள், போர்க் குழுக்கள், என்பவற்றுடனும் பழைய புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவர்களுடனும் தொடர்பு கொள்ள வேண்டியுள்ளது. ஆரம்பக் கட்டத்தி லேயே ஒருவரை மீட்பது சுலபம். போகப் போக சிக்கல் இறுகிக் கொண்டே செல்லும். பேரத் தொகையும் அதிகரித்தே செல்லும்.

கடத்தலில் ஈடுபடும் ரவுடிக் கும்பலுக்கு பணம் தான் பிரதானம். எனவே அவர்களி டம் இருந்து கடத்தப்பட்டவரை மீட்பது இலகு. அவர்களிடம் இருந்து ஒருவர் தீவிர வாதிகளின் கைகளுக்குப் போய்விடும் போது முடிவைச் சொல்ல முடியாது. ஒவ் வொரு படியாகக் கைமாற மாற கடத்தப்பட் டவர் உயிர் பிழைக்கும் விகிதாசாரம் குறைந்து கொண்டே செல்லும். அல் கெய்டாவிடம் என்றால் அவருக்கு அற்ப ஆயுள்தான்.

ரவுடிக் கும்பல்கள் ரூபா ஒரு லட்சம் முதல் 5 லட்சம் வரை பணத்தை வாங்கிக் கொண்டு பணயக் கைதிகளை விடுவிக் கின்றன. பிடிபடுபவர்கள் முஸ்லிம்களாக இருந்தால் விடுவிப்பது கொஞ்சம் சுலபம். அமெரிக்கர்கள் அல்லது பன்னாட்டுப் படையினர் அகப்பட்டுக் கொண்டால் மிகப் பெருந் தொகைக்குப் பேரம் நடக்கிறது. படியவில்லை என்றால் தலை மட்டும்தான் அறுக்கப்படும்.



விடுவிக்கப்பட்ட இத்தாலியப் பெண்கள் இருவரும்



பிரிட்டிஷ்காரரான கெனத் பிக்ளியின் புகைப்படம் அவரது மனைவியின் கையில். பிக்ளியுடன் பிடிபட்ட மற்றும் இருவரின் தலைகள் சீவப்பட்டுவிட்டன.



ஐந்து வாரங்கள் பணயக் கைதிகளாக இருந்த பின்னர் முழுதாய்த் திரும்பி வந்த பிரெஞ்ச் பத்திரிகையாளர்கள்.



எகிப்தைச் சேர்ந்த அப்துல் லத்தீல் அதிர்ஷ்டவசமாக கடத்தல்காரர்களிடம் இருந்து மீண்டு வந்தார். ஹெய்ரோவில் அவரை அணைத்து தன் அன்பை வெளிப்படுத்தும் அவரது தாய்.

- அர்ச்சனா -

பக்தாத் நகருக்கு வடக்கில் 75 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பலாட் என்ற இடத்தில் அம்ஜரத் யூசூப் ஹபிஸ் என்ற பாகிஸ்தானிய சாரதி ஒருவ ரைப் பிடித்து வைத்துக் கொண்டார்கள். அவரைப் பிடித்தவர்கள் தம்மை '1920 புரட் சிப் படை' என்று சொல்லிக் கொண்டார் கள். இது பற்றிய செய்தி அரபுத் தொலைக் காட்சிகளில் திரும்பத் திரும்ப ஒளிபரப்பப் பட்டது. ''எங்கள் தோழர்களை ஈராக் சிறை யில் இருந்து விடுவிக்க வேண்டும்; பக்தாத் தில் உள்ள பாகிஸ்தானியத் தூதரகம் மூடப் பட வேண்டும். மூன்று நாட்களுக்குள் எங் கள் கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் ஹபீஸ் கொல்லப்படுவார்'' இதுதான் கடத் தல் காரர்களின் கோரிக்கை.

பாகிஸ்தான் தூதரக அதிகாரிகள் உடனே ஈராக்கிய மதத் தலைர்களைத் தொடர்பு கொண்டனர். ஹபீஸை வேலைக்கு அமர்த் திய நிறுவனம் பழங்குடி இனத் தலை வர்களைத் தொடர்பு கொண்டது.

(07 ஆம் பக்கம் பார்க்க)






யமனுடன் போராடி சத்தியவான் உயிரை மீட்டாள் சாவித்திரி

தன் மகன் உயிரை மீட்கப் **போராடும் தாய்** இவள்.



பூங்குழலி எழுதும்....

## தொடரும் தவிப்பு

பால் கொடுப்பாள்.
குருதியும் குடிப்பாள்.
உறங்குகையில் விழித்திருப்பாள்.
திணறுகையில் விழிதிறப்பாள்.

அம்மா வலிக்குள்ளிருந்துதான்
அனைத்து விடுதலையும்.
அம்மா வலி வாங்காமல்
உலகைக் கழுவமுடியாது.

அம்மா வலி தோப்பு வலி.

ஒற்றைக் குழந்தைக்கு இரட்டை மார்பு..
அது அம்மாவின் மனவளம்.
உலகக் குழந்தைகளுக்கு ஒரே மார்பு..
இது அம்மாவின் களவளம்.



தூக்குமர நிழலில் நிற்கும் மகனை மீட்கப் போராடும் ஒரு தாயின் உண்மைக் கதை!

யமனுக்கு மனிதநேயம் இருந்தது. மனிதர்களுக்கு....?

அடுத்த வார சுடர் ஒளியில்
உணர்ச்சிகரமான விறுவிறுப்பான
தொடர் ஆரம்பம்....






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சமாதான முன்னெடுப்புகளும் சவால்களும்

சமாதான முன்னெடுப்புகளும், சவால்களும் எனும் தொனிப் பொருளில் அண்மையில் திருகோணமலையில் கருத்தரங்கும், கலந்துரையாடலும் நடைபெற்றன. இக்கருத்தரங்கில் அரசியல் ஆய்வாளர் அ.யோதிலிங்கம் உரை நிகழ்த்தினார். தமிழர்களின் அரசியல் வரலாற்றை நான்கு கட்டங்களாகப் பிரித்து ஒவ்வொரு கால கட்டத்தின் போதும் ஏற்பட்ட விளைவுகள் பற்றியும் அவர் விளக்கினார். அவரின் உரையின் தொகுப்பில் ஒரு பகுதியை இங்கு தருகிறோம். அடுத்த வாரம் மிகுதி வெளிவரும்.

சமாதானத்துக்கான முன்னெடுப்புகள் எல்லாம் தேக்கமடைந்து மீண்டும் யுத்தம் வருமா?என்றொரு சந்தேக நிலை யுத்த சூழலில் வாழ்ந்த சகல மக்களையும் பாதித்திருப்பது என்பது உண்மை.

தமிழர்கள், சிங்களவர்கள், மலையக மக்கள் என எவரும் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை. ஆனால், பாதிப்பின் அளவினைப் பொறுத்தவரை இவற்றில் வேறுபாடு உள்ளது. தமிழர்கள் பாதிக்கப்பட்ட அளவுக்கு ஏனைய சமூகத்தவர்கள் பாதிக்கப்படவில்லை. விடுதலைப்போரை நடத்துகிறவர்கள் என்ற வகையில் இது எதிர்பார்க்கக் கூடியதே.

இலங்கையில் வரும் எல்லோரும் பாதிக்கப்பட்டவர்கள் என்பதால் எல்லோருக்கும் சமாதானம் தேவையாக இருந்தது. ஆனால், சமாதானம் என்ற பதம் உள்ளடக்கும் விடயதானங்களைப் பொறுத்தவரை அங்கும் வேறுபாடுகள் காணப்பட்டன.

குறிப்பாக யுத்தத்தில் ஈடுபட்ட இரு சமூகங்களையும் பொறுத்தவரை சிங்கள சமூகத்துக்கு யுத்தமில்லாத நிலை மட்டும் சமாதானமாக இருக்கிறது. ஆனால், தமிழர்கள் சமூகத்துக்கோ யுத்தமில்லாத நிலை, இயல்பு நிலை, நிரந்தரத் தீர்வு என்பவை தான் சமாதானமாக இருக்கிறது.

இதன்படி பார்க்கும்போது தற்போது சிங்கள மக்களுக்கு சமாதானம் வந்துவிட்டது. தமிழ் மக்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை. இதனை ஆய்வாளர்கள் புறக்கணிக்க முடியாது.

சமாதானத்தை தமிழ் மக்களுக்குரிய சமாதானமாக மாற்றுதல் என்பதே இன்று சமாதானம் எதிர்நோக்கும் பிரதான சவால் என்று கருத வேண்டும்.

## அஹிம்சை முதல் ஆயுதப்போர் வரை ஒரு மீள்பார்வை

சமாதானத்தை தமிழ் மக்களுக்கும் உரிய சமாதானமாக மாற்றுதல் என வரும் போது அவர்களின் அரசியல் போராட்ட வரலாற்றினை முதலில் அறிய வேண்டும். தமிழ் மக்களினது அரசியல் போராட்டம் நான்கு பெரிய கால கட்டங்களினூடாக வளர்ச்சி அடைந்து வந்திருக்கிறது.

**முதலாவது கால கட்டம்- 1833-1921*

இலங்கையில் நவீன அரச உருவாக்கம் என்பது கோல்புரூக் அரசியல் சீர்திருத்தத்துடனேயே ஆரம்பமாகியது.

பிரித்தானியர்கள் தமது ஆட்சி அதிகார வசதிக்காக பெரிய அளவுக்குத் தொடர்புபடாத தனித்தன்மை வாய்ந்த ஆட்சி மரபுகளைக் கொண்ட பிரதேசங்களையெல்லாம் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தார்கள்.

இவ்வாறு தான் வடக்குக்கிழக்கு மாகாணங்களும் ஏனைய மாகாணங்களுடன் இணைக்கப்பட்டு ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன.

கற்பிட்டிக்கும், திருகோணமலைக்கும் இடையே ஒரு கோட்டினை வரைந்தால் அதன் மேற்குப்பகுதி முழுவதும் யாழ்ப்பாண இராஜ்யத்துக்கு உட்பட்டதாக இருந்தது. கிழக்கின் ஏனைய பகுதிகள் தமிழ்குறுநில மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்டதாக இருந்தன.

கோல்புரூக் அரசியல் சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட போது இலங்கையில் தனித்தன்மை வாய்ந்த மரபுகள் கொண்ட மக்கள் கூட்டங்களும், பிரதேசங்களும் இருந்திருக்கின்றன.

அவற்றை எல்லாம் இணைத்து ஓர் ஆட்சி அமைப்பினை உருவாக்குகின்றபோது அந்த ஆட்சி அமைப்பினையும் பன்மைத் தன்மை வாய்ந்ததாக உருவாக்கி இருக்க வேண்டும்.

மாறாக பிரித்தானிய ஆட்சியாளர்கள் அவற்றை எல்லாம் நிராகரித்து தமது வசதிக்காக ஒற்றைத் தன்மை வாய்ந்த ஆட்சி அமைப்பு வடிவத்தினையே உருவாக்கினர். இந்த ஒற்றை ஆட்சி அமைப்புத்தான் இன முரண்பாட்டின் மூல ஊற்றாக இருக்கின்றது.

### இந்தியாவில் கையாண்ட அணுகுமுறை இங்கு இல்லை

இந்த விடயத்தில் இந்தியாவில் கையாண்ட அணுகுமுறையினைப் பிரித்தானிய ஆட்சியாளர்கள் இலங்கையில் கையாளவில்லை. இந்தியாவில் ஐநூறுக்கும் மேற்பட்ட ஆட்சிப் பிரதேசங்களை ஒரே நிர்வாகத்தின் கீழ் இணைத்தபோது ஆட்சி அமைப்பில் பன்மைத் தன்மைக்கு இடங்கொடுத்தனர். சுதந்திரம் கிடைத்த பின்பு இந்திய ஆட்சியாளர்கள் இந்தப் பன்மைத் தன்மையை மேலும் வளர்த்தெடுத்துக் கொண்டனர். இதற்கேற்ற வகையில் அரசமைப்பை நெகிழ்வுடையதாக உருவாக்கினர்.

இதன் விளைவாகத் தான் இந்தியாவை 28 மாநிலங்களாகவும், 6 யூனியன் பிரதேசங்களாகவும், ஒரு தலைநகர்ப்பகுதியாகவும் நாம் காண்கிறோம்.

இதுமட்டுமல்ல, இந்தியாவின் சில மாநிலங்களில் உள் மட்டமளவில் பன்மைத் தன்மையைப் பேணுவதற்காக சுயாட்சி உள்ளமைப்புக்களும் உருவாக்கப்பட்டுள்ளன. அசாம், மேகாலயா, மீசோராம் போன்ற மாநிலங்களில் வாழும் பழங்குடி மக்களுக்காக இந்த ஒற்றையாட்சி உள்ளமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் உள்ள இந்தப் பன்மைத் தன்மை அங்குள்ள மக்களின் அரசியல் அபிலாஷைகளை தீர்க்கப் போதுமானது என்று கூற நான் முன்வரவில்லை.

ஆனால், பன்மைத் தன்மை என்ற அரசியல் கலாசாரம் சிறிய அளவிலாவது அங்குஉள்ளது என்பதே இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

### தமிழ் அரசியலின் ஆரம்பம்

இலங்கையில் தமிழர் அரசியலின் ஆரம்பம் கோல்புறூக் அரசியல் சீர்திருத்தத்துடன் ஏற்பட்டது. அப்போது சட்ட சபையில் பெயரளவிலேயே தமிழர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டது. பிரித்தானியர் உருவாக்கிய ஒற்றையாட்சியில் அதிகாரம் ஆரம்ப காலத்தில் பிரித்தானியர்களிடம் மட்டும் இருந்தது. இதனால் குறைந்த அளவு பிரதிநிதித்துவம் தமிழர்களுக்கு பிரச்சினையாக இருக்கவில்லை. மாறாக பிரித்தானியர்களிடமிருந்து அதிகாரத்தினை இலங்கையர்கள் எவ்வாறு பெற்றுக் கொள்வர் என்பதே அப்போது பிரச்சினையாக இருந்தது. அதிகாரத்தைப்பெற்றுக்கொள்வதற்காக சிங்கள மக்களுடன் இணைந்து தமிழர்களும் போராடினார்கள். பிரித்தானிய ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் முன்னிலைத்தலைவர்கள் தமிழர்களாகவே விளங்கினர்.

சேர்.முத்துக்குமாரசுவாமி, சேர் பொன் இராமநாதன், சேர்.பொன் அருணாசலம் போன்றோர் முக்கியமானவர்கள். இவர்களில் சமூகமாற்ற அரசியலின் மூலகர்த்தாவாக சேர். பொன் அருணாசலம் விளங்கினார்.

கலாசார மட்டத்தில் பிரித்தானியர்களுக்கு எதிரான செயற்பாட்டினை கலாயோகி ஆனந்த குமாரசாமி முன்னெடுத்திருந்தார்.

மத மட்டத்தில் ஆறுமுக நாவலரின் பணி பிரதானமாக இருந்தது. தென்னிந்தியாவில் சுதேச மதங்களின் மீள் எழுச்சி ஆறுமுக நாவலரின் அடியொற்றியே முன்னெடுக்கப்பட்டது.

எனவே, இக்காலகட்டத்தில் தமிழர்களின் அரசியல் என்பது தமிழர் என்கிற மற்றும் இலங்கையர் என்கிற அடையாளத்தையும் பேணுவதாகவே இருந்தது. பண்பாட்டுத் தளத்தில் தமிழர் என்ற அடையாளத்தைப் பேணிய அதே வேளை அரசியல் தளத்தில் இலங்கையர் என்ற அடையாளத்தைப் பேணினர். இனவாரிப் பிரதிநிதித்துவ முறையும் இப் பேணுகைக்கு உதவுகின்ற ஒன்றாக இருந்தது.

இதை விட கே.எம்.டி. சில்வா குறிப்பிட்டது போன்று, இதற்கு இன்னோர் காரணமும் இருந்தது.

இக்காலகட்டத்தில் தமிழர்கள் தங்களை ஒரு சிறுபான்மை இனத்தவராகக் கருதவில்லை. மாறாக இலங்கையில் சிங்களவர்களும், தமிழர்களும் பெரும்பான்மை இனத்தவர்கள், ஏனையோர்களே சிறுபான்மை இனத்தவர்கள் என்ற கருத்தினைக் கொண்டிருந்தனர்.

1921இல் அறிமுகப்படுத்தப்பட்ட 'மானிங்' அரசியல் சீர்திருத்தம் இந்தப் பேணுகையை எல்லாம் சீரழித்தது. தமிழர்கள் தனியான இன அரசியலை நோக்கிச் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டனர். இந்த அரசியல் சீர்திருத்தத்துடன் தமிழர் அரசியலின் இரண்டாவது கால கட்டமும் ஆரம்பித்து விட்டது எனலாம்.

**இரண்டாவது காலகட்டம் 1921-1949*

1921இல் அறிமுகப்படுத்தப்பட்ட மானிங் அரசியல் சீர்திருத்தம் பிரதேச வாரிப்பிரதிநிதித்துவ முறையைக் கொண்டு வந்தது. இலங்கையில் சிங்களப் பிரதேசங்களே கூடுதலாக இருந்த நிலையில் இப் பிரதிநிதித்துவ முறை சிங்கள சமூகத்துக்கே வாய்ப்பாக அமைந்தது. இது ஏற்கனவே இருந்த சமநிலைப்பிரதிநிதித்துவத்தைக் குறைத்தது. சிங்களப் பிரதிநிதிகளாக 13 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

அதே வேளை, தமிழர் பிரதிநிதிகளாக மூவர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டனர். இதனை எண்ணிக்கை அடிப்படையிலான ஜனநாயகச் செயன்முறையின் தெரிவு என்கின்றனர். எண்ணிக்கை ஜனநாயகம் மனிதத் தலைகளை கவனத்தில் எடுக்கிறதே தவிர தனித்தன்மை வாய்ந்த சமூகங்களை கவனத்தில் எடுப்பதில்லை. சமூகங்களுக்கான ஜனநாயகத்தினை கவனத்தில் எடுக்கும்போதுதான் தீர்மானம் எடுக்கும் செயல் முறையில் பன்மைத் தன்மையைப் பேண முடியும்.

இந்த வகையான செயன்முறையில் எண்ணிக்கையில் குறைந்த சமூகங்களுக்கு பாதிப்பு ஏற்படும்போது அதனைத் தடுக்கிற அதிகாரத்தையாவது அந்தந்த சமூகங்களிடம் கொடுத்திருக்கலாம். பல நாடுகளில் இதற்காக இரட்டை வாக்கு முறை பின்பற்றப்படுகிறது. எண்ணிக்கையில் குறைந்த சமூகங்களைப் பாதிக்கின்ற விடயங்கள் வரும்போது மொத்த சபையின் வாக்கெடுப்புக்கு அப்பால் குறிப்பிட்ட சமூகத்தின் பிரதிநிதிகள் மத்தியிலும் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பதே இரட்டை வாக்கெடுப்பு முறையாகும்.

ஆனால், இவற்றுக்கு மாறாக அரசியல் அழுத்தங்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய நிலையிலுள்ள தேசாதிபதியிடமே இவ்வாறான சட்டங்கள் தொடர்பில் மறுப்பாணை அதிகாரம் கொடுக்கப்பட்டது.

அது நடைமுறையில் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்குப் பாதுகாப்பாக அமையவில்லை. இதுவே சுதந்திரத்துக்கு முற்பட்ட அரசியல் சீர்திருத்தத்தின் மூலம் கிடைத்த அனுபவமாகும்.

சுதந்திரத்துக்குப்பின்னர் நடைமுறையில் இருந்த சோல்பரி அரசமைப்பில் இந்த அதிகாரம் நீதிமன்றத்திடம் கொடுக்கப்பட்டது. நீதி மன்றங்களும் இனவாதத்தை நிலைநிறுத்தும் இயந்திரங்களாக இருந்தமையால் அவற்றிலிருந்தும் போதியளவு பாதுகாப்பு கிடைக்கவில்லை. மொழிப்பிரச்சினை தொடர்பான கோடீஸ்வரன் வழக்கு இதற்கு உதாரணமாகும்.

சோல்பரி அரசமைப்புக்கு பின் வந்த குடியரசு அரசமைப்புகளில் இவ்வாறான பெயரளவு பாதுகாப்புகளும் இல்லாமல் செய்யப்பட்டன. இதற்கு மாறாக ஆட்சி அமைப்பின் ஒற்றைத் தன்மையை மேலும் மேலும் இறுக்குவதிலேயே கவனம் செலுத்தப்பட்டது.

1972 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட முதலாவது குடியரசு அரசமைப்பு இந்த விடயத்தில் உச்ச நிலையில் இருந்தது. எண்ணிக்கை ஜனநாயகத்தின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட தேசிய அரசுப் பேரவை அரச அதிகாரத்தின் உயர் கருவி எனக் கூறப்பட்டமை இதன் வெளிப்பாடாகும்.

1978 இல் அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டாவது குடியரசு அரசமைப்பும் ஒற்றைத் தன்மையை வலியுறுத்துவதில் அதிக கவனம் செலுத்தியது.

ஆயினும், ஆட்சியாளர்கள் தங்கள் நலன்களுக்காக உருவாக்கிய ஜனாதிபதி தேர்தல் முறையும், விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையும் மறைமுக நிலையில் மத்திய மட்டத்தில் சிறிதளவு பன்மைத் தன்மை வளர்வதற்கு உதவின.

இனி மீண்டும் இரண்டாவது கட்டத்தின்ஆரம்பத்தைநோக்குவோம்.

மானிங் அரசியல் சீர்திருத்தம் ஏற்படுத்திய பிரதிநிதித்துவ சம நிலைக்கு ஏற்ற வகையில் தமிழ்ப் பிரதிநிதிகள் சம பிரதிநிதித்துவ கோரிக்கையினை முன்வைத்தனர். சிங்களப் பிரதிநிதித்துவத்தில் குறைந்தது மூன்றில் இரண்டு பங்காவது தமிழர்களுக்குத் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

இதன்போது தான் இலங்கைத் தேசிய காங்கிரஸை உருவாக்கும் போது வாக்குறுதி அளித்தபடி மேல் மாகாணத் தமிழர்களுக்கான பிரதிநிதித்துவத்தை தருமாறுகோரினர். வாக்குறுதி அளித்த சிங்களத் தலைமை அதற்கு தாங்கள் பொறுப்பில்லை எனக் கூறி கைவிரித்தது. இது தான் வாக்குறுதிகள் மீறல்கள் தொடர்பாக தமிழ்த்தரப்புக்கு கிடைத்த முதலாவது அனுபவம்.

வாக்குறுதி அளிக்கும்போது மத்தியஸ்தராக இருந்த சேர். பொன். அருணாசலம் இதனால் மனமுடைந்தார். இலங்கைத் தேசிய காங்கிரஸை விட்டு வெளியேறினார்.

1921 ஆம் ஆண்டில் தமிழர் மகா சபையை உருவாக்கினர். இதன் தோற்றத்துடன் தமிழர்களது இன அரசியல் ஆரம்பித்து விட்டது என லாம்.

இலங்கைத்தேசியத்துக்காகவும், இலங்கை தழுவிய மாற்றத்துக்காகவும் உழைத்த ஒரு மகான், இலங்கைத் தேசிய இயக்கமான, இலங்கைத் தேசிய காங்கிரஸின் முதலாவது தலைவராக இருந்த ஒரு மகான் இன அரசியலை நோக்கிச் செல்லும்படி வரலாறு அவரை நிர்ப்பந்தப்படுத்தியது.

1924இல் அறிமுகப்படுத்தப்பட்ட மானிங்- டிவன்சயர் அரசியல் சீர்திருத்தமும் இதுவிடயத்தில் பெரிய முன்னேற்றத்தைக்கொடுக்கவில்லை. 1931இல் அறிமுகப்படுத்த டொனமூர் அரசமைப்பு ஒற்றைத் தன்மை வளர்ச்சியின் மூன்றாவது படிக்கல்லாக இருந்தது.

இதன் மூலம் மட்டப்படுத்தப்பட்ட பொறுப்பாட்சி இலங்கையர்களுக்கு வழங்கப்பட்டது. எண்ணிக்கை ஜனநாயகத்தின் அடிப்படையில் உருவாக்கிய நிறுவனங்களிடம் ஆட்சி அதிகாரம் கொடுக்கப்பட்டமையால் அது இயல்பாகவே பெரும்பான்மை சமூகத்திடம் சென்றது. ஏனைய சமூகங்கள் ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டன.

ஒற்றைத் தன்மை மேலும் இறுக்கமாக்கப்பட்டது. 1936இல் உருவாக்கப்பட்ட மந்திரி சபை தனிச்சிங்கள மந்திரி சபையாக உருவாக்கப்பட்டமை இந்தப் போக்கின் உச்ச வெளிப்பாடாக அமைந்தது. இந்நிலையில் தான் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் தலைமையும், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியும் முன்னுக்கு வந்தது.

மத்திய மட்டத்தில் சம வாய்ப்புக்களைக் கோருகின்ற 50க்கு 50 கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இவ்வாறு மத்திய மட்டத்தில் சமத்துவம் கோருகின்ற ஒரு அரசியலாகத்தான் இக்கால கட்டத் தமிழர்களின் அரசியல் அமைந்தது.

1947இல் அறிமுகப்படுத்தப்பட்ட சோல்பரி அரசியல் யாப்பு முழுமையான அதிகாரத்தை இலங்கையர்களுக்கு வழங்கியது. இதன் மூலம் ஆட்சி அதிகாரத்தின் ஒற்றைத் தன்மைக்கு முழு வடிவம் கொடுக்கப்பட்டது. பெரும்பான்மை சமூகம் ஆட்சி அதிகாரத்தை முழுமையாகவே பெற்றுக்கொண்டது. ஏனைய சமூகங்கள் ஆட்சி அதிகாரக் கட்டமைப்பிலிருந்து தூர வீசப்பட்டன.

ஆட்சி அதிகார மையங்கள் இந்த நிலைக்கு உயர்ந்த போது தமிழர் அரசியலும் எதிர் நிலைக்கு உயர்ந்தது. மத்திய மட்டத்தில் சம வாய்ப்புக்கு கோரிக்கை விடுவது இனிச் சரிப்பட்டு வராது எனத் தமிழர்கள் உணர்ந்தனர். அவ்வாறு அவர்கள் உணரத்தொடங்கியதும் தமிழர் அரசியல் அடுத்த கட்டத்துக்குப் பாய்ந்தது.

(அடுத்தவாரம் நிறைவுறும்)

-எஸ். எஸ். ஆர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# மயோன் VS ஐ.தே.க.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம். மயோன் முஸ்தபா, அக்கட்சியில் இருந்து கொண்டே புதிய முஸ்லிம் கட்சி ஒன்றை நிறுவியுள்ளார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு ஐ.தே.க தயாராகி வருகிறது என்ற கதை முஸ்லிம் அரசியல் அரங்கில் இன்று முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலைத் தொடர்ந்து தான் புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்கப்போகிறார் என மயோன் முஸ்தபா கூறிவந்தார். அத்துடன் அவ்வாறான கட்சி ஒன்று அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை, நிந்தவூர் போன்ற இடங்களிலும், கொழும்பு நகரிலும் பல கூட்டங்களை நடத்தி பல்வேறு மட்டத்தினருக்கும் அவர் விளக்கமளித்து – விழிப்புணர்ச்சியூட்டி வந்தார்.

கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளையும் சேர்ந்த சட்டத்தரணிகள், டாக்டர்கள், தொழிலதிபர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உள்ளிட்ட தொழில்சார் நிபுணர்களையும், புத்திஜீவிகளையும் மயோன் முஸ்தபா தன்னோடு இணைத்துக் கொண்டு, புதிய கட்சிக்கான வேலைத்திட்டத்தை தயாரித்துக் கொண்டிருக்கையிலேயே அவரை எம்.பி.பதவி தேடி வந்தது.

கருணா விவகாரத்தில் சர்ச்சைக்குள்ளான அலிஸாஹிர் மௌலானா, ஐக்கிய தேசியக் கட்சியில், தான் வகித்து வந்த தேசியப் பட்டியல் எம்.பி பதவியை ராஜினாமாச் செய்ததை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு மயோன் முஸ்தபாவை ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க நியமித்தார்.

## ரணில் மீது கண்டனம்

அப்போதே மயோன் முஸ்தபாவின் நியமனம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. புதிய கட்சி ஒன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளில் பகிரங்கமாகவே ஈடுபட்டு வருகின்ற ஒருவருக்கு எம்.பி நியமனத்தை, தட்டில் வைத்துக் கொடுத்தமைக்காக ரணில் விக்கிரமசிங்க, கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களால் வன்மையாகக் கண்டிக்கப்பட்டார்.

அவர்கள் மயோனின் நியமனத்திற்கெதிராக, போர்க்கொடி தூக்கினர். அந்த நியமனம் வாபஸ் பெறப்பட்ட வேண்டும் என அவர்கள், ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை வற்புறுத்தினர் – நெருக்குதல் கொடுத்தனர்.

ஆனால், ரணில் அசையவில்லை – அவர்களின் கூச்சல்களை காதில் போட்டுக் கொள்ளவில்லை. தேசியப்பட்டியல் எம்.பி. நியமனத்தில் தான் மேற்கொண்ட தீர்மானம் மிகச் சரியானது – கேள்விக்குட்படுத்த முடியாதது என அவர் அடித்துக் கூறிவிட்டார்.

அலிஸாஹிர் மௌலானாவின் ராஜினாமாவைத் தொடர்ந்து ஐ.தே.க. சிரேஷ்ட முஸ்லிம் தலைவர் – முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வரே, எம்.பியாக நியமிக்கப்படுவார் என நூற்றுக்கு நூறு வீதமானோர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கையிலேயே மயோன் முஸ்தபாவை ஐ.தே.க தலைவர் ரணில், எம்.பியாக நியமித்தார்.

## ரணிலின் கடப்பாடு

1998, 1999 காலப்பகுதியில் ஐ.தே.க.வில் அங்கம் வகித்த கிழக்கு முஸ்லிம் அரசியல்வாதிகள் எல்லோரும் அக்கட்சியிலிருந்து விலகி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து கொண்டிருந்தபோது, மயோன் முஸ்தபா ஐ.தே.கவில் சேர்ந்து கிழக்கில் அதனை அழியவிடாது காப்பாற்றியவர்.

1999 ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அரச பலத்தை முழுமையாகப் பாவித்து அம்பாறை மாவட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு முஸ்லிம் வாக்குகளைச் சேகரித்துக் கொடுத்தபோது, மயோன் முஸ்தபா, ஐ.தே.க. தலைவரான ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கணிசமான வாக்குகளைப் பெற்றுக் கொடுத்து தனது அரசியல் பலத்தை நிரூபித்துக் காட்டினார்.

2000 ஆண்டு பொதுத்தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடாது, பொ.ஐ.முன்னணியின் கதிரைச் சின்னத்தில் போட்டியிட்டது. அதன்போது மயோன் ஐ.தே.க.வில் போட்டியிட்டு சுமார் 33 ஆயிரம் வாக்குகளைப் பெற்றுச் சாதித்தபோதிலும் எம்.பியாக முடியவில்லை.

2001 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டபோதிலும் மு.கா., ஐ.தே.க.வுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் மயோன் முஸ்தபாவின் அரசியல் பலம் – வாக்கு வங்கியைக் கருத்திற்கொண்டு அவரைத் தேர்தலில் போட்டியிடவிடாது மு.கா. தடுத்தது.

2004 ஏப்ரல் பொதுத் தேர்தலிலும் இதேபோன்று தேர்தலில் போட்டியிடவிடாது மு.கா.வினால் மயோன் முஸ்தபா தடுக்கப்பட்டார்.

இப்படித் தனது கட்சிக்காக பல்வேறு தியாகங்களைச் செய்து – உழைத்த மயோன் முஸ்தபாவுக்கு தேர்தலில் போட்டியிடும் உரிமை மறுக்கப்பட்டு அநீதி இழைக்கப்பட்டார் என்பதாலும், அதற்குத் தானே துணை நின்றேன் என்ற குற்ற உணர்வுமே ரணில் விக்கிரமசிங்கவைச் சிந்திக்க வைத்திருக்கிறது.

## ரணிலின் ராஜதந்திரம்

அது தவிர எம்.பி நியமனத்தை வழங்குவதன் மூலம் புதிய கட்சி தொடங்கும் திட்டத்திலிருந்து மயோன் முஸ்தபாவைத் தடுத்து விட முடியும் – அதனால் அவரைத் தொடர்ந்தும் ஐ.தே.க அங்கத்தவராக வைத்திருக்கலாம் என்ற எண்ணத்திலும் ரணில் விக்கிரமசிங்க ராஜதந்திரமாக நடத்திருக்கக்கூடும்.

ஏனெனில் அடுத்த ஆண்டு அல்லது 2006 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் கட்சிப் பணிகளை – தேர்தல் வேலைகளை முன்னின்று நடத்துவதற்கு மயோன் முஸ்தபாவைத் தவிர வேறு எந்த முஸ்லிம் தலைவரும் அங்கு கட்சியில் கிடையாது.

அதனால் ஜனாதிபதி வேட்பாளரான தனது வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு மயோன் முஸ்தபாவின் பங்களிப்பு அவசியம் எனக் கருதி, அவரை ஐ.தே.கவில் இருப்புக்கொள்ள வைப்பதற்காக, ரணில் அவரை எம்.பியாக நியமித்திருக்கலாம்.

## மயோன் தயக்கம்

எனினும், கட்சி ஆரம்பிக்கும் வேலைகளில் முனைப்புடன் செயற்பட்ட மயோன் முஸ்தபா, ஐ.தே.கவின் எம்.பி. பதவியை ஏற்பதில் முதலில் தயக்கம் காட்டினார், மறுத்து வந்தார். ஆனால் அவரது ஆதரவாளர்கள், எம்.பி. பதவியை ஏற்றுக்கொண்டாக வேண்டும் என வற்புறுத்தி – ஒற்றைக் காலில் நின்றனர். ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

உத்தேச புதிய கட்சி அமைப்புக் குழுவினரும் மயோன் முஸ்தபாவை சங்கடத்திற்குள் தள்ளிவிடக்கூடாது என்பதற்காகவோ என்னவோ? ஐ.தே.க.வினால் தரப்பட்டிருக்கின்ற தேசியப்பட்டியல் எம்.பி பதவியை மயோன் முஸ்தபா ஏற்றுக்கொள்வதில் தவறில்லை என்று பச்சைக்கொடி காட்டினர். அந்த எம்.பி.பதவி, தமது கட்சி நிறுவும் வேலைத் திட்டத்திற்கு உதவுமே தவிர தடையாக – பாதிப்பாக அமைந்துவிடாது எனவும் அவர்கள் கூறினார்.

அதனால் இரண்டு, மூன்று வாரகால இழுபறிக்குப் பின்னர் மயோன் முஸ்தபா எம்.பி. பதவியை ஏற்றுக்கொள்கின்ற நிலைப்பாட்டிற்குச் சென்றார்.

மயோனின் இந்த நிலைப்பாடு அரசியல் அவதானிகளால் வித்தியாசமாகவே பார்க்கப்பட்டது. அவர் புதிய கட்சி ஒன்றை நிறுவும் பணியில் பகிரங்கமாக – தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மயோனை எம்.பியாக நியமித்த விடயமும், அதனை மயோன் ஏற்றுக்கொண்ட விடயமும் புதிய முஸ்லிம் கட்சியின் வரவுக்கு ஐ.தே.கவின் குறிப்பாக அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆசீர்வாதம் இருக்கிறதோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியது. விமர்சனமும் எழுந்தது.

அதேவேளை, எல்லோரையும் போன்று மயோன் முஸ்தபாவும் எம்.பி.பதவியில் மோகம் கொண்டு – ஐக்கிய தேசியக் கட்சிக்கு சோரம் போய்விட்டார் என்கின்ற கருத்தும் அதிருப்தியும் மேலோங்கி இருந்தது.



மயோன்

## மயோன் உறுதி

எனினும் அந்த எம்.பி.பதவியை, புதிய கட்சி நிறுவும் முயற்சிகளுக்கு பயன்படுத்துவேனே ஒழிய, அப்பதவிக்காக புதிய கட்சியைக் கைவிடமாட்டேன் – அதிலிருந்து ஒதுங்கவும் மாட்டேன் என மயோன் முஸ்தபா மிகத்தெளிவாக – உறுதியாகக் கூறிவருகின்றார்.

'உம்மா' கட்சியின் மூலம் முஸ்லிம் தலைவர்கள் மற்றும் அரசியல்வாதிகள் அனைவரையும் ஒன்றிணைத்து முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்ளவே தான் முயற்சித்து வருகிறார் எனவும், அதற்கு இந்த எம்.பி.பதவி தடையாக இருக்குமாயின் அதனைத் தூக்கியெறியத் தயார் எனவும் மயோன் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு ஐ.தே.க. உயர் மட்டத்தில் ஆராயப்பட்டு வருவதாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. ஐ.தே. கட்சியில் எம்.பியாக இருந்து கொண்டே மயோன் புதிய கட்சி ஒன்றை நிறுவியிருப்பதுடன் – தற்போது அவரே அதனை மறைமுகமாக வழிநடத்தி வருகிறார் என ஐ.தே.க. சிரேஷ்ட உறுப்பினர்களும், முஸ்லிம் பிரமுகர்களும் குற்றஞ்சாட்டியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆகையினால் அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்வதன் மூலம் அவரைக் கட்சியிலிருந்தும், எம்.பி.பதவியிலிருந்தும் விலக்க வேண்டும் என கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை அவர்கள் வற்புறுத்தி வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

எனினும் மயோன் முஸ்தபா மீது ஐ.தே.க. எடுக்கும் ஒழுங்காற்று நடவடிக்கை சட்ட ரீதியாக கட்சிக்கு சாதகமான முடிவைக் கொடுக்காது. ஏனெனில் அவர் ஐ.தே.க எம்.பியாக இருந்து கொண்டு, அக்கட்சிக்கு துரோகமிழைக்கும் வகையிலோ, கட்சிக்கெதிரான நடவடிக்கையிலோ பகிரங்கமாக – வெளிப்படையாக ஈடுபடவில்லை. அதற்காகவே அவர் 'உம்மா' கட்சியின் பிரகடன வைபவத்திலும், செய்தியாளர் மாநாடுகளிலும் அவர் பகிரங்கமாகத் தோன்றவில்லை.

இந்நிலையில் மயோன் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு ஐ.தே.க.வுக்கு சான்று ஆதாரங்கள் எதுவும் கிடையாது. முஸ்லிம் தலைமைகளை ஒன்றிணைக்கும் 'உம்மா' கட்சியின் முயற்சிகளுக்கே தான் ஆதரவு வழங்கி வருகிறேன் என அவர் கூறியும் வருகிறார். அதனால் 'உம்மா' கட்சியுடன் வைத்துள்ள உறவு குறித்து ஐ.தே.க.மட்டத்தில் வரவிருக்கின்ற குற்றச்சாட்டுக்கான வழியையும் அவர் மூடிவிட்டார்.

இதனை விட மயோன் முஸ்தபா மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க இப்போதைக்கு முன்வரமாட்டார். அது ரணிலின் எதிர்காலம் குறித்ததான ராஜதந்திரமாகும்.

2006 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. வேட்பாளராகப் போட்டியிடவுள்ள ரணில் விக்கிரமசிங்க, கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கு மயோன் முஸ்தபாவின் பங்களிப்பு மிக அவசியம் எனக் கருதுகிறார்.

இக்காரணத்தை முன்னிட்டு ஐ.தே.க. சிரேஷ்ட உறுப்பினர்கள், மயோன் விடயத்தில் எவ்வளவுதான் கூச்சலிட்டு – போர்க்கொடி தூக்கினாலும் ரணில் அவற்றைக் காதில்போட்டுக் கொள்ளமாட்டார் என்பது உறுதி.

இருப்பினும் மயோன் முஸ்தபாவுக்கு எதிராக ஐ.தே.க. ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முற்பட்டால், அவர் தானாகவே முன்வந்து எம்.பி.பதவியை ராஜினாமாச் செய்வார் என எதிர்ப்பார்க்கலாம். அதுவே அவருக்கும், 'உம்மா' கட்சிக்கும் சிறப்பான எதிர்காலத்தைக் கொடுக்கும்.

முஸ்லிம்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக முஸ்லிம் காங்கிரஸுக்கு நிகரான மற்றும் அரசியல் சக்தி ஒன்று அவசியம் எனக் கூறியே மயோன் முஸ்தபா, புதிய கட்சிக்கான அத்திவாரத்தையிட்டார். அதனை முழுமையாக நிர்மாணிக்கும் பொறுப்பும் அவரையே சார்ந்திருக்கிறது.

-அஸ்லம் எஸ்.மௌலானா-

# கடத்தல்......

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேரம் படிந்தது. சில நாட்களிலேயே ஹபீஸ் விடுவிக்கப்பட்டார். கடத்தியவர்களின் கோரிக்கைகளில் ஒன்று கூட நிறைவேற்றப்படாமலேயே பாகிஸ்தானில் செய்தியாளர்களைச் சந்தித்த ஹபீஸ், "நான் பிடிபட்டிருந்த நேரத்தில் 3 பேர் கொல்லப்பட்டார்கள். அவர்களில் இரண்டு பேர் ஆங்கிலம் மட்டுமே தெரிந்தவர்கள்" – என்றார். இப்படிக் கொல்லப்பட்டோர் யார் என்றே தெரியாது. இப்படி வெளியே தெரியவராமலேயே பலர் மடிந்து கொண்டிருக்கிறார்கள்.

அண்மையில் கைதான இந்திய சாரதிகளை மீட்பதற்கு தான் 5 கோடி ரூபாயைத் தீவிரவாதிகளுக்குக் கொட்டிக் கொடுத்ததாக அவர்கள் பணியாற்றிய குவைத் நிறுவனம் தெரிவித்துள்ளது. தவிர இந்திய அரசும் மறைமுகமாகப் பணம் வழங்கி இருக்கலாம் என்று கூட நம்பப்படுகின்றது.

பெரும் லாபம் கொழிக்கும் தொழில் என்பதால் கண்ணில்படும் வெளிநாட்டவர்கள் எல்லோரையும் கடத்திக் கொண்டிருக்கிறார்கள். பேரம் படியவில்லை எனில் கடத்தப்பட்டவர்கள் கொள்கையின் பேரால் கொல்லப்படுகிறார்கள்.

இதனைக் கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாத கையாலாகத்தனத்துடன் பார்த்துக் கொண்டிருக்கிறது, பக்தாத்தில் அமெரிக்கா அமைத்த பொம்மை அரசு. இந்த அவலங்களைக் கட்டுப்படுத்த ஒரே வழி அமெரிக்கா ஈராக்கை விட்டு வெளியேறுவதுதான் என்கிறார்கள். ஆனால், 2006 வரைக்கும் அமெரிக்காவுக்கு அப்படியொரு [illegible]

பலரது பாராட்டையும் பெற்ற
மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவ து போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

கொழும்பில்...
செப்டெம்பர் 22 - 27 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205

கல்முனையில்..
ஒக்டோபர் 02 - 03
திகதிகளில் சந்திக்கலாம்
T.M.M. பாமசி கல்முனை
Tel No. 067 2229329
Hot Line: 0777 569205

வவுனியாவில்...
ஒக்டோபர் 10 - 11 ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

யாழ்ப்பாணத்தில்...
ஒக்டோபர் 12 - 16
A.S.N. சுற்றுலா விடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399
பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளுங்கள்

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி

ஒக்டோபர் 03 – 09, 2004

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401—6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com

## ஜனாதிபதிக்கு துணிச்சல் வேண்டும்

சமாதான முயற்சிகளை எப்படி முன்னெடுப்பது என்று தெரியாது அல்லாடிக் கொண்டிருக்கும் ஜனாதிபதி இறுதியாக இரு விடயங்கள் குறித்து அறிவித்திருந்தார்.

ஒன்று, புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளுக்குப் பதிலாக அரசும் யோசனைகளைத் தெரிவிக்கும் என்றார். அரசின் யோசனைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன என்றும் கூறினார்.

''அப்படி என்ன யோசனை? நாமும் அரசில் அங்கம் வகிக்கிறோம். எங்களுக்குத் தெரியாமல் ஒரு யோசனையா?'' என்றனர் ஜே.வி.பியினர்.

பின்பு அதுபற்றி கதையே இல்லை.

அதன் பின்பு ஜனாதிபதி, சமாதானத் தீர்வு தொடர்பாக சகல கட்சிகளுடனும் கலந்தாலோசிக்க தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் அமைக்கப்படும் என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் அதனை நிராகரித்துவிடவே அதுவும் அடிபட்டுப் போன மாதிரித்தான். தற்பொழுது அரசிடம் எந்தவித திட்டமும் இல்லை.

இந்த நிலையில் புலிகளுக்கு எதிராக வெளிநாடுகளில் பிரசாரங்களை ஆரம்பித்துள்ளார் ஜனாதிபதி. வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரும் இதற்கு துணை போய் வருகிறார்.

''புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசு தயாராக இருக்கிறது. புலிகள் வருகிறார்கள் இல்லை. போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறி புலிகள் கொலைகள் புரிகின்றனர்'' என்று ஜனாதிபதியும் கதிர்காமரும் பிரசாரம் செய்து வருகின்றனர்.

ஆனால், உண்மை நிலை என்ன?

தென்னிலங்கை இனவாதிகளின் அச்சுறுத்தல்களுக்கு அரசு அஞ்சுகிறது. சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முடியாத நிலையில் ஜனாதிபதி தடுமாறுகிறார்.

ஜனாதிபதி தமிழ்தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களைச் சந்தித்த போது, புலிகளின் தன்னாட்சி அதிகார சபை யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்களை நடத்தத் தயார் என்று கூறிவிட்டு பின்னர் அதனை மறுத்தது இனவாதிகளின் நெருக்குதல்களால்தான்.

ஜனாதிபதியின் தந்தையார் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா 1956 ஆம் ஆண்டு பதவிக்கு வந்தது இனவாதிகளின் ஆதரவுடன்தான். கடைசியில் இனவாதிகளின் நெருக்குதல்களால் அவர் ஆட்சி நடத்த முடியாத கட்டம் ஏற்பட்டது. இனவாதிகள் தான் அவருக்கு முடிவை ஏற்படுத்தினர்.

தற்பொழுது அவரது மகளான ஜனாதிபதியும் இனவாதிகளின் உதவியுடன் ஆட்சியைக் கைப்பற்றி விட்டு தற்பொழுது பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றார்.

ஜே.வி.பியினரும், ஜாதிக ஹெல உறுமயவினரும் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு தொடர்ந்து முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றனர். ஜே.வி.பியின் துரும்பு அதன் வசம் உள்ள 39 உறுப்பினர்கள் தான். ஆட்சியின் நாணயக் கயிறு ஜே.வி.பியிடமே இருக்கிறது.

புலிகளின் தன்னாட்சி அதிகார சபைக் குறித்து ஜே.வி.பி இன்னும் சிறிதளவாவது விட்டுக் கொடுக்கும் நிலையில் இல்லை.

ஜே.வி.பியின் அமைப்பான தேசிய ஹித் தேசிய அமைப்பு சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக கடுமையான போக்கைக் கடைப்பிடித்து வருகின்றது.

இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைகளின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தால் அரசைக் கவிழ்த்து விடப் போவதாக அது எச்சரித்துள்ளது.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி செய்வதறியாது வெளி நாடுகளில் புலிகளுக்கு எதிராக பொய்ப்பிரசாரங்களை ஆரம்பித்துள்ளார். உள்நாட்டில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு அவருக்கு துணிவு இல்லை. அதனை மூடி மறைக்க வெளிநாட்டில் பிரசாரம் செய்து வருகிறார்.

இத்தகைய போக்கு, நிலைமையை மோசமாக்குமே தவிர முட்டுக்கட்டையை தளர்த்த உதவாது.

இனப்பிரச்சினை விவகாரத்தில் கடந்த காலங்களில் ஆளும் கட்சியும் பிரதான எதிர்க்கட்சியும் ஒன்றுக் கொன்று முரணான கொள்கைகளையே கடைப்பிடித்து வந்தன. முதல் தடவையாக தற்பொழுது இதில் மாற்றம் தெரிகிறது.

தன்னாட்சி அதிகார சபை தொடர்பான பேச்சுக்களை அரசு ஆரம்பித்தால் அதற்கு தாம் ஆதரவு வழங்கத்தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் கூறுகிறார்.

ஆகவே, ஜனாதிபதி இனவாதிகளான ஜே.வி.பியினரின் அச்சுறுத்தல்களைப் புறம் தள்ளிவிட்டு துணிச்சலுடன் செயலில் இறங்க வேண்டும்.

## ஜெனீவாவில் அரசியல் ஆலோசனை

# சமாதான முயற்சிகளின் அடுத்தகட்ட நகர்வுக்கு விடுதலைப் புலிகள் தயார்!

தமிழீழவிடுதலைப்புலிகளுக்கும்இலங்கை அரசுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டு 17 மாதங்கள் கழிந்து விட்டன.

பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கான எந்தவித அறிகுறியும் இல்லை. அரசாங்கத்தின் போக்கில் புலிகள் நம்பிக்கை இழந்துவிட்டனர். ''உண்மையான, நேர்மையான சமாதான முயற்சிகள் தொடருமானால் நாம் எவ்வளவு காலமும் காத்திருக்கத் தயார். ஆனால், நிலைமை அப்படி இல்லை.'' என்கின்றனர் புலிகள்.

இத்தகைய நிலையிலேயே சுவிட்சர்லாந்தின் தலைநகர் ஜெனீவாவில் புலிகளின் அரசியல் குழுவின் உயர்மட்டக் கூட்டம் நடைபெறுகிறது.

ஜெனீவா கூட்டத்தில் சமாதான முயற்சியின் தற்போதைய நிலை குறித்து சட்ட ஆலோசகர்களுடன் விரிவாக விவாதிக்கப்படும். கூட்டத்தின் பரிந்துரைகளும் சிபார்சுகளும் லண்டனில் உள்ள புலிகளின் தலைமைக்குத் தெரிவிக்கப்படும். அடுத்து என்ன செய்வது என்ற தீர்மானத்தை புலிகளின் தலைமையே எடுக்கும்.

ஜெனீவா கூட்டத்தில் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் கலந்துகொண்டுள்ளனர்.

புலிகளின் காவல் துறைப் பொறுப்பாளர்பா.நடேசன், நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, மட்டு—அம்பாறைப் பொறுப்பாளர் கௌசல்யன், புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழின்பன்,புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த செல்வி, மகளிர் பிரிவுத் துணைப் பொறுப்பாளர் கீதா உட்பட 15பேர் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

ஜெனீவா கூட்டத்தில் சமாதானப் பேச்சுக்களில் தற்போதுள்ள தேக்க நிலை குறித்தும் அடுத்து மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்படும்.

இடைக்காலத் தீர்வாக புலிகளினால் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தன்னாட்சி அதிகாரசபை யோசனை குறித்து ஜெனீவாக் கூட்டத்தில் எந்தவித மாற்றமும் செய்யப்படமாட்டாது என்பது புலிகளினால் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனெனில், இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான யோசனைகள் புலிகளினால் மிகவும் காத்திரமான முறையில், உறுதியான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

வெளிநாடுகளில் பல சந்திப்புக்களை ஏற்பாடு செய்து புலிகளின் சட்ட நிபுணர்கள், சர்வதேச சட்ட நிபுணர்கள் இணைந்து இதனைத் தயாரித்திருந்தனர்.

இதனை புலிகளின் தலைமை ஏற்றுக் கொண்டு கடந்த பொதுத் தேர்தலில் மக்களின் ஆணையைப் பெற்றுக்கொண்டுவிட்டது.

ஆகவே, இதில் மாற்றம் செய்ய முடியாது என்பதே புலிகளின் நிலைப்பாடு

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை சம்பந்தமான தமது யோசனைகளை புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்கான ஆலோசனை வரைவாகவே முன் வைத்துள்ளனர். பேச்சுவார்த்தைகளின் போது அரசு அது குறித்து விவாதிக்க முடியும்.

சமாதானப் பேச்சுக்களை இழுத்தடிக்கும் அரசின் மற்றொரு சதித்திட்டம் தான் தேசிய ஆலோசனைக் கவுன்ஸில்.

ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதனை நிராகரித்துவிட்டன. இதனை அடுத்து அரசின் திட்டம் பிசுபிசுத்து விட்டது.



சமாதான முயற்சிகள் குறித்து ஆலோசனை நடத்துவதற்காக கட்சித் தலைவர்கள், புத்திஜீவிகள் மற்றும் மதத் தலைவர்கள் கொண்ட கவுன்ஸிலை அமைக்கவும் இதன் அங்குரார்ப்பணக் கூட்டத்தை இம் மாதம் நான்காம் திகதி நடத்துவதற்கும் ஜனாதிபதி திட்டமிட்டிருந்தார்.

ஐ.தே.க விடம் இருந்து ஆறு பேரின் பெயர்கள் இதற்காகக் கோரப்பட்டன. ஐ.தே.க ஆட்சிக்காலத்தில் புலிகளுடன் ஆறு சுற்றுச் சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொண்ட ஜி.எல் பீரிஸ் போன்ற சிரேஷ்ட உறுப்பினர்களை ஐ.தே.க தெரிவு செய்து அனுப்பும் என்று ஜனாதிபதி எதிர்பார்த்தார். ஆனால், ஐ.தே.க தலைவர் ரணில் தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் யோசனையை நிராகரித்து விட்டார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்துவிட்டது. ஆகவே, ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அங்கம் வகிக்காத இந்த ஆலோசனை கவுன்ஸில் அர்த்தமற்றதாகிவிட்டது.

''இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகளின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பியுங்கள். நாங்கள் ஆதரவு தருகிறோம்'' என்று ரணில் அறிவித்துவிட்டார். இதனால் ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலை குறித்து ஆராய்வதற்காக அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் கூட்டத்தை ஜனாதிபதி 4ஆம் திகதி கூட்டுகிறார்.

சகல கட்சிகளும் அங்கம் வகிக்கும்தேசிய ஆலோசனைக் கவுன்ஸிலை அமைத்தால் முஸ்லிம்களின் தனித்தரப்புக் கோரிக்கையைச் சமாளிக்கலாம். புலிகளுடனான பேச்சுக்கள் தோல்வி அடைந்தால் பொறுப்பை சகல கட்சிகள் மீதும் சுமத்திவிடலாம் என்ற கபட எண்ணமே ஜனாதிபதியின் திட்டத்தின் பின்னணியில் இருக்கிறது.

அரசின் புறம்பான தீர்வு யோசனை, தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் என்றெல்லாம் அரசு காலத்தைக் கடத்துவது சமாதான முயற்சிகளைப் பின் தள்ளவே.

ஜனாதிபதிக்கு தற்பொழுது உள்ள ஒரே பிரச்சினை அரசைக் கவிழ்த்து விடாது பாதுக் காப்பதும், தனது பதவிக் காலத்தை நீடிப்பதுமே.

சமீபத்தில் ஜனாதிபதி அமெரிக்காவுக்கும், பிரிட்டனுக்கும் சென்று திரும்பிய பின்பு அவரின் போக்கு இறுக்கமடைந்து வருவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஐ.நா. பொதுச்சபையில் உரையாற்றுவதற்காக ஜனாதிபதி சமீபத்தில் அமெரிக்கா சென்றிருந்தார். நாடு திரும்பும் வழியில் அவர் பிரிட்டன் சென்றிருந்தார்.

புலிகளுடன் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு விட்டுக்கொடுப்புகளுடன் தாம் தயாராக இருப்பதாகவும், புலிகள் தமது பிடிவாதப் போக்கில் இருந்து இறங்கி வர மறுக்கிறார்கள் என்றும் ஜனாதிபதி வெளிநாடுகளில் பிரசாரம் செய்தார்.

புலிகளைப் பொறுத்தவரை அரசு தாராளப் போக்கைக் கடைப்பிடித்து வருகிறது, புலிகள் தான் இவற்றை எல்லாம் குழப்புகின்றனர் என்பது போன்ற தோற்றத்தை வெளிநாடுகளில் ஏற்படுத்த ஜனாதிபதி முயற்சி செய்து வருகிறார்.

தீவிரவாதத்துக்கு பலாத்கார ரீதியில் பதில் கொடுக்க விரும்பாத அஹிம்சைவாதி என்று ஜனாதிபதி தம்மைக் காட்டிக் கொள்ள முயற்சிக்கிறார்.

சமாதான முயற்சிகள் தோல்வி அடைந்து மீண்டும் யுத்தம் மூண்டால் அதற்கு தாமோ, அரசோ காரணம் அல்ல என்பதை இதன் மூலம் வெளிநாடுகளை நம்ப வைக்க முடியும் என்பது ஜனாதிபதியின் நம்பிக்கை.

தற்பொழுது சுவிட்சலாந்து சென்றுள்ள தமிழ்ச் செல்வன் தலைமையிலான குழுவினர், மேலும் மூன்று, நான்கு நாடுகளுக்குச் செல்ல உள்ளனர்.

இவர்கள் ஜனாதிபதியின் பொய்ப்பிரசாரத்தை முறியடித்துச் சர்வதேச சமூகத்துக்கு உண்மை நிலையை உணர்த்த இருக்கின்றனர். சர்வதேச சமூகத்துக்கு உண்மை நிலை தெரிந்தால் தான் அவற்றின் நேர்மையான பங்களிப்பை சமாதான முயற்சிகளுக்குப் பெற முடியும்.

-சஞ்சாரன்-

# கனடாவில் பொங்கிய தமிழ் உணர்வு

தமிழர்கள் தங்கள் தாயக பூமியில் தன்னாட்சி அதிகாரத்துடன் உரிமைகளைப் பெற்றுவாழ ஆதங்கப்படுகின்றனர்என்பதை கனடாவில் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வுகள் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

இந்தப் பொங்கு தமிழ் நிகழ்வை கனேடிய தமிழ் மாணவர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. இதனைத் தடுத்து நிறுத்தும் சிங்கள இன அமைப்புகளின் முயற்சி வெற்றி அளிக்கவில்லை.

பொங்கு தமிழ் நிகழ்வில் 75ஆயிரம் மக்கள் வரை திரண்டு வந்து தமிழ்த் தேசியத்துக்கும்,சமாதானப் பேச்சுக்கும் ஆதரவாக கோஷம் எழுப்பினர். இது இலங்கையில் தடைப்பட்டுப் போயுள்ள சமாதானப் பேச்சு தொடர்பாக மீண்டும் ஒரு சர்வதேசப் பார்வையையும், கவனத்தையும் ஈர்த்துள்ளது என்றே கூற வேண்டும்.

தமிழ்த்தேசியத் தலைவர் பிரபாகரனின் உருவப்படத்தைத் தாங்கிய வண்ணம் பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்து கொண்டு மக்கள் தமிழ்த்தேசியத்தை வலியுறுத்தியிருந்தனர்.

இந்நிகழ்வில் பின்வரும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

* சமாதானத் தீர்வு தொடர்பாக விடுதலைப்புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை அடிப்படையில் இலங்கை அரசு எந்தவிதமான நிபந்தனையும் இன்றிப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

*இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையில் சமாதானப் பேச்சை முன்னெடுக்க இலங்கை அரசுக்கு கனேடிய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

*இலங்கையின் சமாதான முயற்சிக்கு கனடா அரசு தனது ஆதரவை வழங்கத் தயாராயுள்ளது என்பதை வெளிப்படுத்துமுகமாக அரசாங்கத்துக்கும்-புலிகளுக்குமிடையிலான பேச்சைக் கனடாவில் நடத்த கனடா அரசு முன்வர வேண்டும்.

*சிங்கள அரசினால் புறக்கணிக்கப்பட்ட தமிழர்களின் அபிலாஷைகளையும், எதிர்பார்ப்புக்களையும் சர்வதேச சமூகம் புரிந்து கொண்டு சமாதானப் பேச்சுத் தொடர ஊக்கம் கொடுக்க வேண்டும்.

பொங்குதமிழ் நிகழ்வு தொடர்பாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கையில்,தமிழர்களின் அரசியல் பலத்தை உலகுக்கு உணர்த்திய நிகழ்வே இதுவாகும் என்கின்றனர்.

வயது முதிர்ந்த பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்து கொண்ட மக்கள் திரளினால் கனடா நகரின் வழமையான பொதுப் போக்குவரத்துகள் ஸ்தம்பிதமடைந்தன. கனடா நாடாளுமன்றத்தைச் சுற்றியுள்ள வீதிகள், பின்புறமாக அமைந்திருந்த மைதானம், பல்கலைக்கழக வளாகம் என்பவற்றிலும் மக்கள் திரண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் புதிய ஜனநாயக கட்சித் தலைவரும்,கனேடிய நாடாளுமன்ற உறுப்பினருமான ஜக்லேடன், ரொறன்ரோவில் பிறந்த அரசியல் வாதியுமான மிகல்ல பெரு ஆகியோரும்கலந்துகொண்டு உரையாற்றினர்.

கனேடியத் தமிழ் மாணவர் ஒன்றிய உறுப்பினர்கள் மஞ்சள் நிற ரீசேட் களை அணிந்து நிகழ்வை ஒழுங்குபடுத்தினர்.

இதில் மாணவர்களின் உணர்ச்சிகரமான எழுச்சிப் பாடல்களும் பாடப்பட்டன.

-பாபு-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பி.ஜே.பிக்குள் பதவிப் போட்டி

பாரதீய ஜனதாக்கட்சி இந்த முறையும் லோக்சபாத் தேர்தலில் வென்று இன்னும் 5 ஆண்டு காலம் பதவிவகிக்கலாம் என்று நம்பி இருந்தது.

ஆனால், எதிர்பாராத விதமாக தேர்தலில் ஆட்சியிலிருந்து தூக்கி எறியப்பட்ட நிலையில் கட்சிக்குள் தலைமைத்துவப் போட்டி தொடங்கியிருக்கிறது. அதுவும்


அத்வானி

வாஜ்பாய் — அத்வானி ஆகிய இரு முதுபெரும் தலைவர்களிடையேயான போட்டி அல்ல; இரண்டாவது தலைமுறைத் தலைவர்களிடையில் தான் போட்டி உண்டாகியிருக்கிறது என்பது சுவாரஸ்யமான விடயம்.

அதுவும் இளைய பெண்தளபதிகள் இருவரிடையேதான் போட்டி. முன்னாள் அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் மற்றும் உமாபாரதி ஆகியோரே அந்த இருவரும்.

இந்தப் போட்டியின் அடிப்படை இதுதான். அதாவது வாஜ்பாய், அத்வானி இருவருக்கும் வயதாகிறது. பதவியில் இப்போதிருக்கும் காங்கிரஸ் கூட்டணி 5 ஆண்டு முழுபதவிக்காலமும் ஆட்சியில் நீடிக்கலாம் என்ற பயப் பிராந்தி பி.ஜே.பி தலைவர்களிடையே தோன்றி இருக்கிறது. காரணம் காங்கிரஸ் கட்சி அதன் தோழமைக் கட்சிகள் இழுக்கும் இழுப்புக்கெல்லாம் வளைந்து கொடுத்து நடப்பதுதான்.

கடந்த காலங்களில் காங்கிரஸ் கட்சி இறுமாப்புக் கொண்டு மற்றக் கட்சிகளை மதியாமல் நடந்து வந்தது. இன்றிருக்கும் காங்கிரஸோ முற்றிலும் மாறிவிட்டது. தேவகவுடா, குஜ்ரால், சந்திரசேகர் என பல பிரதமர்களைக் கவிழ்த்த காங்கிரஸ் இப்போது அந்தக்கர்வத்திலிருந்து மாறிப் பாடம் படித்துக் கொண்டுவிட்டதாகத் தெரிகிறது.

பொருளாதார விஷயங்களில் மன்மோகன் சிங்கினதும், சிதம்பரத்தினதும்தாராளவாதப்போக்கை இடதுசாரிகள் கடுமையாக விமர்சித்துள்ளனர். உடனடியாக காங்கிரஸ், 'இடதுசாரி கட்சிகளின் கவலையைப் புரிந்து கொள்கிறோம், அவர்களது தேசபக்தி மீது துளியும் சந்தேகமில்லை' என இடதுசாரிகளின் புகழைப்பாடி அவர்களை சமாளிக்கப்பார்க்கிறது.

இதற்கிடையில் தி.மு.க. — ம.தி.மு.க. கேட்பதை எல்லாம் காங்கிரஸ் கொடுக்கிறது. போகிற போக்கில் 5 வருடம் ஆட்சி நடக்கலாம் எனத் தோன்றுகிறது. இது தான் பி.ஜே.பி தலைவர்களின் கவலைக்குக் காரணம். ஏனென்றால் 5 வருடம் ஆட்சி நடந்தால் இன்னொரு முறை வாஜ்பாய் பிரதமராகும் வாய்ப்பு அறவே கிடையாது. அத்வானி கூட வாஜ்பாய்க்கு இரண்டு வயதுதான் இளையவர். எனவே அவருக்கும் கூட வாய்ப்புக் கிடையாது போகலாம்.


இதனால், இரண்டாம் நிலைத் தலைவர்கள் தம்மை பிரதமர் பதவிக்கு தயார்ப்படுத்த முனைவது போல் தெரிகிறது. முரளி மனோஹர் ஜோஷி, ஜஷ்வந்சிங் இவர்களும் வயதானவர்களே; மற்றும் வாஜ்பாய், அத்வானி அளவு இவர்கள்மக்கள் செல்வாக்குள்ளவர்களும் அல்லர்.

ஆக, சுஷ்மா, உமாபாரதி போன்ற வசீகரமுள்ள பெண் தலைவர்கள் கட்சியின் அடுத்த தலைமுறைத் தலைமைக்குப் போட்டியிடும் நிலை இப்போது தோன்றியுள்ளது. இந்தப் பெண் தலைவர்களை கட்சியும் அவ்வப்போது மக்கள் முன்னிறுத்திக் காட்டியுமுள்ளது. உதாரணமாக சுஷ்மா ஸ்வராஜ் 1992 இல் முதன் முதலில் சோனியா தேர்தலில் போட்டியிட்ட போது, அவரை எதிர்த்துக் கர்நாடகாவின் பெல்லாரியில் தேர்தலில் நின்று தோற்றவர். ஏதோ சுஷ்மா சோனியாவை தோற்கடிக்கக்கூடியவர் என்பது போலகடைசிநேரம்வரை சோனியா தனது தொகுதியை அறிவிக்கும் வரை காத்திருந்து ஹெலிக் கொப்டரில் டில்லியிலிருந்து சுஷ்மா அழைத்து வரப்பட்டு பெல்லாரியில் போட்டியிட மனுதாக்கல் செய்தார்.

கடந்த ஏப்ரல் லோக்சபாத் தேர்தலில்காங்கிரஸ்வென்று சோனியா பிரதமராக வரும் நிலை ஏற்பட்ட போது அந்நியநாட்டவரான சோனியா பிரதமரானால், மொட்டை அடித்து தரையில் படுத்துறங்குவேன்' என சுஷ்மாவும், உமாபாரதியும் போட்டி போட்டுக் கொண்டு அறிவித்தனர்.

உமாபாரதியே அயோத்தி மசூதியை தனது கையால் உடைத்தவர். அதற்காக கிரிமினல் குற்றஞ்சாட்டப்பட்டு இருந்தவர். கடந்த மாதம் கர்நாடகா நீதிமன்று ஒன்றால் வன்முறையைத் தூண்டும் வகையில் 1994 இல் பேசியதற்காகச் சிறையிடப்பட்டார். எனினும், மாநில அரசு வழக்கை வாபஸ் பெற்றதால் விடுவிக்கப்பட்டார்.

சிறையிடப்படும் போது அவர் மத்திய பிரதேச மாநில முதல்வர் பதவியைத் துறக்க நேரிட்டது. அவருக்குப்பதிலாக முதல்வராக நிய


உமாபாரதி

மிக்கப்பட்ட பாபுலால் கோர் இப்போது உமாபாரதி விடுதலையான பின்பு அவருக்கு முதல்வர் பதவியை மீண்டும் தர விரும்பவில்லை. இதனால் கட்சித் தலைவர் வெங்கையா நாயுடுமீது உமாபாரதியின் ஆதரவாளர்கள் ஆத்திரம் கொண்டுள்ளனர்.

சிறையிலிருந்து விடுதலையான பின்பு தம்மை காங்கிரஸ் அரசு அநியாயமாகச் சிறையிட்டதாக உமாபாரதி பேசினார். 1994 இல் தேசியக் கொடியை ஏற்றவே தாம் ஊர்வலமாகச் சென்று ஊரடங்குச் சட்டநேரம் கூட்டம் நடத்தியதாகவும் கூறினார். தேசியக் கொடியை ஏற்ற காங்கிரஸ் தடை செய்கிறது என்று கூறி 15 நாள் யாத்திரை ஒன்று கர்நாடகாவிலிருந்து பஞ்சாப் வரை நடத்தித் தனது மக்கள் செல்வாக்கைக் காட்ட முனைந்தார். கணிசமான பி.ஜே.பி. ஆதரவாளர்கள் அவரது யாத்திரையில் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

எனினும், அவரது யாத்திரை குறித்து வெங்கையா நாயுடு உள்ளிட்ட பி.ஜே.பி தலைவர்கள் அக்கறை காட்டவில்லை. அவரை மீண்டும் மத்திய பிரதேச முதல்வராக்கவும் இப்போதைக்கு இணங்கவில்லை.

1989 இல் அத்வானி அயோத்திக்கு ரத யாத்திரை நடத்தி வெற்றி கண்டதுபோல் உமாபாரதியால் வெற்றி பெற முடியவில்லை. இது அவருக்கு ஆத்திரமூட்ட, அரசியலைத் துறந்து சந்நியாசம் போகப் போவதாக உமாபாரதி கூறியுள்ளார்.

இதற்கு மற்றொரு காரணமும் உண்டு. உமாபாரதியின் யாத்திரை நடந்த நேரம் மற்றொரு சத்தியாக்


ஜெயலலிதா

கிரகத்தை அதற்குப் போட்டியாக சுஷ்மா ஸ்வராஜ் நடத்தினார்.

ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தவரான சவர்க்காரை காங்கிரஸ் அவமரியாதை செய்ததாகவும், சவர்க்காரின் சுதந்திரப் போராட்ட பங்களிப்பை குறைத்துப் பேசுவதாகவும் சுஷ்மா குற்றஞ்சாட்டி அந்தமான் தீவில் சத்தியாக்கிரகம் நடத்தினார். வெங்கையா நாயுடு அதில் பங்கேற்றது உமாபாரதியின் கோபத்தை இரட்டிப்பாக்கியுள்ளது. இப்போது வாஜ்பாய், அத்வானி உள்ளிட்ட தலைவர்கள் நாயுடு — உமாபாரதி முறுகலில் தலையிட்டுச் சமரசம் செய்து வைத்துள்ளனர் என்று தெரிகிறது.

எவ்வாறாயினும் பி.ஜே.பியின் அடுத்த தலைமுறை தலைமைத்துவத்துக்கான போட்டி தொடங்கி விட்டது என்பதையே இந்நிகழ்வுகள் காட்டுகின்றன.

இது இப்படி இருக்க தி.மு.க. — காங்கிரஸ் உறவு உடையாதா என்ற கனவில் இருக்கும் தமிழக முதல்வர் ஜெயலலிதா, தமிழக காங்கிரஸுக்குள் இருக்கும் தனது நண்பர்களைக் கொண்டு தி.மு.கவை சாதுவாக விமர்சனம் செய்ய அது கேட்டு தி.மு.க. சீறிச்சினந்து சோனியா காந்தியிடம் முறையிட்டுள்ளது. கருணாநிதி மீது அளவற்ற நட்பும், மதிப்பும் கொண்டுள்ள சோனியாவோ, மாநில காங்கிரஸ் தலைவர் வாசனை அழைத்து தி.மு.கவை எதிர்த்து தமிழக காங்கிரஸார் எவரும் மூச்சுக்கூடக் காட்டக்கூடாது என எச்சரித்து அனுப்பியுள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியில் உள்ள ஆயிரக்கணக்கான கோஷ்டிகளை நாடே அறியும். இந்தக் கோஷ்டிகளில் ஜெயலலிதா மீதுசபலமும், விசுவாசமும் கொண்ட கோஷ்டிகளும் நிறைய உண்டு.

முக்கியமாக முன்னாள் மத்திய அமைச்சரும் தற்போதைய சேலம் எம்.பியுமான கே.வி.தங்கபாலு உள்ளிட்ட கோஷ்டி சதாகாலமும் ஜெயலலிதா புகழ்பாடும் கோஷ்டியாகும். கடந்த தேர்தலில் இவர்கள் ஜெயலலிதாவை எதிர்த்து நின்றாலும் உள்ளூர அ.தி.மு.க விசுவாசமுள்ள காங்கிரஸ் கட்சியினரே ஆவர். இவர்களைத் தூண்டி விட்டு தி.மு.க. — காங்கிரஸ் உறவில் விரிசல் உண்டாக்க ஜெயலலிதா போட்ட திட்டம் சோனியாவால் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டுள்ளது.

தமிழக காங்கிரஸின் கோஷ்டிகள் என்ன தான் தி.மு.கவைத் தாக்க முனைந்தாலும் காங்கிரஸ் மேலிடம் உறுதியாக தி.மு.கவை ஆதரிக்கும் வரை தி.மு.க. — காங்கிரஸ் உறவை உடைக்க ஜெயலலிதாவால் இயலாது என்பதே உண்மை.

-எஸ். சுரேந்திரஜித்-

வருகிறார்

# மிஸ்டர் வேதாளம்



துடிப்புள்ள, கெட்டிக்காரத்தனமாக, உண்மையான செய்திகளை ஓடி..... ஓடி..... பறந்து.... பறந்து சேகரித்து உடனுக்குடன் தரக்கூடிய செய்திச் சேகரிப்பாளர்கள் தேவை என்று நாமும் அடிக்கடி விளம்பரம் போட்டுக்கொண்டே இருக்கிறோம். ஆனால், எங்கே... எப்போதாவது... ஒன்று... இரண்டு தான் உருப்படியாகக் கிடைக்கிறது. மற்றதெல்லாம்.... 'இந்தியப் பிரதமர் யார்? — என்று கேட்டால் 'இந்திராகாந்தி' என்று சொல்கிற ரகங்கள்தான்.

இம்முறையும் விளம்பரம் ஒன்றைப் போட்டுப் பார்த்தோம். ஏகப்பட்ட பதில் கடிதங்கள் வந்திருந்தன. சரி... ஏதாவது தேறுகிறதா என்று பார்க்கக் கிளம்பினோம்.... கடிதக்கட்டின் இடையிலே இருந்த விண்ணப்பம் ஒன்று எமது கவனத்தை ஈர்த்தது.

பெயர்:— (முன்னைய பெயர்) ச.வடிவழகன்.

தற்போதைய பதவி:— வேதாளம்

முகவரி :— 191/2 இலக்க வேப்பமரம், கோட்டே வீதி (நாடாளுமன்றத்துக்கு அருகில்), கோட்டே.

தகுதி :— உயிரோடு இருக்கும் போது பி.ஏ.அரசியல் சிறப்பு பட்டம்.

சிறப்புத் தகுதி :— சொந்தமாக மோட்டார் சைக்கிளோ, வாகனங்களோ இல்லாத போதும்.. பறந்து... பறந்து செய்தி சேகரிக்க முடியும்.

அடடா.... வித்தியாசமாக இருக்கிறதே என்று தனியாக எடுத்து வைத்துக் கொண்டோம். இவருடன் தொடர்பு கொள்வது எப்படி என்று பார்த்தோம். அடியிலே குறிப்பு வடிவில் தொடர்பு கொள்ளும் வழி குறிப்பிடப்பட்டிருந்தது. தற்போது பிரபலமாக உள்ள ஒரு அரசியல்வாதியின் பெயரைக் குறிப்பிட்டு, அவரிடம் தகவல் கொடுத்தால் உடனடியாக எனக்குத் தகவல் கிடைக்கும், என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

உடனே அந்த அரசியல் வாதியுடன் தொடர்பு கொண்டு ''என்ன ஐயா, வேதாளத்துடன் எல்லாம் தொடர்பு வைத்திருக்கிறீர்களே!'' என்றோம். ''ஏகப்பட்ட வேதாளங்களுடன் எனக்குத் தொடர்பு இருக்கிறது. இதில் இது எதுவென்று தெரியவில்லையே!'' என்றார்...

பெயர்... விவரமெல்லாம் சொன்னபோது..... ''ஓஹோ.... அதுவா..?'' என்றார்.

''வேதாளங்களுடன் எப்படிச் சகவாசம்?'' என்று கேட்டோம்....

''அரசியல்வாதியாக இருந்தால் இந்த சகவாசம் எல்லாம் சர்வசாதாரணம்'' என்றார்.

அவரிடம் விஷயத்தை விளக்கி அந்த வேதாளத்தைக் கொஞ்சம் எங்கள் அலுவலகம் வரைக்கும் வந்து விட்டு போகச் சொல்லுங்களேன் என்றோம்.... தான் மிகவும் தூரமான இடத்திலே இருக்கிறார் எனவும், கூடுமானவரை விரைவில் தகவல் தருவார் எனவும் சொன்னார்.

அவரிடம் சொல்லி பத்து நிமிட நேரம் கூட இருக்காது.... விசுக்கென்று ஒரு சப்தம்.. எமக்கு முன்னால் விநோதமான உருவம் ஒன்று நின்றது. மேலே அழகான முகம், நீண்டகூந்தல், இரண்டு கைகள்.... நெஞ்சு..... வயிற்றுப் பகுதி என்று இறங்கி... கால்களுக்குப் பதிலாக உடல் சுருங்கி வால்போல் நீண்டு...... முதலில் பயந்துவிட்டோம்.

வந்து நின்று உருவம் "I am வேதாளம்.. From.. கோட்டே வேப்பமரம்'' என்று அறிமுகப்படுத்திய பின் அடடா.. நீங்கள் தான் அவரா. என்றபடி சுமூகநிலைக்கு வந்தோம்.

நாட்டின் எங்கோ மூலையிலே நிற்பதாகச் சொல்லிய அந்த அரசியல் வாதி... இவ்வளவு விரைவாக எப்படித் தகவல் தந்தார்? அந்த அரசியல்வாதி பாதாள உலகத்தலைவர்களுடன் மட்டுமல்ல வேதாளங்களுடனும் எவ்வளவு சிறப்பாக தொடர்புகளை வைத்திருக்கிறார் என்று ஆச்சரியப்பட்டுப் போனோம்.

முன்னே இருந்த கதிரையில் அமரச் சொன்னோம்.

''இல்லை இப்படியே மிதந்து கொண்டே இருப்பதுதான் வசதியானது'' என்றார்.

''சரி நேர்முகப்பரீட்சையைத் தொடங்கலாமா?'' என்று கேட்டோம்....

''ஓ..... தாராளமாக'' என்றார் வேதாளம்.

நாம் உடனே திருவிளையாடல் தருமியாக மாறி கேள்விகளைக் கேட்கத்தொடங்கினோம்.

''சேர்ந்தே இருப்பது?''

''புலனாய்வுப் பிரிவும் கருணா குழுவும்.''

''சேரா திருப்பது?''

''ஜே.வி.பியும், ஹெலஉறுமயவும்.''

''சேர்க்க முடியாதது ?''

''தமிழர் கூட்டமைப்பும், சந்திரிக்கா கட்சியும்.''

''சேர்ந்து கெடுப்பது?''

''அம்மாவின்கட்சியும், ஜே.வி.பியும்.''

''சேரக்கூடியது...?''

''மக்கள் ஐக்கிய முன்னணியும், தேசிய ஐக்கிய முன்னணியும்.''

''சேரக்கூடாதது?''

''ஈ.பி.டி.பியும், ஜே.வி.பியும்.''

''நம்பக்கூடாதது?''

''சமாதானப் பேச்சுக்காகத்தான் அரசுடன் இணைந்தோம் என்ற இ.தொ.காவின் பேச்சை.''

''நம்பக் கூடியது?''

''விரைவிலே தேர்தல் வரலாம் என்ற ஜோசியத்தை''

''ஏறிக்கொண்டே இருப்பது?''

''காஸின் விலை.''

''இறக்கிக் கொண்டே இருப்பது?''

''காசின் பெறுமதி.''

''வீரத்துக்கு?''

''பிரபாகரன்.''

''துரோகத்துக்கு ?''

''கருணா.''

''பாய்வதற்கு?''

''ஆறுமுகன் தொண்டமான்.''

''பறப்பதற்கு?''

''கதிர்காமர்.''

''அறிக்கை விடுவதற்கு?''

''ஆனந்தசங்கரி.''

''விதண்டாவாதத்துக்கு?''

''டக்ளஸ்''

''ஐயா வேதாளமே you are selected" என்று கையைக் கொடுத்தோம். சந்தோஷமாகக் கையைத் தந்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைப் பூரானுக்கே தீர்வு இல்லை

## சேது சமுத்திரத்திட்டத்தை தடுக்கவா முடியும்?

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களை உடனடியாகவும், தாமதித்தும், நேரடியாகவும், மறைமுகமாகவும் எதிர்மறையாக பாதிக்கக்கூடிய நெருக்கடிகளும், பிரச்சினைகளும் தீவிரமடைந்துவருகின்றன. மக்களின் சிவில் நிர்வாக விடயங்களைக்கவனிக்கின்ற நிர்வாகஇயந்திரத்தின் பணியாட்தொகுதியிடம் காணப்படும் பல்வேறுபட்ட குறைபாடுகளும், பொதுவான வளப்பற்றாக்குறைகளும், இந்த நெருக்கடிகளும், பிரச்சினைகளும் தீவிரமடைகின்றமைக்கான பிரதான காரணங்களாகும். சமூகவிழிப்புணர்வு மக்களிடம் போதியனவாக இல்லை என்பதும், மக்களை விழிப்படையச்செய்யும் திசையில் புலமையாளர்கள் செயற்படத் தவறுவதும் ஏனையகாரணங்களாகும்.

மேலும், துரதிர்ஷ்டகரமான நிலைமை என்னவெனில், யாழ்.குடாநாட்டிலுள்ள புலமையாளர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள்,நிபுணத்துவ ஆளணியினர் மிகமிகச் சொற்ப தொகையினராகும். இவ்வாறான சொற்பதொகையினராகவுள்ள இந்த மனிதவளம் குடாநாட்டு சிவில் நிர்வாக விடயங்களுடன்தொடர்புள்ள பணியாட் தொகுதியின் உயர் முகாமைத்துவத்துடன் ஒருங்கிணைந்து அறிவையும் ஆற்றலையும்அனுபவத்தையும்கொண்டும், கொடுத்தும் மக்களின் நலன்களை அடிப்படையாக வைத்துத்திட்டங்களைத் தீட்டுவதில்லை.

எங்கேனும்ஒருசிலசந்தர்ப்பங்களிலோ அல்லதுஓரிருதிட்டங்களுக்கோ யாரேனும் ஒரு பேராசிரியரும், ஒருமூத்த சிவில்அதிகாரியும் தொடர்புகளை ஏற்படுத்தியிருக்கக்கூடும். ஆனால், இவ்வாறானதொடர்புகளின்பலன் இடைநிலைமுகாமையையோ அடிநிலையிலுள்ள நிர்வாகிகளையோ சென்று அடைவதில்லை. சிவில் நிர்வாகிகளுக்கான மூளை வளத்தை மேலும்வலுப்படுத்திவழிகாட்ட வேண்டிய புலமையாளர்கள், கல்விமான்கள், புத்திஜீவி நிபுணர்கள், யாழ்.பல்கலைக்கழகத்துக்குள்ளும், அதற்கு வெளியேயும் ஒரு பத்துப் பதினைந்து பேராயினும்இருக்கின்றார்கள்.

### வெள்ளைப்பூரானிலிருந்து சேதுசமுத்திரம் வரை

வெள்ளைப்பூரான்கடிக்கும் விவகாரத்திலிருந்து சேது சமுத்திரத்தை ஆழப்படுத்தும் இந்திய அரசாங்கத்தின் திட்டம்வரை பலபலநெருக்கடிகள்யாழ்ப்பாணமக்களை பிணித்துப் பீடித்து நிற்கின்றன. மேலும், பொருத்தமான சுகாதார சேவை மக்களைச் சென்றடையாமை, ஒழுங்கமைக்கப்பட்ட வீதிப்போக்குவரத்து முறைமை இல்லாமை போன்ற பல பிரச்சினைகள் யாழ்ப்பாணத்தவரின் வாசலைத் தட்டுகின்றன.

வெள்ளைப்பூரான் கடியால் இடைக்கிடை இறப்புக்கள் நிகழ்கின்றன. யாழ்ப்பாணத்தில் மாரிமழை காலம் தொடங்கிவிட்டது. நுளம்புப் பெருக்கத்தால் பரவக்கூடிய மலேரியா, டெங்கு போன்ற நோய்களால் பீடிக்கப்படுவோர் தொகையும் அதிகரிக்கலாம். போர்நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்டு ஏ-9 வீதி திறக்கப்பட்டபின்னர் யாழ்ப்பாணப் போக்குவரத்து பன்மடங்கு அதிகரித்துவிட்டது. தினமும் வீதிவிபத்துக்கள் நிகழ்கின்றன. அதனால் சாவுகளும் நிகழ்கின்றன.

### அரசியல், புவியியல், சூழலியல் இடுக்கண்

வெள்ளைப்பூரான்கடி, நுளம்புப்பெருக்கம், வீதிவிபத்துக்கள் போன்ற நீண்டகால விவகாரங்கள் பற்றி எவ்விதமுயற்சிகளோ, தீர்வுகளோ முயற்சிக்கப்படவில்லை. உயிரியல், பொறியியல் சேவைத் துறையினருக்கு ஆய்வுகள், தீர்வுகளை முன்னெடுப்பதற்கான பௌதீக வளங்களுக்கும் யாழ் குடா நாட்டில் பற்றாக்குறை இருக்குமானால் எங்கள் நிர்வாகிகள், கல்விமான்கள், சமூக அக்கறையுடைய அரசியல்வாதிகள் கொழும்பின் உதவியையோ அன்றேல் உயிரியல், தொழில்நுட்ப சேவைத்துறையில் முன்னேற்றகரமான நிபுணத்துவ வளங்களையும், ஆய்வுக்களங்களையும் கொண்ட வெளிநாட்டவரின் உதவிகளையோ ஏன் நாடக்கூடாது?

நிலைமை இவ்வளவுதூரம் கேள்விக்கு உட்பட்டதாக இருக்கும்போது, யாழ். குடாநாட்டுக்கு அரசியல்,புவியியல், சூழலியல் சார்ந்த பல சவால்களையும், நெருக்கடிகளையும் ஏற்படுத்தப்போகும் சேது சமுத்திரத்தை ஆழப்படுத்தும் இந்திய அரசாங்கத்தின் திட்டம்பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி அது தொடர்பாக மக்கள் கருத்தை முன்னெடுக்கத் தூண்டுவதில்கூட பாரிய அளவிலானஎந்த முன்னெடுப்புக்களும் மேற்கொள்ளப்படவில்லை.

வெள்ளைப்பூரான் உயிர்குடிப்பது தொடர்கிறது போல, நுளம்புகள் இரத்தம் குடிப்பது தொடர்கிறது போல, வீதிகளில் யாழ்ப்பாணத்தவர் செத்துத்தொலைவது தொடர்கிறது போல, எங்கள் அரசியல் புவியியல் சமநிலைக்கும், சூழலியல் பேணுகைக்கும் ஆபத்துக்களையும் நெருக்கடிகளையும் ஏற்படுத்தப்போகும் சேது சமுத்திரத்திட்டத்தைப்பற்றி யாழ்ப்பாணத்துப் புவியியலாளர்களும், ஏனைய துறைசார் புலமையாளர்களும் மௌனித்து இருப்பதும், மக்களை விழிக்கத்தூண்டாமல் இருப்பதும் மாபெரும் பழிச்சுமையைத் தூக்கும் நிலைக்கு எல்லோரையும் இட்டுச்சென்றுவிடும்.

### இந்திய அரசாங்கத்திற்கு விண்ணப்பம்

சேதுசமுத்திரத்தை ஆழப்படுத்தும் விவகாரம் தொடர்பில் இலங்கைத் தீவின் யாழ்ப்பாணக்குடாநாடு சந்திக்கப்போகும் அரசியல் அபிவிருத்தி சூழலியல் அபாயத்தைத் தடுக்க முற்படும் வகையில் யாழ்ப்பாணத்தின் துறைசார் கல்விமான்கள், அரசியல்வாதிகள், தமிழ் சமூகப் பிரதிநிதிகள் எனப் பல்வேறுதரப்பினரும் ஒன்றிணைந்து நடவடிக்கையில் இறங்கியாக வேண்டும்.

மன்னாரிலிருந்து யாழ்.குடாவின் கடற்பிரதேசம் தனது இயற்கையான உயிரினவியல், புவியியல், சூழலியல் பாதுகாப்பை இழப்பதுடன், நிலப்பகுதிகள் நீரின் அடியில் படிப்படியாக அமிழ்ந்துபோதல் போன்ற ஆபத்துக்கள் எதிர்வு கூறப்படுகின்றன. இந்த எதிர்வு கூறுகை தொடர்பாகவும் ஆராய்ந்து அறியவேண்டும்.

மேலும், இலங்கையின் தெற்குப்பகுதியின் துறைமுகங்கள் முக்கியத்துவமிழந்து நடவடிக்கைகளில் மந்த நிலைமையை அனுபவிக்கவேண்டிய நிலையும் உள்ளது. சேது சமுத்திர விவகாரம் தொடர்பாக யாழ்.பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை மண்டபத்தில் ஒரு கருத்தரங்கம் நடைபெற்றதைத் தவிர செயலூக்கம் மிக்க மேலதிக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு மக்கள் விழிப்படையச்செய்யப் படுவதுடன், இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்தினூடாக எமது மக்களின் ஆதங்கங்கள், ஆபத்துக்கள் பற்றிய ஏக்கங்கள்; வேண்டுகோள்கள் என்பன இந்திய அரசாங்கத்துக்கு வெகுவிரைவில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இலங்கை அரசாங்கத்தினூடாக இந்திய அரசாங்கத்துக்கு அழுத்தங்களை வெளிப்படுத்தும்படி அனைத்து மக்களும் செயலூக்கத்துடன் நடவடிக்கையில் இறங்க வேண்டும். இலங்கை இனப்பிரச்சினைக்கு இடைக்காலத் தீர்வோ, அன்றேல் நிரந்தரத் தீர்வோ அடையப்படாத இந்தக் கட்டத்தில் மேலும் சிக்கலான தந்திரோபாயங்கள் நிகழ்கின்றன.

சேதுசமுத்திரத்திட்டம் அமுலாக்கப்பட்டால் பாதிக்கப்படப்போகின்ற உடனடி மக்களாகவடகிழக்கு மக்கள் யாழ்ப்பாணத்தவர்கள் காணப்படுவதனால் அனைவரும் இவ்விடயத்தில் உடனடியாக விழிப்படைந்து செயற்பட வேண்டும். அதே போன்று யாழ்ப்பாணம் எதிர் கொள்ளும் ஏனைய நெருக்கடிகளிலும் உரிய துறைசார்ந்தோர் நேரடிக்கவனம் செலுத்தி உரிய தரப்புக்களுக்கு ஊடாக நடவடிக்கைகளைத் தொடங்கி தீர்வுகளைக் காண முன்வரவேண்டும்.

### அதிகரித்த வாகனங்களுக்கு ஈடு கொடுக்க முடியாத வீதிகள்

அரை நூற்றாண்டு தொடக்கம் ஒரு நூற்றாண்டுக்கும் மேலான காலப்பகுதிக்கு முந்திய வயதும், நீளமும், அகலமும், உருவாக்கத் தொழில்நுட்பமும் கொண்ட முன்னேற்றகரமான எவ்வித இயல்புகளுமற்ற வீதியமைப்புமுறைகளைக்கொண்டிருக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வீதி விபத்துக்கள் தடுக்கப்பட வேண்டுமாயின் உடனடியாக்கண்டி வீதி, காங்கேசன்துறை வீதி, பலாலி வீதி, பருத்தித்துறை வீதி, மானிப்பாய் வீதி முதலிய கேந்திரமுக்கியத்துவம்வாய்ந்த வீதிகள் போதிய அளவு அகலமாக்கப்படல் வேண்டும்.

அகலமாக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லையெனில் யாழ். நகரத்தையும் ஏனைய குடியிருப்புப் பிரதேசங்களையும் இணைக்கின்ற தற்போதைய வீதிகளுக்கு மேலதிகமாககாங்கேசன்துறை வீதிக்கும், பலாலி வீதிக்கும் இடையில் செல்கின்ற வீதிகளும், பலாலி வீதிக்கும் பருத்தித்துறை வீதிக்கும் இடையில் செல்கின்ற வீதிகளும் நன்கு புனரமைக்கப்பட்டு யாழ். நகரத்துக்குச் செல்வதற்கான பாதை வேறானதாகவும், யாழ். நகரத்திலிருந்து செல்வதற்கான பாதை வேறானதாகவும் பொருத்தமான போக்குவரத்து நடைமுறைகளை அறிமுகப்படுத்தி போக்குவரத்து நெருக்கடிகளையும், அபாயங்களையும் நீக்க வேண்டும்.

வலிகாமம் பிரதேசத்தில் உடனடியாக இவ்வாறானஒருஒழுங்குமுறைஅமுலாக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் கடந்த இரண்டரைவருடகாலப்பகுதிக்குள் யாழ். குடாநாட்டுக்குள் பன்மடங்கு அதிகரித்துள்ள வாகனங்களின் எண்ணிக்கையளவுக்கு வீதிப்போக்குவரத்துநிகழ்வது பிரயாணிகளுக்குஅன்றாடம்மரணவாசல்களைத் திறந்துவிடுவதற்குவழிகோலும்.

இவ்விடயத்தில்சிவில்நிர்வாகஅதிகாரிகளும், தமிழ் அரசியல் வாதிகளும் உடன் விழிதிறந்து செயற்பட்டாகவேண்டும்.

### சமாந்தரச் சைக்கிளோட்டிகள்

நகரங்களிலும், அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் அமைந்துள்ள அரசாங்கப் பாடசாலைகளிலும், தனியார் கல்வி நிறுவனங்களிலும் அதிபர், ஆசிரியர்களும், நிர்வாகிகளும் தமது மாணவர்களுக்குச் சொல்லவேண்டியது அவர்களை வீதியில் ஒருவருக்கு ஒருவர் சமாந்தரமாகப் பயணிக்க வேண்டாம் என்று அறிவுறுத்துதல் ஆகும். சாதாரண சைக்கிளில் ஆடிப்பாடியபடி சமாந்தரமாகப் பிரயாணிக்கும் இளைஞர்களும் யுவதிகளும் வீதிப் போக்குவரத்தில்பெரும்நெருக்கடிகளை உருவாக்கிவிபத்துக்களுக்குக்காரணங்கள் ஆகின்றனர்.

சமாந்தரமாகப் பயணிக்கும் பிரயாணிகளை அவர்களின் மனமாற்றம் மூலம் மட்டுமே தடுக்க வேண்டும் என்பதில்லை. போக்குவரத்து நெருக்கடி மிக்க வேளைகளில் ஆங்காங்கு பொலிஸார் கடமையில் ஈடுபட்டு சமாந்தர சைக்கிள்காரருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொண்டு பொருத்தமான தண்டனையை வழங்கவேண்டும். சமூகத்தின் நலன் கருதி நீதிபதிகள் சமாந்தர சைக்கிளோட்டிகளுக்கு கடும் அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும்.

### உள்ளூராட்சி மன்றங்கள் ஆற்றவேண்டியவை

நுளம்புப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு யாழ். குடாநாட்டிலுள்ள மாநகரசபை, நகரசபைகள், பிரதேசசபைகள் என்பன உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியவைகளாகவிருக்கின்றன. தத்தமது ஆள்புல எல்லைக்குள் காணப்படும் சேதன, அசேதனக் கழிவுகள், கழிவுநீர் தேங்கும் வாய்க்கால்கள், குழிகள் என்பன தொடர்பாக உள்ளூராட்சி மன்றங்கள் போதிய கவனம் செலுத்த வேண்டும். யாழ்.குடாநாட்டிலுள்ள யாழ்.மாநகரசபை, வலிகாமம் வடக்கு பிரதேச சபை போன்ற உள்ளூராட்சி மன்றங்களின் ஆள்புல எல்லைக்குட்பட்ட வட்டாரங்களில் ஒருபகுதி படைக்கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன.

வலிகாமம் வடக்கின் பெரும்பகுதி பற்றைக்காடுமண்டிப் போயுள்ளன. இவ்வாறான பற்றைக் காடுகளும் அங்கு உருவாகும் சேதனக்கழிவுகள், நீர் தேக்கங்கள் என்பனவும் நுளம்புப் பெருக்கத்துக்கு மிகவும் உகப்பான வாய்ப்புக்களை வழங்கியுள்ளன. யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் மிகப் பெருமளவில் பிளாஸ்ரிக் கழிவுகள், உரிய முறையில் பராமரிக்கப்படாத குளங்கள் என்பன நுளம்புப் பெருக்கத்துக்குக் காரணங்களாக இருக்கின்றன.

### உயிரியல் ஆய்வுகளுக்கு பல்கலைக்கழகம் தயாரா?

வடமராட்சிப் பகுதியில் அடிக்கடி மனிதர்களைப் பலிகொள்ளும் வெள்ளைப் பூரான் தொடர்பாக உரிய உயிரியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளை யாழ். பல்கலைக்கழக உயிரியல் விஞ்ஞானத்துறை மேற்கொள்ள வேண்டும். என்னவகையில் சிகிச்சை அளிக்க வேண்டும் என்பது குறித்து எமது மருத்துவபீடம் உயிரியல் துறையுடன் இணைந்து ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். எம்மால் முடியாவிட்டால் சர்வதேச ரீதியான விஞ்ஞான ஆய்வு வசதிகளைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். நுளம்புப் பெருக்கம், வெள்ளைப் பூரான்களின் பெருக்கம், வீதி ஒழுங்குகள் இன்மை போன்றவற்றைத் தடுக்கவும் அரசியல் தீர்வுதான் வேண்டுமா? இயலுமான முயற்சிகளை இப்பொழுதே ஏன் செய்யமுடியாது?

யாழ் ஆத்மா

---

## வருகிறார் மிஸ்டர் வேதா......

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொழில் தொடர்பான விளக்கங்களைக் கூறி.., ''பிந்திய தகவல்களை முந்தித் தருவது தான் எமது பத்திரிகையின் இலட்சியம். எனவே அதற்கமைவாக... உண்மையான... தவல்களை உடனடியாகத் தாரும். கொஞ்சம் உள்வீட்டு ரகசியங்களை புலனாய்வு செய்து தருவது.. நல்லது.... எமது வாழ்த்துக்கள்'' என்று மீண்டும் கை கொடுத்தோம்.

''ஐயா எனது நீண்டகால ஆசை இது..... இதற்காகவே நான் அரசியல் துறையில் படித்துப் பட்டம் பெற்றேன். ஆனால், என்னால் நினைத்த நிலைமைக்கு வரமுடியவில்லை. விதி சதி செய்து விட்டது. ஆனாலும், இப்போதாவது இந்தச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறதே. நன்றி ஐயா, நன்றி'' என்றார். கண்களிலே லேசான நீர்த்திவலை... சோகமா... சந்தோஷமா தெரியவில்லை.

நிலைமையின் இறுக்கத்தை போக்குவதற்காக....

''இப்படிப் பறந்துகொண்டே திரிவதற்கு உடம்புக்கு என்ன டீசலா, பெற்றோலா அடிக்கிறீர்?''– என்று ஜோக்கடித்தோம்...

''இல்லை.... பறவைகள் பறக்கின்றவே அவை டீசல், பெற்றோல் அடித்துக்கொண்டா பறக்கின்றன?'' என்று எதிர்க் கேள்வி கேட்டார் சிரித்தபடி...

''சரி... சரி.... உடனடியாகப் புறப்படும்... செய்திகளை அள்ளிவாரும்.. எமது வாசகர்கள் உமக்காக அடுத்த வாரம் ஆவலுடன் காத்திருப்பார்கள்'' என்றோம்.

''சரி ஐயா... போய் வருகிறேன்'' என்றார் வேதாளம். விசுக் சத்தத்துடன் பொசுக் என்று காணாமல் போனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பித்தன் பதில்கள்



சா.சிவகுமார்—றெட்பானா

**கேள்வி:— அன்பின் பித்தா,இந்த வாரமும் ஜோக் ஒன்று சொல்லும் பிளீஸ்**

பதில்:—கணவன்—மனைவி இருவர் மட்டுமே இருந்த அந்தக் குடும்பத்துக்கு வேலைக் காரிஒருத்திதேவைப்பட்டாள். பல இடங் களிலும் தேடி ஒரு வேலைக்காரியை அவர்கள் பிடித்து வந்தனர்.சில மாதங்கள் சென்றன. ஒருநாள் அந்த வேலைக்காரி வீட்டுக்காரரிடம் தான் கர்ப்பமாக இருப்பதா கவும்,இனிமேல் அங்கே வேலைசெய்ய முடி யாதென்றும் கூறினாள். சிறப்பாக வீட்டு வேலைகளைச் செய்யும் அவளை இழக்க விரும்பாத அந்தக் கணவனும், மனை வியும் அவளுக்குப்பிறக்கும் குழந்தையை தாங்களே வளர்ப்பதாகக் கூறினர்.தொடர்ந் தும் அங்கேயே அவளை வேலை செய் யும்படியும் கேட்டுக்கொண்டனர். அவளும் அதற்குச் சம்மதித்தாள்.

ஓராண்டு கழிந்தது. மீண்டும் அவர்களிடம் தான் கர்ப்பமாக இருப்பதாகவும், வேலை யை விடப்போவதாகவும் அவள் தெரிவித் தாள்.அப்போதும் அவளை இழக்க விரும் பாத கணவன்—மனைவி இருவரும் பிறக் கப் போகும் பிள்ளையையும் தாங்களே வளர்ப்பதாகக் கூறினர். வேலைக்காரியும் சம்மதித்தாள்.

இப்படியே அடுத்த வருடமும் அவள் கர்ப்பமா னாள்.வேலையை விடப் போவதாகவும் சொன்னாள். அந்தப் பிள்ளையையும் நாங் கள் வளர்க்கிறோம் என்றனர் கணவனும், மனைவியும். அவளும் அவ்வாறே செய்தாள். சில மாதங்கள் கழிந்தன. அவர்களிடம் வந்த அந்த வேலைக்காரி... இனிமேல் நீங் கள் என்ன சென்னாலும் இங்கே நான் வேலை செய்யப் போவதில்லை என்றாள். ''ஏன்'' என்று கேட்டனர் கணவனும் மனைவியும். அதற்கு வேலைக்காரி ''நான் இங்கே வேலைக்குச் சேரும்போது நீங்கள் இருவர் மட்டுமே இருந்தீர்கள். சின்னக்குடும் பம். ஆனால், இப்பொழுது ஐந்து பேர் உள்ள பெரிய குடும்பமாகிவிட்டது. இந்தப் பெரிய குடும்பத்துக்கு என்னால் இனிச் சமைத்துப்போட முடியாது'' என்றாள்.

எஸ்.சாஹிரா சபியா— சிஹாரியா

**கேள்வி:— அராஜகம், அட்டூழியம் புரிவதில் தனிக்காட்டு ராஜாவான புஷ்,இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் புஷ்வாணம் ஆகி விடுவார் என்று சொல்கிறார்களே! உமது கணிப்பு என்ன?**

பதில்:— நாசகார ஆயுதங்களைச் சாட்டிக் கொண்டு ஈராக்கினுள் புகுந்து தனக்கி ருந்த செல்வாக்கையும், வெற்றி வாய்ப் பையும் கெடுத்துக்கொண்டார் புஷ். ஈராக் கில் அமெரிக்க இராணுவத்தின் அடாவடித் தனங்கள், அமெரிக்க இராணுவம் ஈராக் கில் வாங்கிக் கட்டும் அடிகள் எல்லாம், இது எமக்குத்தேவையாஎன்று அமெரிக்க மக்களை எண்ண வைத்திருக்கிறது. அதனால், அடுத்த ஜனாதிபதி கெரி என்றுதான் கணிப்பீடுகள் சொல்கின்றன.

அ.பன்னீர்—முள்ளியவளை

**கேள்வி:— அன்பின் பித்து! உமது குடும்பப் புகைப்படத்தையும், உமது கையெழுத்து வடிவத்தையும்(ஆட்டோகிராப்) அனுப்பி வைப்பீரா? உம்முடைய உண்மையான உருவத்தைப் பார்க்க வேண்டும் போல் ஆசையாகஇருக்கிறது.உமக்குலட்சக்கணக் கான ரசிகர்கள் இருக்கிறார்கள். எனவே, எமது ஆசையை நிறைவேற்றுவீரா?**

பதில்:— ஐயா, அருணாச்சலேஸ்வரா. ஏற் கனவே எம்மைப் பற்றியெல்லாம் மட்டமாக எழுதுகிறாயே என்று தாய்க்குலங்களின் கோபம் என் மேல் இருக்கிறது. இதனை விட, என்னடா மனைவியிடம் அடிவாங்கும் வெட் கம் கெட்ட கதைகளை எல்லாம் ஊர் முழுக்கச் சொல்லி ஆண் வர்க்கத்தின் மானம், மரியா தையை விற்றுவிடுகிறாயே என்று ஆண் குலங்களின் திட்டு மறுபக்கம்.இது தவிர, எனது பதில்களால் பாதிக்கப்பட்ட அரசி யல்வாதிகளின் கடுப்பு மறுபக்கம். இப்படி ஏகப்பட்ட அச்சுறுத்தல்களுக்குள் வாழ்ந்து வருகிறேன்.

இந்த லட்சணத்தில் குடும்பப் புகைப்படத்தைப் போட்டுவிட்டு குடும்பத்துடன் சேர்ந்து அடி வாங்க நான் என்ன மடையனா? இப்பொழுது கார்ட்டூன் வடிவில் வெளியாகும் படத்தை வைத்தே அடையாளம் கண்டு கொண்டு போட்டுத் தள்ளிவிடுவார்களோ என்று நடுங்கிக் கொண்டிருக்கிறேன். இதில் புகைப்படமா? வேண்டாம் சாமி.

ஆ.பேபி—முழங்காவில்

**கேள்வி:— பித்தன்சார்! காதல் எவ்.எம் பாடலில் ஆதாம்— ஏவாள் காலத்தில்ஆப் பிள் காதல் சொன்னது என்று வருகிறது.**




**இப்போது, உமது காலத்தில் எது காதல் சொல்கிறது.**

பதில்:—எஸ்.எம்.எஸ்,எம்.எம்.எஸ்,இன்ர நெற்.

ஏ.சந்திரன்— முள்ளியவளை

**கேள்வி:—அன்பின் பித்தா! கட்டினால் இவளைக் கட்டனும்டா, இல்லை கட்டினவ ன் காலைத் தொட்டுக்கும்புடனும்டா என்ற பாடலின் அர்த்தம் என்ன? மழுப்பாமல் விடை தரவும்?**

பதில்:—ஆமா...இது பெரிய திருவள்ளுவர் எழுதிய திருக்குறள். இதற்கு நான் பொழிப்புரை சொல்ல வேண்டுமாக்கும். போய் ஏதாவது உருப்படியான வேலை யைப் பாருமய்யா.

க.மதிவதனன், மல்லாவி.

**கேள்வி:— குடும்ப உறவு விடயங்களில் ஆலோசனை கூற ஒருவருக்கு என்ன தகு திகள் இருக்க வேண்டும்?**

பதில்— ஆகக் குறைந்தது ஒரு குடும்பமாவது இருக்க வேண்டும்.

து.ஆனந்தராஜா

வைரவப் புளியங்குளம்.

**கேள்வி:— பித்தா! பெயரும், புகழும் பெற் றுக்கொள்ள நல்ல புத்திமதி கூறும் பார்ப் போம்?**

பதில்:— ஐயா... ராசா... நீர் முன்னேற வேண் டுமா? பெயரும், புகழும் உமக்குக் கிடை க்க வேண்டுமா? நீர் வழி நடத்தப்படுபவ ராக இருக்காதேயும். துணிந்து வழி நடத் துபவராக இரும்.

வி.தீபா—வட்டக்கச்சி.

**கேள்வி:—நான்பாதுகாத்து வளர்த்துவரும் புலிக்குட்டிகளை அற்ப எலும்புத் துண்டு களை, சாப்பிட்டு வரும் சொறி நாய்க் குட்டிகள் மிரட்டிப் பார்க்குதுகள். முடியுமா பித்தா?**

பதில்:—எலும்புத் துண்டுக்காக நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு திரியும் SORRY நாய்க்குட்டிகளுக்கு தவிர்க்க முடி யாத நிலை. எலும்புத் துண்டுகளைப் போட்ட எஜமான்களுக்கு ஏதாவது மனம் குளிரச் செய்ய வேண்டுமே!அப்படிச்செய்தால் போடும்எலும்புத்துண்டுடன்கொஞ்சம்சதைத் துண்டும் போடுவார்களேஎன்ற ஆதங் கம்.அதனால்,தங்களை விட எவ்வளவோ பலம் வாய்ந்தது என்று தெரிந்தும் புலிக் குட்டிகளைசீண்டிப்பார்க்கின்றன.அதனால், தற்போது இருந்த இடமே தெரியாமல் இல்லாமல் போய்க்கொண்டிருக்கின்றன.

வெ.தனுஷன்—இருபாலை

**கேள்வி:— 4 ஸ்ருடன்ஸ் படத்தில் லட்ஜாவதி பாடலுக்கு இசையமைத்த இசைய மைப்பாளர் பற்றி எடுத்துவிடுமேன் பித்தா!**

பதில்:—ஜாய்ஸி கிப்ட் என்ற இளைஞர் தான் அந்த இசையமைப்பாளர். என்னடா இது பெயர் புதிய தினுஷாக இருக்கிறதே என் றீர்களா?இவரது அப்பாவின் பெயர் இஸ் ரேல் கிப்ட். மலையாளியான ஜோய்ஸி கிப்ட் முன்னர் திருவனந்தபுரத்திலே உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் பாட கராக இருந்தவர். லட்ஜாவதிக்குப்பிறகு சுமார் 10க்கு மேற்பட்ட படங்கள் இவரது கையில்!

செ.வனிதா(யூலி) புங்குடுதீவு.

**கேள்வி— பித்தா! தெரிந்த ஆணுடன் கதைத்தால் கூடத் தப்பாக நினைக்கிறார்க ளே! ஏன் பித்தா?**

பதில்—தெரிந்த ஆணுடன் தான் கதைக்க முடியும்.தெரியாத ஆணுடன் போய்க் கதைத் தால் லூஸ்என்று தான் சொல்வார்கள். அதி லும்தெரிந்தஆணுடன்எட்டநின்று—வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக்—கதைத்துப்பா ரும். தப்பாக நினைக்கவே மாட்டார்கள். வழிந்து வழிந்து அடிக்கடி கதைத்தால் தப்பாகத்தான் பார்ப்பார்கள்.

மு.சிவரூபன்—வவுனிக்குளம்.

**கேள்வி—பித்தா! நான் உம்மை நேசிக்கும் பித்தன். நேரிலே சந்தித்து எனது கடி தங்களை உம்மிடம் நேரடியாகவே ஒப்ப டைக்கலாம் என நினைக்கிறேன். எங்கே சந்திக்கலாம்? என்ன அடையாளம்?**

பதில்— ஆஹா... இந்த டக்கா—டிக்கி விளை யாட்டெல்லாம் நம்மகிட்ட வேண்டாமடி மவனே, வருவீங்க— பார்ப்பீங்க— கடிதங் களைத் தருவீங்க— பக்கத்தில ஒரு டீக்கடை யை கண்டுட்டு வாங்க ஏதாவது குடிப்போம் என்பீங்க. அங்க சோடா, கேக்,வடைஎல் லாம் ஒரு புடி புடிச்சிட்டு எஸ்கேப்ஆயிடு வீங்க. நாங்க தான்காசு கொடுக்கவேணும். மவனே, இந்தப் பருப்பு இங்க வேகாது. வேற எங்கயும் TRY பண்ணிப் பாரும்.

இ.சுமதி— பளை.

**கேள்வி— பித்தன்அங்கிள்!போனிலே *I LOVE YOU* சொல்லும் ஆண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

பதில்— முன்ஜாக்கிரதை முத்தண்ணர்கள்.



நேரிலே சொன்னால் கன்னம் பழுத்து விடலாம்— அல்லது செருப்பு பிய்ந்து விட லாம்— அல்லது தர்ம அடி விழுந்து விடலாம் என்ற பயத்தில்செயல்படும்(படு) பாவிகள்.

அருணாசலம்— முள்ளியவளை.

**கேள்வி—பித்துக்குட்டிஉமது திருமணம்காதல் திருமணமா? நிச்சயிக்கப்பட்ட திரு மணமா? இதில் உமக்கு மறக்க முடியாத விடயம் ஏதாவது இருந்தால் கூறும். பிளீஸ்?**

பதில்— நிச்சயிக்கப்பட்ட பின் காதல் கொண்ட திருமணம். இதில் மறக்க முடி யாத விடயம் என்னவென்றால் எனக் கெல்லாம் ஒரு திருமணம் நடப்பது என் பதே மறக்க முடியாத சம்பவம் தானே.

தீபன்— உருத்திரபுரம்.

**கேள்வி—பித்தா! எம் நாட்டுப் பெண்கள் வெளிநாட்டு மாப்பிள்ளை என்றவுடன் காதலித்தவனையும் கைவிட்டுவிட்டு— வெளிநாட்டுக்காரரை திருமணம் செய்ய முன் வருகிறார்களே! இவர்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம்?**

பதில்— இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.

ச.சிவா— கல்முனை

**கேள்வி— இளைஞர் சமுதாயத்தை சீர் செய் யும் ஏதாவது திரைப்படங்கள் வெளி வருமா?**

பதில்— வெளிவருமாவா... எத்தனை படங் கள் வெளிவந்துவிட்டன. ஆனால், யார் தான் பார்த்தார்கள். நியூவிலே — சிம்ரன்— சூர்யாவுக்கு முதலிரவில் பாடம் சொல் லிக் கொடுத்ததால் எல்லா இளைஞர் களும் ஜொள்ளு வடிய வடியப் பார்க்கி றார்கள். சீர்திருத்தக் கருத்துகள் சொல்லப் போனால்எந்த இளைஞன் இரந்து கேட் கிறான்? உடனே எழுந்து போய் தியேட் டர் கன்ரீனில் சிகரட் அல்லவா குடிக்கி றான்.

ஆர்.சரண்ராஜ்—விசுவமடு.

**கேள்வி— பித்தா! ரோட்டிலே போகும் பெண் களைப் பார்த்து கிழவர்கள் கூட சைட் அடிக்கிறார்களே. நாங்கள் அடித்தால் மட் டும் தப்பா?**

பதில்— கண்ணு தெருவிலே கார்—மோட்டார்



சைக்கிள் என்பன போவதைக் கண்டவு டன் தெருநாய்கள் குலைத்தபடி கலைத் துச் செல்கின்றனவே— அவைகளைக் கலைத்துப் பிடித்தால் அந்த நாய்கள் மோட்டார் சைக்கிளையோ, காரையோ ஓட்டவா போகின்றனா? சும்மா... கலைக் கின்றன. அதுபோல் தான்இதுவும்...

கே.என்.சிவபரன்— முள்ளியவளை.

**கேள்வி:—பித்தா! பெண்கள் நினைத்தால் ஆண்களை நல்லவர்கள் ஆக்கவும் முடி யும். கெட்டவர்கள் ஆக்கவும் முடியும் என் கிறார்களே! உண்மையா பித்தா?**

பதில்— ஆமாம்.நினைத்தால் முடியும் தான். ஆனால், நாட்டிலே பெண்கள் எல்லாம் ஆண்களை நல்லவனோ, கெட்டவனோ ஆக்குவதாக எனக்குத் தெரியவில்லை. மாறாக பைத்தியக்காரர்களாக மாற்றிக் கொண்டல்லவா இருக்கிறார்கள்.

செ.தனலட்சுமி—ஆரயம்பதி.

**கேள்வி—கருணாவின் ஆட்டம் முடிந்து விட்டதா?**

பதில்— அவரது சகோதரர் றெஜியின் மரணத் துடன் முடிந்தவிட்டமாதிரி தான் தெரிகிறது.

சே.சிந்துஜா—முழங்காவில்

**கேள்வி— பித்தா பெண்களின் வீக்னஸ் என்னபித்தா?**

பதில்— செக்ஸ்

கே.என்.குருபரன்—கருநாட்டுக்கேணி.

**கேள்வி— பித்தா காதல் புனிதமானது என்கிறார்கள்.ஆனால் நடிகர்களின் வாழ் வில் இது பொய் போல் உள்ளது?**

பதில்— இல்லையே..காதலித்த பெண் ணையே கல்யாணம் செய்து அவர்களை இன்றுவரை கண்கலங்காமல் பார்த்து வரும் விஜய்—அஜித் போன்றவர்களும் விதிவிலக் காக இருக்கிறார்களே.

## பித்தனின் கேள்வி

கேள்வி:— இந்த உலகத்தில் யாரை நம் பலாம்? யாரை நம்பக் கூடாது?

## வாசகர்கள் பதில்கள்

சிவாஜிபாலு,

கெந்தக்கொல்ல—மாத்தளை.

இனவாதத்தைத் தூண்டிவிடும் பேரி னவாத அரசியல்வாதிகளை நம்பினாலும், தன் இனத்தையே சிங்கள அரசுகளுக்கு அடகு வைத்து மதன மாளிகைளில் மன்மத லீலைகள் நடத்தி மக்களை மடையர்களாக் கிக் கொண்டிருக்கும் அரசியல்வாதிகளான வசூல்ராஜாக்களை மட்டும் ஒருபோதும் நம் பவே கூடாது. என்ன நான் சொல்றது சரி தானே?

ரீ. அஞ்சலோ— கல்முனை.

மரம் விட்டு மரம் தாவும் மந்திகளை நம் பினாலும் மனம் விட்டு மனம் தாவும் மங் கையரை நம்பக் கூடாது.

கலா— கொழும்பு

உலகமென்பதே நிரந்தரமில்லா மனி தர்கள் வாழும் கூடுதான். தத்தம் சுய லாபங்க ளுக்கேற்ப அடிக்கடி முகமூடி போட்டுக்கொள் ளும் போலி உலகம் இது. நம்ப நட. நம்பி நடவாதே என்ற கூற்றிற்கிணங்க நாம் நடந்துகொண்டால் வாழ்க்கை இலகு வாகிவிடும்.

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர் களுக்கு:—

நீங்கள் கேட்கும் கேள்வி களுக்கு பித்தன் பதில் தரு வார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்க ளும் பதில் அளி யுங்கள்.

ஐந்து தரமான — குறும்பான — யதார்த்தமான — பதில் கள் பிரசுரிக்கப்படும். பதில் களை ஒக்டோபர் 10ஆம் திகதிக்கு முன் னர் அனுப்பி வைக்க வேண்டும்.



கேள்வி:—காதலித்துவிட்டுப் பின் திரு மணத்தின் போது சீதனம் கேட்கும் ஆட வர்கள் பற்றி என்ன நினைக்கிறீர் பித்தா?

பதில்:— முதுகெலும்பு இல்லாதவர்கள்.

**இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில் மேலே. நீங்கள் பதில் அனுப்ப வேண்டிய முகவரி.**

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85,ஜெயந்தமல்லிமாராய்ச்சி வீதி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னச் சின்ன

பாலா நடிக்கும் 'கலிங்கா' படம் முழுக்க முழுக்க மகாபலிபுரத்தில் எடுக்கப்படுகிறது. ஆனால், தொடக்கவிழாவன்று இலங்கையிலேயே முழுப்படமும் உருவாக்கப் போவதாக அறிவித்தார் அதன் இயக்குநர்.

தமிழ் சினிமாவில் சிம்ரனின் மவுசு இன்னும் குறையவில்லை. பல தயாரிப்பாளர்கள் அவரை நடிக்க அழைத்தும் மறுத்து விட்டார். காரணம் அவர் உண்டானதால் குண்டாகியிருக்கிறார்.

த்ரிஷா சென்னை அடையாறில் பிரபல மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்றுத் திரும்பியிருக்கிறார். வேறெதுவும் கற்பனை செய்யாதீர்கள், அது முதுகு வலிக்கான சிகிச்சை.

கசன்கான், ஞாபகம் இருக்கிறதா? விஜயகாந், பிரபு படங்களில் நடித்துக்கொண்டிருந்தவர். மூன்று வருடங்களாக மும்பாயிலேயே தங்கிவிட்ட கசன்கான், 'அது', 'கிரி' படங்கள் மூலம் மீண்டும் தமிழுக்கு வந்திருக்கிறார்.

'ஜெயம்' ரவி நடித்த 'எம்.குமரன் சன் ஒப் மகாலட்சுமி' கன்னடத்திலும் தயாராகி வருகிறது. அதில் ரவிக்கு அம்மாவாக நடிப்பவர் ரோஜா.

'ஆட்டோ கிராப்' என்று ஆங்கிலத்தில் தலைப்பு வைத்த தமிழ்ப் பற்றாளர் சேரன், அடுத்த படத்திற்கு 'டூரிங் டாக்கீஸ்' என்று பெயர் சூட்டியிருக்கிறார். தமிழ், தமிழர் என்பதெல்லாம் ஊருக்கு உபதேசம் மட்டுமே.

முன்னாள் நாயகனான ரகுமான் 'எதிரி'யைத் தொடர்ந்து, 'ராம்' படத்தில் வில்லனாக நடித்துக் கொண்டிருக்கிறார். இது தவிர தேஜாவின் தெலுங்குப் படம் ஒன்றிலும் வில்லன். இனி வில்லனாகவே ஒரு ரவுண்டு வருவேன் என்று கூறுகிறார் ரகுமான்.

இங்கு 'நளதமயந்தி' படம் ஓடவில்லை. இருந்தும் அந்தக் கதை மேல் உள்ள நம்பிக்கையில் இந்தியில் அதை மறுபதிப்பு செய்து வருகிறார்கள். அங்கும் ஹீரோ மாதவன் தானாம்.

ஜாக்கிசானுடன் இந்தி கவர்ச்சி நாயகி மல்லிகா ஷெரவத் இணைந்து நடிக்கும் படத்தின் படப்பிடிப்பு இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

'அழகிய தீயே' படம் மூலம் வெற்றிப்பட நடிகர் என்கிற முத்திரையைப் பதித்துக் கொண்டவர் பிரசன்னா. என்ஜினியரிங் முடித்துவிட்டு 'விஷுவல் கம்யூனிகேசனும்' பயின்றவர் இவர்.

'ஸ்ரீ', 'தித்திக்குதே' போன்ற படங்களில் நடித்த தேங்காய் சீனிவாசனின் பேத்தி ஸ்ருதிகா சினிமா உலகத்திற்கு டாட்டா காண்பித்து விட்டு தனியார் கல்லூரி ஒன்றில் பட்டப்படிப்பு படித்து வருகிறார்.

எஸ்.கே.கிருஷ்ணகாந்த் தயாரிக்க, விவேக் நாயகனாக நடிக்கும் 'சொல்லி அடிப்பேன்' படத்தில் நாயகனுக்கு இரண்டு ஜோடிகள் சாயாசிங் - தேஜாஸ்ரீ.

அரை டசின் மலையாளப் படங்களில் கதாநாயகனாக நடித்த கலாபவன்மணி, அதற்குப் பிறகு வில்லனாகவும், சக பாத்திரங்களிலும் நடித்துக் கொண்டிருந்தார். இப்போது மீண்டும் கதாநாயகன் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. 'பாஞ்ச ஜன்யம்' படத்தில் மீண்டும் நாயகனாகிறார். தமிழ்நாடு, கேரளா எல்லையில் உள்ள ஒரு கிராமத்தில் நடைபெறும் கதை இது.

கவர்ச்சிப் புயல் - கவர்ச்சிப் பழம் ஷகிலா அடிப்படையில் ராகவேந்திரரின் பக்தை. தினமும் ராகவேந்திரரை வணங்கி விட்டுத்தான் படப்பிடிப்புக்குப் போவார்.

'புதுக்கோட்டையிலிருந்து சரவணன்' படத்துக்குப் பிறகு இப்போது அபர்ணா பிசியாகி விட்டார். 'அன்பிற்கினிய', 'பயோ டேட்டா', 'பிளாஷ் பேக்', 'கீர்த்தி' ஆகிய படங்களில் நடித்து வருகிறார்.



கிம்ர்மா

# சினிமா VS கிரிக்கெட்

கிரிக்கெட் வீரர்களுக்கும், மும்பை நடிகைகளுக்கும் காதல் மலர்ந்து திருமணத்தில் முடிவது என்பது தொடர் நிகழ்ச்சி ஆகிவிட்டது.

வெளிநாடுகளைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்களும், பிரபல கொலிவூட் நடிகைகளும் கூட காதல் ஜோடிகளாக உல்லாச உலகில் வட்டமிட்ட வரலாறும் பலர் அறிந்ததே. முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் பட்டோடியும், பிரபல நடிகை சார்மிளா தாகூரும் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டவர்கள். அது போலவே முன்னாள் தலைவர் அஸாருதீன், நடிகை சங்கீதா பிஜ்லானியும் காதல் வானத்தில் சிறகடித்துப் பறந்தவர்கள்.

இந்தப் பட்டியலில் இப்போது மேலும் ஒரு காதல் ஜோடி இணைய வாய்ப்பு உள்ளது என்று கூறப்படுகிறது. பிரபல கிரிக்கெட் வீரர் யுவராஜ்சிங்கும், நடிகை கிம்ர்மாவும் காதலர்களாகி, இந்த ஜோடி பல விழாக்களில் ஒன்றாகப் பவனி வருவதாகச் சிலர் கூறுகின்றனர்.

பிரபல தயாரிப்பாளர் யாஷ் சோப்ராவின் படத்தில் அறிமுகமான கிம்ர்மாவுக்கு 'மொஹபட்டீன்' படம் பெரும் புகழைத் தேடித் தந்தது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த யுவராஜ்சிங் – கிம்ர்மாவும் ரசியமாகச் சந்தித்துக் கொள்கின்றார்கள் என்று மும்பை பத்திரிகைகள் எழுதி வருகின்றன.

இந்தியாவில் மட்டுமன்றி வெளிநாடுகளில் கிரிக்கெட் விளையாட்டு நடைபெற்றாலும் – யுவராஜும், கிம்மும் தினமும் தொலைபேசியில் பேசிக் கொள்வார்களாம். யுவராஜ் எந்தப் பேட்டியில் அசத்தலாக விளையாடினாலும், கிம் தனக்கு நெருக்கமான சிநேகிதிக்கு ட்ரீட் கொடுப்பாராம்.

இருவரும் வாழ்க்கையில் இணைவார்களா என்பது தெரியவில்லை. காரணம்– யுவராஜ் ஆச்சாரமான குடும்பத்தில் பிறந்தவர். என் மகன் நிச்சயமாக நான் தேர்ந்தெடுக்கும் பெண்ணைத்தான் மணப்பான் என்று கூறிக் கொண்டிருக்கிறாராம் அவரது தாயார்.

ஒரு வேளை யுவராஜ் அம்மாவிடம் பணிவாகக் கேட்டுக் கொண்டால், அம்மாவும் ஒப்புக் கொணடால், கொட்டு மேளத்தில் சிக்ஸர் அடிக்க வாய்ப்பு இருக்கிறது என்கிறது ஒரு மும்பை சினிமா ஏடு



'கிரிவலம்'
ரிச்சட் – றோசினி

# இரகசியமா

ஷங்கர் இயக்கத்தி
படத்துக்காக 100 கலை
அதிரடிக் காட்சி ஒன்று
பீட்டர் ஹெயின் அதிரடி
புகைப்படக்கருவிகள்
படமாக்கப்பட்டது. பட
பத்திரிகையாளர்கள், ப
அனுமதி தரப்படவில்
தக்கது.

# அப்படியே

# 'கஜேந்திரா' ஒருவரி விமர்சனம்

விஜயகாந் ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த கஜேந்திரா படம் திரைக்கு வந்துவிட்டது. திடீரென திரைக்கு வந்ததால் இன்ப அதிர்ச்சிக் குள்ளாகி இருக்கிறார்கள் ரசிகர்கள்.

***படம் பார்த்தவர்கள் சிலர் சொன்ன ஒருவரி விமர்சனங்கள்:-***

*01 ''படம் நல்லா வந்திருக்கு. அதிரடிக் காட்சிகளில் விஜயகாந் சூப்பரா நடித்திருக்கிறார். லயா, புளோரா என்று இரண்டு கதாநாயகிகளுமே விஜயகாந்துக்குப் பொருத்தமில்லை. 'பாட்ஷா'மாதிரி இருக்கு.''*

*02 ''விஜயகாந் கலக்கியிருக்காரு. படம் நூறு நாள் ஓடும். யாரையும் அவர் தாக்கிப் பேசவில்லை. பொதுவாக அரசியல்வாதிகளுக்கு எச்சரிக்கை பண்ணியிருக்காரு. என்னிடம் வம்புக்கு வந்தால் உங்கள் இடத்திலேயே வந்து பதிலடி கொடுப்பேன் என்று சொல்லும்போது அவருக்கேயுரிய நடிப்புத் தென்படுகிறது.''*


*03 ''லயா முதல் பாதியில் பைத்தியமாக நடித்திருக்கிறார். படம் சுமார்தான்.''*

*04 ''அரசியல்வாதிகளுக்கு எச்சரிக்கை கொடுக்கும் படம். படம் பார்த்தால் அவர் அரசியலுக்கு வருவார் என்பது தெரிகிறது. படத்தில் வன்முறை அதிகம். அதிக நாட்கள் திரையில் ஓடுவது கடினம்.''*

*05 ''நான் இப்படத்தை தெலுங்கு மொழியிலும் பார்த்தவன். அதைவிடத் தமிழில் வித்தியாசமாக இருக்கிறது.''*

*06 ''படம் அதிக நாட்கள் ஓடும். விஜயகாந்த அசத்தியிருக்கிறார்.''*



சொல்லி
அடிப்பேன்
விவேக்

# கவர்ச்சிகளுடன் கறுப்பு சத்யராஜ்

இன்றைக்குத் திரையுலகில் படு பிஸியாக இருக்கும் சீனியர் ஹீரோ சத்யராஜ்தான். 'மங்கை' புகழ் அரிராஜன் தயாரித்து இயக்கும் 'ஐயர் ஐ.பி.எஸ்.' படத்தில் அபிநயஸ்ரீ, பாபிலோனா, ஜூனியர் சில்க் என்று மூன்று கவர்ச்சி நாயகிகளுடன் ''மன்மதனே ஓடிப்போகலாமா.. காமனோட கோட்டையைத்தான் தேடிப் போகலாமா''என்று அட்டகாசமாக ஆட்டம் போட்டிருக்கிறார் கறுப்புசத்யராஜ்.

அதென்ன கறுப்பு? ஆம், இந்தப் படத்தில் ஐயர் என்ற பொலிஸ் அதிகாரியாக ஒரு வேடத்திலும், படம் முழுவதும் கறுப்பு வேடத்துடன் இன்னொரு தாதா வேடத்திலும் சத்யராஜ் நடிக்கிறார். போலிஸ் கதைகளிலேயே வித்தியாசமான கதையாக இருக்கும் என்று நம்பிக்கையுடன் சொல்கிறார் இயக்குநர் அரிராஜன்.

# தனுஷின் சில

*நடிப்பு:* நடிக்க நான் விருப்ப
வரவில்லை. ஒரு விபத்தாகத்தான் வந்

*குரு:* என் அண்ணன் செல்வராகவ

*பிடித்த நடிகர்:* கமல் சார் நடிப்பு
பிடிக்கும்

*பிடித்த துறை:* 'சொப்ட்வெயர்' என்

*போட்டி யார்:* யாருக்கும் யாரும்
இல்லை.

*சூப்பர் ஸ்டார் கனவு:* சத்தியமாக இ
நிறைய ஆசை இருக்கு சாதிப்பதற்கு.

*காதல்:* அதிக நேரம் இருப்பவர்கள்
வேண்டியது.

*எதிர்கால லட்சியம்:* நல்ல நடிகன்
பெயர் வாங்கவேண்டும்.

*ரசிகர்:* ரஜினிகாந்துக்கு.

*முதல் விமர்சகர்:* நான்தான்

*அப்பா செல்லமா, அம்மா செல்*
வீட்டிற்கே செல்லம்.

*கோபம்:* எனக்கு முன் கோபம் அதி

*ஓய்வு:* நிறைய ஆங்கில பட
பார்ப்பேன்.

*படம் இயக்குவது பற்றி:* இப்போது ந
எனக்குச் சரியாக வரவில்லை. அத
இயக்குவது பற்றி எப்படி நினை
பார்ப்பது.

*இரட்டை வேடம் :* சரியான சந்த
அமையுமானால் நடிப்பேன்.

*வெற்றிக்கு :* கதை, திரைக்கதை மு
நன்றாக அமைய வேண்டும். கதாபா
நன்றாக வரவேண்டும். இவையெல்
றையும் சேர்த்து இயக்கும் இயக்குநர் ந
அமைய வேண்டும்.

*திருமணம்:* காதல் திருமண
செய்வேன்.

*வெளிநாடுகள்:* மலேசியா, சிங்
நியூசிலாந்து, தாய்லாந்து, அமெரிக்கா
ஆசை.

# 3 வேடத்தில் ஆகாஷ்

'செவ்வேல்', 'குருதேவா', 'ஒண்ணும் ஒண்ணும் நாலு, 'காற்றுள்ளவரை', 'கிச்சா வயசு' ஆகிய ஐந்து புதுப்படங்களில் மும்முரமாக நடிக்கும் நம்நாட்டு நடிகர் ஜெய்ஆகாஷ். தெலுங்கில் தன்னைத் தேடி வந்த புதுப்பட வாய்ப்புக்களை மறுத்துவிட்டாராம். எனக்கு தமிழ் சினிமாவில் முன்னணி இடம் வகிக்க வேண்டும் என்ற ஆசை. அதனால், தெலுங்குப் பட வாய்புக்களை மறுத்துவருகிறேன். இந்த மாதம் ராமகிருஷ்ணா படம் வெளியானதும், அது ரசிகர்கள் மத்தியில் கண்டிப்பாக என்னை உச்சத்துக்குக் கொண்டு செல்லும்.


'காற்றுள்ளவரை' படத்தில் மூன்று விதமான பாத்திரங்கள் ஏற்று நடிக்கிறார் ஜெய் ஆகாஷ். இந்தப் படத்தில் கதாநாயகியாக பிரணாதி நடிக்கிறார். மெய்க்காப்பாளனாகவும், கிராமத்தின் சின்ன மைனராகவும், பாடகராகவும் மூன்றுவித சங்கடமான பாத்திரங்களில் தோன்றுகிற அவருக்கு மெய்காப்பாளர் பாத்திரத்தில் மட்டும் திக்குவாய். படத்தில் வசனங்களை திக்கித் திக்கிப் பேச தொடர்ந்து பயிற்சி பெற்று வருகிறாராம் ஜெய் ஆகாஷ்.



'மன்மதன்'

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





'போலிஸ்'
பிரஷாந்த்

# பிரஷாந் நடிக்கும் 'போலிஸ்'

'பூவுக்குள் பூகம்பம்', 'சேலம் விஷ்ணு', 'கொம்போறிமூக்கன்', 'ஜெய்' உள்ளிட்ட வெற்றிப்படங்களையும், தற்போது பிரஷாந் கதாநாயகனாக நடித்து வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் 'ஷாக்' எனும் அதி நவீன தொழில்நுட்பத்துடன் உருவான படத்தை தயாரித்த தியாகராஜனின் லஷ்மி சாந்தி மூவிஸ் நிறுவனம் மீண்டும் பிரஷாந் கதாநாயகனாக நடிக்க மிகுந்த பொருட் செலவில் மிகப் பிரமாண்டமான முறையில் புதிய படம் ஒன்றைத் தயாரிக்கிறது.

'போலிஸ்' எனப் பெயரிடப்பட்டிருக்கும் இப்படத்தில் முற்றிலும் மாறுபட்ட, முதன் முறையாக போலிஸ் வேடத்தில் பிரஷாந் நடிக்கிறார். இதற்காக மும்பை மிரட்டில் உள்ள போலிஸ் அக்கடமியில் 2 மாதம் விசேஷ பயிற்சியும் மற்றும் அமெரிக்காவில் உள்ள சர்வதேச துப்பறியும் நிறுவனத்திலும் அவர்களின் நடை, உடை, செயற்றிறன் ஆகிய வைகளை பயிற்சி எடுக்கவுள்ளார்.

பிரஷாந்துடன் ஜோடியாக தமிழ்– தெலுங்கு படங்களின் முன்னணி கதாநாயகி நடிக்கிறார். இவர்களுடன் கௌசல்யா உள்ளிட்ட பல நட்சத்திரங்கள் நடிக்கின்றார்கள்.

உண்மையாக உழைக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கு நடக்கும் சோதனைகளை வித்தியாசமான முறையில் அதிநவீன தொழில் நுட்பத்துடன் தயாராகும் இப்படம், அமிர்தாப்பச்சன் நடித்த 'காக்கி' படத்தின் தமிழ்ப் பதிப்பாக உருவாகிறது.

படத்தின் முக்கிய சண்டை– பாடல் காட்சிகள் ஸ்பெயின், கிரீஸ், இத்தாலி மற்றும் அமெரிக்காவில் நடை பெறுகின்றது. அனைத்துத் தரப்பு மக்களும் ரசிக்கும் வகையில் காதல், வீரம், பாசம் என ஜனரஞ்சகமாக உருவாகிறது 'போலிஸ்'

## ...மாய் 'அந்நியன்'

...இயக்கத்தில் வளரும் 'அந்நியன்'
...00 கலைஞர்களுடன் விக்ரம் மோதிய
...சி ஒன்று சென்னையில் படமானது.
...ன அதிரடிப் பயிற்சி அளித்தார். அதிக
...நவிகள் கொண்டு இந்தக் காட்சி
...டது. படப்பிடிப்பு நடந்த இடத்தில்
...ார்கள், பார்வையாளர்கள் யாருக்கும்
...படவில்லை என்பது குறிப்பிடத்

## ...யே திருப்பிப் போடு



இப்போது தமிழ் சினிமாவில் ஒரு புதிய தொற்று பரவிக் கொண்டிருக்கிறது. 'குறும்பு' படத்தில் யுவன் சங்கர் ராஜா 'அடுத்த வாரிசு' படத்தில் இடம் பெற்ற 'ஆசை நூறு வகை' பாடலை நவீனப்படுத்தி இசை யமைத்திருந்தார். அதைத் தொடர்ந்து 'நியூ' படத்தில் ஏ.ஆர்.ரஹ்மான் 'படகோட்டி' படப்பாடலான 'தொட்டால் பூ மலரும்', 'சொர்க்கம்' படப் பாடலான 'பொன் மகள் வந்தாள்', 'உத்தரவின்றி உள்ளே வா' படப்பாடலையும் கலக்கிக் கொஞ்சம் கல (குலு)க்கிப் போட்டு இசை யமைத்திருந்தார். இயக்குநர் எஸ்.ஜே.சூர்யாவும் கண்டபடி காட்சிகளை எடுத்து அங்கே இங்கே என்று கத்தரித்து கதை அமைத்திருந்தார் இந்த இரண்டு படங்களுக்கும் வரவேற்பு கொடி கட்டிப் பறக்கவே முன்னாள் இசையமைப்பாளர் சந்தரபோஸ் மகன் சந்தோஷின் இயக்கத்தில் வெளிவர உள்ள 'கலையாத கனவுகள்' படத்தில் 'ராஜா சின்ன ரோஜா' வில் இடம் பெற்ற 'சூப்பர் ஸ்டாரு யாருன்னு கேட்டா' பாடலை மறுபதிப்பு செய்துள்ளார். அப்படிப் போடு, அசத்திப் போடு, அப்படியே திருப்பிப் போடுதன்னாலே.

## கேட்டியளே சங்கதி

சோனி நடிகை சமீபத்தில் ஹைதராபாத் சென்றிருந்தார். அங்குள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் தங்கினார். இரவு நேரம். இரண்டு பேர் நடிகை தங்கியிருந்த அறையின் கதவைத் தட்டி இருக்கிறார்கள். நடிகை திறக்காமல் ஹோட்டல் வரவேற்பாளருக்குத் தொலைபேசி மூலம் தகவல் கொடுத்தார். விரைந்து வந்த ஹோட்டல் பணியாளர்கள் அங்கு நின்று கதவைத் தட்டியவர்களைப் பிடித்து விசாரித்தார்கள்.

யாரே ஒரு ஆசாமி ஏகப்பட்ட பணத்தை வாங்கிக் கொண்டு சோனி–ஆசை காட்டி, அவர்களை ஹோட்டலுக்கு அழைத்து வந்திருக்கிறார். நடிகை தங்கியிருந்த அறைக்கதவைக் காட்டி உங்களுக்குகாகத்தான் காத்திருக்கிறார் என்று டிமிக்கி காட்டி விட்டு எங்கோ காணாமல் போயிருக்கிறார் அந்த ஆசாமி. நடிகையின் மீது தீராத ஆவல் கொண்டு உற்சாகமாக இருந்த அவர்களைக் கடைசியில் பணியாளர்கள் அடித்து விரட்டி யிருக்கிறார்கள்.



'அட்டகாசம்' அஜித் — பூஜா

## ...சில...

... விருப்பப்பட்டு
...தான் வந்தேன்.
...ல்வராகவன்.
... நடிப்பு மிகவும்
...யர்' என்ஜினியர்
... யாரும் போட்டி
...ியமாக இல்லை.
...பதற்கு.
...பவர்கள் செய்ய
...ல நடிகன் என்ற
...ன்
...மா செல்வமா:
...ாபம் அதிகம்.
...கில படங்கள்
...ப்போது நடிப்பே
...லை. அதற்குள்
... நினைத்துப்
...ான சந்தர்ப்பம்
...க்கதை முதலில்
.... கதாபாத்திரம்
...வையெல்லாவற்
...க்குநர் நன்றாக
...திருமணம்தான்
...யா, சிங்கப்பூர்,
...மெரிக்கா போக




மிஷா — ஆகாஷ்

## தேவயானி-இராஜகுமாரன் முயற்சி பலிக்குமா?

தேவயானி தயாரிப்பில் இராஜகுமாரன் எழுதி இயக்கி வெளியிட்ட 'காதலுடன்' என்ற படத்துக்காக ஏற்பட்ட லட்ச ரூபாய்க் கடனை முழுமையாக அடைத்து விட்டதாகச் சொன்ன இராஜகுமாரன், சாய்குமார் நடிப்பில் தெலுங்கில் இயக்கிய 'சிவராம்' என்ற படத்துக்கு நல்ல வரவேற்புக் கிடைத்ததாகச் சொன்னார். அடுத்து தமிழில் ஒரு படம் இயக்குவதற்கு கதைத் தேர்வு நடத்திக் கொண்டிருக்கும் அவா, 'காக்க... காக்க...' பாணியில் நவீன கதைகொண்ட படத்தை உருவாக்குகிறார். இதற்காக ஒரு இளம் முன்னணி கதாநாயகனை மனதில் வைத்து அணுகி வருகிறார். 'நீ வருவாய் என', 'விண்ணுக்கும் மண்ணுக்கும்', 'காதலுடன்' ஆகிய படங்களில் இருந்து முற்றிலும் வித்தியாசமான கதைகொண்ட படமாக இந்தப் புதிய படம் இருக்கும் என்று சொல்கிறார் இராஜகுமாரன்.


## தொப்புள்

தமிழ் சினிமாவில் தொப்புள் கலாச்சாரம் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது. ஆனால், யார் யாரின் தொப்புளைக் குளேசப்பில் காட்டி கதிகலங்க வைப்பது என்று கோடாம்பாக்கத்திற்கு கொஞ்சம் கூட விபரம் இல்லை என்று ரசிகர்கள் மத்தியில் ஒரு நையாண்டி வலம் வருகிறது. 'மனதில்' படத்தில் கௌசல்யாவின் தொப்புளைமிகக் கிட்டவாகக் காட்டுகிறார்கள். பார்த்துத் தொலையுங்கள்.



## அபிநயஸ்ரீக்கு யாரும் கொடுக்கவில்லை!

எனக்கு யாருமே சரியான வாய்ப்புத் தரவில்லை. எல்லோருமே மும்பை இறக்குமதி கவர்ச்சி நடிகைளைத் தேடி ஒடுகிறார்கள் என்று குறைபடுகிறார் அபிநயஷ்ரீ. வந்தால் வரட்டுமே என்று அவருடைய சம்பளத்தைக் குறைத்துப் பார்த்தார். அப்படியும் அவருக்கு யாரும் புதுப்பட வாய்ப்புத் தரவில்லை. எனவே, வேறு மொழிக்குத் தாவியுள்ளார். அங்கே சம்பளம் அதிகமாகக் கிடைக்கிறது என்பதால், தமிழில் குறிப்பிட்ட படங்களை மட்டுமே ஒப்புக் கொண்டு நடிக்கிறார். அந்தவகையில் ஒரு நல்ல படமாக 'அயோத்தியா' படத்தைக் குறிப்பிடுகிறார். படம் வெளியானதும், அபிநயஷ்ரீயின் குறை களையப்படுமா?



'அகரம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டேஸ்ட்கடை தணிகாசலம்

தணிகாசலம் அண்ணனும் மற்றும் சிலரும் அடுத்த மாதத்துக்கான வேலைத்திட்டங்கள் தொடர்பாக விவாதித்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது நடராஜன் பத்திரிகை ஒன்றுடன் அங்கு வந்தான்.

''என்ன நடா, இன்றைக்குப் பத்திரிகையில் என்ன விசயம் போட்டு இருக்கு?'' என்றார் தணி அண்ணன்.

எப்பவுமே தணி அண்ணனிடம் சற்று செல்லமாகப் பழகும் நடராசன் ''அண்ணே கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே உதிக்கப் போவுது என்று ஏரிக்கரை ஏட்டில் போட்டு இருக்கு பாருங்களே!'' என்று பேப்பரைக் காட்டினான்.

''அப்படி யாரு தம்பி புதுமையான ஒரு ஜோசியத்தைக் கூறி இருப்பது? கொண்டுவா பார்க்கலாம்'' என்றார் தணி அண்ணன்.

''அண்ணே மன்னிக்கவும், அதை நானே பெலமா வாசிச்சு எல்லாருக்கும் சொல்றன்'' என்று பேப்பரை வாசிக்க ஆரம்பித்தான் நடராசன்.

''என்னடா இது! நம்ப முத்து சிவலிங்கம் ஐயா இல்ல சொல்லி இருக்காரு. எட்டாயிரம் பேருக்கு வேலை வாங்கிக் கொடுக்கப் போறேன். அதுக்கு அமைச்சரவைக்கும் பேப்பர் போடப் போறேன் என்று இல்ல சொல்லி இருக்காரு.''

''ஆமாங்க அண்ணே! ஆசிரியர்களாக 3,500 பேர், பொலிஸுக்கு ஆயிரம் பேர் மற்ற மற்ற அரசாங்க காரியாலயங்களில் 2,500 பேர் என எட்டாயிரம் பேருக்கு வேலை வாங்கிக் கொடுக்கப் போறாராம்.''

''அப்படீன்னா நம்ப சீ.பி.ரத்னாயக்கா ஐயாவும், இராமானுஜம் ஐயாவும் கண்டு பிடித்துக் கொடுத்த எட்டாயிரம் மலையக இளைஞர், யுவதிகளுக்கும் வேலை வாங்கிக் கொடுக்கப் போறாங்களோ?''

''அது எப்படிங்க அண்ணே சரிப்பட்டு வரும்? முத்து சிவலிங்கம் தான்அமைச்சுப் பதவியை எடுத்த உடனே சொல்லிப்புட்டாரே, இந்த அமைச்சு மூலம் ஒரு வேலை வாய்ப்புக் கூடத் தர முடியாது.

இவுங்க செஞ்சது எல்லாம் பம்மாத்து அப்படீன்னு.''

''அப்படீன்னா இவுங்க மட்டும் எப்படி எட்டாயிரம் பேருக்கு வேலை கொடுக்கப் போறாங்களாம். இவுங்களுக்கு மட்டும் அவ்வளவு நிதி ஒதுக்கி இருக்காங்கலாமா!''

''இல்லீங்க அண்ணே! இவுங்களும் ஜனாதிபதிக் கிட்ட சொல்லித்தான் வேலை வாங்கிக்



கொடுக்கப் போறாங்களாம்.''

''இது என்னடா அநியாயமாக இருக்கு. முந்தி அவுங்களும் இதைத்தானே சொன்னாங்க. 'படித்த இளைஞர் யுவதிகளோட விபரங்களைத் திரட்டித் தரும்படி ஜனாதிபதி கேட்டார். எல்லா விவரங்களையும் திரட்டி உண்மையான கல்வித் தகைமைகளுடன் பெயர்ப்பட்டியலை ஜனாதிபதியிடம் ஒப்படைத்துள்ளோம். கல்வி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி தகைமை உடையவர்களுக்கு நியமனம் வழங்குவார்' என்று தானே



# மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திரசிகாமணி

இராமானுஜம்ஐயாவும் சொன்னாரு.''

''உண்மைதான், இந்த விவரம் எல்லாம் எல்லாப் பேப்பர்களிலையும் வெட்ட வெளிச்சமாகப் போட்டுப்புட்டாங்க. அதைப் பார்த்ததும் இந்த மனுசனுக்கு ஒரு வயித்தெரிச்சல். என்னடா நம்ப ஆளுங்க பத்துப்பதினைந்து வருசம் அமைச்சராக இருந்தும் செய்ய முடியாததை ஒரு சிங்கள மனிதன் ஐந்தே மாதத்தில் செய்து புட்டாரே என்ற ஆதங்கம்தான்.''

''அதுக்காக இப் புதியவர் பழிவாங்கப் போறது நம்ப மலையக இளைஞர் யுவதிகளைத் தானே!''

''நீ என்ன நடராசா சொல்லுற'' தனக்கு இரண்டு கண்களும் போனாலும் பாதகமில்லை, எதிரிக்கு ஒரு கண்ணாவது போகனும் என்பது தான் இவுங்க திட்டம் போல.''

''இப்பத்தான் சரியா புரிஞ்சிக்கிட்ட, அதாவது இவுங்க வேலை வாங்கிக் கொடுக்கா விட்டாலும், ரத்னாயக்க ஐயாவும், இராமானுஜம் ஐயாவும் ஜனாதிபதியிடம் கொடுத்த பெயர் பட்டியலில் உள்ளவர்களுக்கு வேலை கிடைக்கக் கூடாது என்பதுதான் இவுங்களோட திட்டம் என்று சொல்லுங்க.''

''வேற என்ன தம்பி சொல்லச் சொல்லுறீங்க''

''இந்த மனிதரே ஒப்புக் கொள்கிறார், மலையகத்தில் உள்ள படித்த இளைஞர் யுவதிகளின் தகுதிகள், கல்வித் தராதரம் எல்லாம் திரட்டப்பட்டுள்ளன என்று''

''ஆமாம், ஆமாம். அப்படித்தான் அன்று பேப்பர் காறங்க கிட்ட சொன்னாரு.''

''உண்மையாகவே இவருக்குச் சேவை செய்யும் நோக்கம் இருந்தால் அந்த விவரங்களின் படி தகுதியானவர்களுக்குத் தொழில் வாய்ப்பு வழங்கும்படி ஜனாதிபதியிடம் கேட்கலாம் இல்லியா?''

''அது எப்படித்தம்பி முடியும். இப்ப நேர்மையான முறையில் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால், இவர்கள் தயாரித்தால் தானே டவுன் சைட்டிலையும், முதலாளிமார் கிட்டயும் ஆயிரம் ஆயிரமா வாங்கிக்கிட்டு பேர் போட முடியும்.''

''புதியவர் அப்படித்தில்லு, முல்லு செய்யப் பார்த்தா மலையகத்திலும் இளைஞர் புரட்சி வெடிக்கும். இவுங்க ஓட இடம் கிடைக்காது.'' என்றார் நடராசன்.

''சரி, சரி பொறுமையா இருந்து நம்ப ஆகவேண்டியதைப் பார்ப்போம்'' என இளைஞர்களை முடுக்கி விட்டார் தணிகாசலம் அண்ணன்.

---

# மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சா?

கொடுக்க விரும்பாத சித்தப்பன் சினை ஆட்டைப் பிடித்துக் காட்டினானாம். 'மகனே உனக்கு ஆட்டுக்கறி ஆக்கிப் போட நினைத்தேன். ஆடு சினையாக இருக்கின்றதே, என்ன செய்வது?' என்றானாம்.

அதுதான் இன்று தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்கும் ஏற்பட்டுள்ள நிலை.

தொழிற்சங்கப் பெரிச்சாளிகளை நம்பிக் காலம் காலமாக சந்தாப்பணம் என வாய்க்கரிசி போட்டு வந்த தொழிலாளர்களின் வாய்களில் ஒட்டு மொத்தமாக மண்ணை அள்ளிக் கொட்டிவிட்டனர். அதுதான் உண்மை.

உண்மையாகவே என்ன நடந்தது? திரை மறைவில் நடந்த நாடகம் என்ன?

பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்த போது, என்ன ஐயா பேசினீர்கள்? எவ்வளவு சம்பள உயர்வு கேட்டீர்கள்? அதற்குத் துரைமார் சம்மேளனத்தின் பதில் என்ன? என்று பத்திரிகையாளர்களும் சீண்டிக் கொண்டே இருந்தனர்.

ஆனால், அப்போதெல்லாம் இவர்கள் என்ன சொன்னார்கள்? எல்லோரும் ஆச்சரியப்படும் வகையில் எங்களுடைய புரப்போசல்களை முன்வைத்துள்ளோம். இப்போது, வெளியே சொல்லிவிட்டால் ஏனைய தொழிற்சங்கக்காரர்கள் குழப்பி அடித்து விடுவார்கள். அதுதான் இரகசியமாகவே வைத்துள்ளோம் என்றனர். இவர்கள் வழமை போல் இல்லாமல் இம்முறை பெரிதாக வெட்டிப் புடுங்கப் போகிறார்கள் போலும் என்று பத்திரிகையாளர்களும் நம்பினர்.

அப்பாவித் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏதாவது நன்மைகள் கிடைக்கும் எனக் கருதினர்.

தோட்டத் தொழிலாளர்களும் பெரும் எதிர்பார்ப்புக்களுடன் காத்திருந்தனர். கடைசியில் இலவு காத்த கிளியின் கதைபோலானது.

பஞ்சு வெடித்துக் காற்றில் பறந்து விட்டது. கிளிகளுக்குப் பழம் கிடைக்கவில்லை. அதுதான் உண்மை.

தொழிலாளர்களின் கூட்டு ஒப்பந்த கடந்த ஜூன் 30 ஆம் திகதியுடன் காலாவதியாகிவிட்டது. இவர்கள் என்ன சொன்னார்கள். காலம் பிந்தினால் பாதகம் இல்லை. எப்போது பேசி முடித்தாலும் ஜூலை முதலாம் திகதி முதல் பாக்கி நிலுவையுடன் பெற்றுக் கொடுப்போம் என்று மார்தட்டினர்.

இப்பொழுது என்ன நடந்தது? நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே சில அமைச்சர்கள் பெரிதாகப் பேசிவிட்டனர். 500 ருபாவுக்குகுறையாதசம்பளம்பெற்றுக்கொடுக்க முடியும் என்று கூறிவிட்டனர். அதனால் நாங்கள் பேச்சைக் கைவிட்டு விட்டோம் என்கின்றனர்.

இது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போல் அல்லவா இருக்கின்றது.

இந்தச்சுரண்டல் பேர்வழிகள் இது வரை காலமும் யாருக்காகத் தொழிற்சங்கம் நடத்தினர். யாரிடம் கோடி கோடியாக (உண்டியல்) சந்தா வாங்கிச் சாப்பிட்டனர். அமைச்சர்களுக்காகவா அல்லது தொழிலாளர்களுக்காகவா? அரசியல் வாதிகள் கைதட்டலுக்காக எதையும் பேசுவார்கள்.

ஆனால், தொழிற் சங்கவாதிகளான நீங்கள் அப்பாவித் தொழிலாளர்களின் தலையிலேயே அடித்துவிட்டீர்களே! இந்தப் பாவம் உங்களைச் சும்மாவிடாது.

ஏழைகள் அழுத கண்ணீர் கூரிய வாளை விடப் பயங்கரமானது. இதை மறந்து விடக் கூடாது.

அமைச்சர்கள் எதையும் சொல்லட்டும். தொழிற்சங்கத் தலைவர்களே! உங்களுடைய பேரம் பேசும் சக்தி என்ன ஆனது. எங்களை விட்டால் எவராலும் முடியாது என்று மீசையை முறுக்கினீர்களே! இப்போது என்ன சொல்கின்றீர்கள்?

ஜே.வி.பி.சந்திரசேகரன் கூறுவதுபோன்று தோல்வியை ஒப்புக் கொண்டு உங்கள் தொழிற்சங்கங்களைகலைத்துவிடப்போகின்றீர்களா?

அல்லது வைக்கோல் பட்டறையில் கட்டிய நாய்கள் போல், நீங்களும் செய்யாமல் செய்யத்துடிப்பவர்களையும் செய்யவிடாமல் நந்திபோல் முட்டுக்கட்டையாகவே தொடர்ந்தும் இருக்கப் போகின்றீர்களா?

நீங்கள் உங்களுடைய பேச்சுக்களைக் கைவிட்டது ஏன்? அமைச்சர்களின் பேச்சுக்கள் மட்டும் தான் காரணமா?

இல்லையேல் நீங்கள் எதிர்பார்த்த சந்தோஷத் தொகையை துரைமார் சம்மேளனம் வழங்க முடியாது என்று கைவிரித்து விட்டதாக மாற்று சங்கத்தினர் கூறுகின்றனர். இதில் எது சரி?

போனவை போகட்டும். இப்போது தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுப் போராட்டம் நாடாளுமன்றத்திற்கே போய் விட்டது.

இலங்கை தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தைத் தவிர, இ.தொ.காவும், தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டியும் அரசாங்கத்துக்கு முட்டுக்கொடுக்கின்றன இ.தொ.கா அமைச்சரவையிலும் இடம் பிடித்துவிட்டது.

பெருந்தோட்ட உட்கட்டமைப்புஅமைச்சராக இருக்கும் முத்து சிவலிங்கம் தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்ற ஒரு சிபார்சை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கலாமே.

அப்படி ஒரு பிரேரணை வந்தால் எல்லாக் கட்சிகளுமே ஆதரவளிக்கத் தயாராக இருக்கின்றன.

அரைத்த மாவை மீண்டும் அரைக்காமல் ஏதாவது உருப்படியான நன்மைபயக்கும்திட்டங்களை முன்வையுங்கள். மலையகம் உங்களை வாழ்த்தும். அல்லது காலம் தான் உங்களைக் காப்பாற்ற வேண்டும்.



## சொல்லாதே இது இரகசியம்!

நகருக்கு அண்மைக் கிராமத்தில் வசிக்கும் ஒரு இஸ்லாமிய யுவதிக்கு, தோட்டத்தில் வசிப்பதாக ஒரு தோட்டத்துரையிடம் கடிதம் வாங்கிக் கொடுக்க, ஒரு பிரபல தொழிற்சங்கத்தின் பிரதேச சபை உறுப்பினர் 25 ஆயிரம் ரூபா சந்தோஷமாக வாங்கினாராம்.

ஆனால், நேர்முகப்பரீட்சையின் போது அந்த யுவதியின் விண்ணப்பத்தில் தோட்டத்துரை உறுதிப்படுத்தாததினால் அந்த போலியான கடிதம் நிராகரிக்கப்பட்டதாம். எப்படியோ செலுத்திய பணத்தில் பாதியை சிரமப்பட்டு வசூலித்துவிட்டாராம் யுவதி.

அதேவேளை தொண்டர் ஆசிரியை ஒருத்தியுடன் குஷியாக இருந்து விட்டு இப்படி போலியான கடிதத்துடன் அவரை அனுப்பிவைத்தாராம் மஞ்சள் தோட்டம் என்பதை சிங்களத்தில் கூறினால் வரும் நகரப்புற தோட்டப் பாடசாலை அதிபர் ஒருவர்.

பாவம் அந்த தோட்டப் பாடசாலை தொண்டர் ஆசிரியையின் விண்ணப்பமும் எடுபடவில்லையாம்.

இந்தத் தொண்டர் ஆசிரியைதான் அந்த யுவதிக்கும் புரோக்கராக இருந்தவராம். அந்த யுவதி இழந்த பணத்தில் பாதியையாவது திரும்பப் பெற்றுக் கொண்டார்.

ஆனால், இந்தத் தொண்டர் ஆசிரியை இழந்ததை எப்படிப் பெறப்போகின்றார்? தொண்டு செய்வதற்கும் ஒரு விவஸ்த்தை வேண்டாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமச்சீரற்ற மார்பக வளர்ச்சி நோயின் அறிகுறியா?

**கேள்வி:**— பெண், வயது 21. எனது வலது பக்க மார்பகம் இடது பக்க மார்பகத்தைவிடப் பெரிதாக உள்ளது. வலி — வேதனை ஒன்றும் இல்லை. இது சாதாரண தேக நிலையா அல்லது நோயா? கருத்தடை மாத்திரை உபயோகிப்பதால் மார்பகம் பெரிதாகுமா?

பதில்:— மார்பகம் ஒன்று பெருத்திருந்தால் முதலில் அதில் கட்டி, அல்லது திரட்சி ஏதாவது இல்லை என்பதை தகுந்த வைத்தியரைக் கொண்டு பரிசோதித்துக் கொள்ள வேண்டும். உங்களுக்கு கொழும்புக்கு வர வசதி இருந்தால் சில தனியார் வைத்திய நிலையங்களில் MAMMOGRAM என்றொரு பரிசோதனை உள்ளது.

இது மார்பகத்தில் புற்றுநோய் வளர்ச்சிக்கு ஆரம்பங்கள் ஏதாவது உள்ளதா என்று சோதிக்கும் பரிசோதனையாகும். இதனை நீங்கள் மேற்கொண்டால் நல்லது. இவ்வாறு பரிசோதனை செய்து ஒன்றுமில்லை என்றால் பயப்படாதீர்கள்.

எங்கள் உடம்பில் வலது பாதியும் இடது பாதியும் சரிசமமாக இருக்காது. இதனைத் தான் அன்றே சித்தர்கள் — அர்த்த நாரீஸ்வரர் தேக அமைப்பு என்று பாடியிருந்தார்கள். இந்த வகையில் உடம்பில் வலது பக்கம் இருக்கும் உறுப்பு அது கண்ணாக இருந்தாலும் சரி, காதாக இருந்தாலும் சரி, அல்லது மார்பகமாக இருந்தாலும் சரி, இடது பக்கத்தில் உள்ள அதே உறுப்பைப்போல் நிச்சயம் இருக்காது. கொஞ்சம் பருமனில், வடிவத்தில், அமைப்பில் ஒருபக்க உறுப்பைவிட மற்றப் பக்க உறுப்புகள் ஒவ்வொன்றும் வித்தியாசமாகத் தான் இருக்கும். இந்த நிலைதான் மார்பகத்திற்கும். உடல் வளர்ச்சி, ஹார்மோன்கள், தாய்மை அடைதல், நிறை மாற்றங்கள் என்பன இரண்டு மார்பகங்களில் ஒரே விதமான மாற்றத்தை ஏற்படுத்தினாலும், பெருத்துள்ள மார்பகத்தில் இந்த மாற்றம் கொஞ்சம் அதிகமாகத் தெரிவதால் வித்தியாசம் தெரிகிறது. கருத்தடை மாத்திரைகள் உபயோகிப்பதால் ஒரு பக்க மார்பகம் பெருப்பதில்லை. கருத்தடை மாத்திரைகளின் உபயோகத்தினால் இரண்டு பக்கமும் ஒரே மாற்றத்தைத்தான் அடையும்.

அளவிற்கு மீறி ஒருபக்க மார்பகம் பெருத்திருந்தால் PLASTIC SURGERY மூலம் குணம் காணலாம்.

**கேள்வி:**— எனது மகன். வயது 5. ஒரு முறை வயிற்றுவலி என்று மருத்துவரிடம் கூட்டிச்சென்றபோது, அவரது பரிசோதனையில் மகனுக்கு விதைப்பையில் ஒரே ஒரு விதை மாத்திரமே இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. வயிற்றுவலிக்கு இது காரணமில்லாமலிருந்தாலும், சத்திரசிகிச்சை செய்யும் படி டாக்டர் ஆலோசனை தந்தார். இது எதனால் ஏற்பட்டது?

பதில்:— முன்னர் ஒரு கேள்விக்கு பதிலளிக்கும்போது கூறியபடி, விதைகள் வயிற்றறையினுள் உருவாகினாலும் அவை சரியான படி தமது தொழிலைப்புரிய — விந்தணுக்களை உருவாக்க—வயிற்றறையில் உள்ள வெப்பநிலை சரிவராது. எனவே, அவை இயற்கையாகவே குழந்தை பிறக்க முன்னரே விதைப்பைக்குள் இறங்கிவிடுகின்றன. சிலவேளை இந்தவிதை ஏதோ ஒரு காரணத்தால் இறங்கும் போது பாதிவழியில் அரைப்பகுதியில் பொறுத்து இறங்காமல் நின்றுவிடும். இதனை UNDES CENDED TESTIS இறங்காதவிதை என்று அழைப்பர். இன்னும் சிலருக்கு இந்த விதை விதைப்பையினுள் முற்றாக இறங்கி நிலையாக இருக்காமல் வயிற்றுக்குள்ளும் விதைப்பையுக்குள்ளும் மாறிமாறி, மேலும் கீழும் மிதந்துகொண்டு நிலையில்லாமல் இருக்கும். இதனை RETRACTILE TESTES என்பர். இந்த இரண்டு நிலைகளும் விதைக்கு நல்லதல்ல. ஏனென்றால், விதை வயிற்றினுள் உள்ள வெப்பநிலையை விட குறைவான வெப்பநிலையிலேயே தனது முக்கிய தொழிலான விந்தணு உற்பத்தியைச் செய்யமுடியும். அப்படி நிலையாக விதைப்பையினுள் இருக்காவிடின் அவை சிக்குண்டு TORSION ஆகி இரத்த ஓட்டம் தடைப்பட்டு இறப்பு ஏற்படலாம். அல்லது அடிக்கடி மேலும், கீழும் செல்வதால் காயப்படலாம். (TRAUMA) அல்லது தகுந்த ஏற்ற சூழ்நிலையில் அது இல்லாதபடியால் விபரீத வளர்ச்சி கொண்டு (TUMOR) புற்று நோய் ஏற்படலாம். எனவே, உரிய காலத்தில் இதற்குச் சத்திரசிகிச்சை செய்யப்பட்டு விதை, பைக்குள் கொண்டு வரப்பட்டு நிலையாகப் பொருத்தப்படவேண்டும். இவ்வளவு காலமாக நீங்கள் இதைக் கவனியாமல் விட்டது தவறு. இந்த சத்திரசிகிச்சை குழந்தையின் பத்து மாதத்தில் செய்யப்பட வேண்டும். இப்பொழுதும் காலம் கடந்துவிடவில்லை. உடனடியாகச் சத்திரசிகிச்சைக்கு ஆயத்தமாகுங்கள்.

**கேள்வி:**— வயது 45 ஆண். உயர்ந்த உத்தியோகத்தில் இருக்கின்றேன். எனக்கு எந்த நாளும் வயிற்றினுள் வாய்வுப் பிரச்சினை. சாப்பிட்டாலும், சாப்பிடாவிட்டாலும் வயிறு உப்பியிருக்கும். வயிற்றினுள் கடா முடாச் சப்தம். பொது இடங்களில் கூட வாயுவை அடக்க இயலாமல் வெளியேற்ற வேண்டிய சங்கடமான சூழ்நிலை ஏற்படுவதுண்டு. வாயுவின் துர்நாற்றத்தால் மற்றவர்கள் முகங் கோணும் போது நான் என் மனதினுள் கூனிக் குறுகிப் போய் விடுவேன். இதனால் பொது நிகழ்ச்சிகள், ஒன்று கூடல் நிகழ்ச்சிகள், ஏன் திரைப்படங்கள் பார்ப்பதைக்கூட தவிர்த்துவிடுகிறேன். எனக்கு நல்ல ஆலோசனை கூறி, எனது பிரச்சினை தீரவழிசொல்லவும்.



பதில்:— வாயுக்கோளாறு என்பதை FLATULENCE என்று மருத்துவர்கள் கூறுவார்கள். இந்த வாயுக்கோளாறு ஏற்படக்காரணம் சமிபாட்டுத்தொகுதியின் இறுதிப்பகுதியில் ஏற்படும் வாயு வெளிப்பாடே. இந்த வாயு வெளிப்பாடு அந்தச் சமிபாட்டுத் தொகுதியில் இறுதிப்பகுதியின் சாதாரணமாக நடைபெறும் தொழிற்பாடு. சகல மனிதருக்கும் இது ஏற்படுகின்றது. தினமும் 15 தடவையாவது சாதாரண மனிதனால் மலக்குடல் வழியாக கிட்டத்தட்ட 500 மி.லீ தொட்டு 1500 மி.லீட்டர் கொள்ளளவு ஆவி வாயு வெளியேறுகிறது. ஆனால், எம்மில் பலருக்கு இந்த வாயு வெளிப்பாடு உணரப்படுவதில்லை.

இந்த வாயுக் கோளாறு எல்லோருக்கும் ஏற்படும் சாதாரண நிகழ்வு. இதனை நிறுத்திவிடமுடியாது. ஆனால், வெளியேறும் வாயுவின் அளவையும், துர்நாற்றத்தையும் குறைக்க முடியும். பெருங்குடலில் இருந்து வெளியேறும் இந்த வாயு ஒட்சிசன், நைதரசன், காபனீரொட்சைட், ஐதரசன் மற்றும் மீதேன் வாயுக்களின் ஒரு கலப்பாகும். ஒட்சிசனும், நைதரசனும் நாம் சாப்பிடும்போது, பானங்கள் அருந்தும் போது சூழலில் உள்ள காற்றிலிருந்து எம்மால் விழுங்கப்பட்டு குடலினுள் செல்கிறது. அடுத்த மூன்று வாயுக்களும் குடலில் அல்லது இரத்தத்தில் உருவாகின்றன. மலவாசலால் வெளியேறும்வாயுக்களில் 99 வீதம் மேற்கூறிய வாயுக்களின் கலவையே. இவற்றிக்கு மணம் இல்லை. நார்ச்சத்துக் கொண்ட உணவுகள், மாச்சத்து உணவுகள், லக்டோஸ் எனப்படும் பாலில் உள்ள சீனிச்சத்து என்பவை குடலில் வாயு ஏற்படக் காரணமாகின்றன. இந்த உணவுகள் சிறுகுடலில் சமிபாடு அடையாமல் பெருங்குடலை அடையும்போது, அங்குள்ள பற்றீரியாக்களால் புளிப்படைந்து (Ferment)

> இலவச மருத்துவ ஆலோசனைகளை
> 'சுடர் ஒளி மூலம் வழங்குகிறார்
> டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
> நீங்கள் கேள்விகளை
> அனுப்பவேண்டிய முகவரி
> இலவச மருத்துவ ஆலோசனை
> 'சுடர் ஒளி'
> 85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
> கொழும்பு – 14

வாயுக்களை வெளிவிடுகின்றன. இத்தகைய உணவுகளை நாம் குறைத்து உண்பதன் மூலம் வாயு உருவாகுவதைக் கட்டுப்படுத்தலாம். இந்த மணமில்லாத வாய்வுக்குத் துர்நாற்றத்தைக் கொடுப்பது பெருங்குடலில் சிறிதளவில் காணப்படுகின்ற கந்தகம் (SULPHUR) உள்ள வாயுக்களே. இறைச்சி வகைகள், முட்டை என்பவை குடல்வாயுக்களில் கந்தகச் செறிவை அதிகரிக்கின்றன.

இத்தகைய உணவுகளை குறைத்து உண்பதாலோ, தவிர்ப்பதாலோ துர்நாற்றத்தைப் பெருமளவில் குறைக்கலாம். அதிகளவில் வாயு வெளியேறுவதாக கருதுபவர்கள், SIMETHECONE கலந்த மருந்துக்கள், ACTIVATED CHARCOAL என்பவற்றைப்பயன் படுத்தலாம். இவை இந்த துர்நாற்றம் உண்டாவதைத் தடை செய்யும்.

# சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 7.05 | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 7.30 | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | சங்கீதமேட் 7.55 அன்பு மடல் | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா 7.55 அன்பு மடல் |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | ஆங்கில காட்டூன் |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | சிறுவர் நிகழ்ச்சி |
| 9.00 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | ஹோலிவூட் மூவி சிறுவர் | அரட்டை அரங்கம் |
| 9.30 | இயற்கையுடன் ஒரு நிமிடம் கொமடி டைம் 9.55 | இயற்கையுடன் ஒரு நிமிடம் கொமடி டைம் 9.55 | இயற்கையுடன் ஒரு நிமிடம் கொமடி டைம் 9.55 | இயற்கையுடன் ஒரு நிமிடம் கொமடி டைம் 9.55 | இயற்கையுடன் ஒரு நிமிடம் கொமடி டைம் 9.55 | குட்டி சுட்டி | ஞாயிறு சமையல் |
| 10.00 | பெப்சி உங்கள் சொய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப்பாட்டு | நம்ம நேரம் | கொண்டாட்டம் | களம் | சப்தஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கானங்கள் | இசைத் தென்றல் | திரை விமர்சனம் | டாப்10 மூவிஸ் |
| 11.00 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | இப்படிக்கு நீங்கள் | கோல்டன் மூமன்ஸ் ஒப் கிரிகெட் |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | திரை வானம் | சண்டே சமையல் | மங்கையர் நேரம் | மங்கை | ரிலாக்ஸ் டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள் (எம்.ரி.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | ரிலாக்ஸ் டைம் | ஸ்டார் ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 1.30 | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 2.00 | (காதல் காவியம்) | (அதிரடி) | (நகைச்சுவை) | (கிளசிக்) | (குடும்பம்) | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 2.30 | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்திதிரைப்படம் | சக்தி திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 3.00 | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 3.30 | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 4.00 | டிஸ்னி வேல்ட் | டிஸ்னி வேல்ட் | மை டியர் பூதம் | மை டியர் பூதம் | சக்தி திரைப்படம் | விக்கிரமாதித்தன் | சூப்பர் 10 |
| 4.30 | கார்ட்டூன் நிகழ்ச்சி | கி—மேன் | கிட்ஸ் சோன் | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | விக்கிரமாதித்தன் அன்பு மடல் 4.55 | ஒப்போடு பாகம் 02 |
| 5.00 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் ஸ்பெஷல் | சுப்பர் காட்சிகள் | அரும்புகளின் ராகங்கள் | நகைச்சுவை நேரம் | என்றும் கலாட்டா |
| 5.30 | இசைத்தென்றல் | இசைத்தென்றல் | இசைத்தென்றல் | இசைத்தென்றல் | இசைத்தென்றல் | ஈ— சொயிஸ் | சூப்பர் காட்சிகள் |
| 6.00 | களம் பாகம் 3 | இளைய கானம் | விசேட நிகழ்ச்சி | பாடல்கள்/இளந்தளிர் 6.15 | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிக்கட் | புத்தம் புதிசு | அன்பு மடல் மறுஒளிபரப்பு |
| 6.30 | மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | திமி தக்க தா | மின்னல் நேரடி ஒளிபரப்பு |
| 7.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | மியுசிக்கல் | மின்னல் நேரடி ஒளிபரப்பு |
| 7.30 | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | மியுசிக்கல் | வேலன் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | ருத்ர வீணை | இளைய கானம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### வடபுலத்தார் வடிப்பது நீலிக் கண்ணீர் என மலையகத்தார் மணி ஆட்டுகிறார்

அண்மையில் அதி உயர் மன்றில் தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக மலைச்சந்திரன் திடீரென ஒரு பிரேரணையைக் கொண்டு வந்து விட்டாராம்.

இதனால் மலையகத்தின் ஏகப்பிரதிநிதிகள் என்று கொடிபிடித்துக் கொண்டிருப்பவர்களுக்கு ஒரே கலக்கமாகிவிட்டதாம்.

'ஆதரித்துப் பேசினால் மலைச்சந்திரனுக்கு வாசியாகிவிடும், எதிர்த்துப் பேசினால் தோட்டப் பக்கம் போகமுடியாது; மொத்தோ மொத்து என்று மொத்திவிடுவார்கள். என்ன செய்வது?' என்று யோசிக்க ஆரம்பித்து விட்டனராம்.

புதுமுகமான பதுளையாரும், அனுபவகாரரான ஹட்டனாரும் இப்படிக் கிசுகிசுத்துக் கொண்டனராம். 'நாம் ஆரம்பம் முதலே ஐயாவுக்கு விசுவாசமானவர்கள். அதனால் நாம் இதில் மாட்டிக் கொள்ளக் கூடாது. ஏற்கனவே மின்னலடித்து கண்பார்வை பாதிக்கப்பட்டுள்ளது. திரும்பவும் ஏன் வம்பு? மெதுவாகப் புரட்சி மணியாரிடம் பந்தைத் தள்ளிவிடுவோம்' என்று நடந்து கொண்டே சதித்திட்டம் தீட்டி விட்டனராம்.

பாவம் இந்தப் புரட்சி மணியாரும் பந்து கையில் கிடைத்தவுடன் மகிழ்ச்சியில் எந்தப் பக்கம் பந்தை எறிவது என்று முதலில் தடுமாற்றம் அடைந்தாராம்.

ஒருவாறு சமாளித்துக் கொண்டு சம்பள உயர்வு கிடைக்க வேண்டும் என்று கூறியதுடன், எவர் எப்படிப் பிரயத்தனம் எடுத்தாலும் கடைசியில் தீர்மானிக்கப் போவதும், சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுக்கப் போவதும் நாங்களே என்றாராம்.

மலைச்சந்திரனின் பிரேரணையை தொழில் அமைச்சர், பெருந்தோட்டத்துறை அமைச்சர் மட்டுமல்ல தேயிலைத் தொழிற்சாலைகளை தீ வைத்துக் கொளுத்திய ஜே.வி.பி.யினர் கூட ஆதரித்தனர். சம்பளஉயர்வுவழங்க வேண்டும் என வலியுறுத்திக்கூறினர். ஆனால், இந்தப் புரட்சிமணியின் கண்களுக்கு வடபுலத்தார்கள் பேசியது மட்டும் தான் தெரிந்ததாம்.

அங்கேயும் கூட அவர் என்ன சொன்னார் என்றால், 'மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்காக வடபுலத்தார்கள் நீலிக் கண்ணீர் வடிக்கின்றனர்' என்றாராம்.

''என்ன செய்வது? நாய் வலை நிமிர்த்தவே முடியாது'' என்கிறார் ஒரு மூத்த தொழிற் சங்கவாதி.

### பொய்யா மொழிப் புலவர் முத்து முத்தாய் கக்குகின்றார்

''என்னம்மா இது பொய் சொல்லுவதற்கும் ஒரு அளவு வேண்டாமா? இப்படியா வண்டி வண்டியாக இறக்குவது? முத்து முத்தானவர் வாய்க்கு வந்தபடி அளந்து தள்ளுகின்றாராம். இது தான் கொடுமையாக இருக்கு'' என்று ஆதங்கப்பட்டார் அந்தக் கல்விமான்.

''என்ன ஐயா சொல்லுறீங்க, கொஞ்சம் விவரமாத்தான் சொல்லுங்களேன்!'' என்றார் நண்பர்.

''என்னசார் இன்னுமா ஒங்களுக்குப் புரியவில்லை. மலையகம் எங்கும் நடந்த நேர்முகப் பரீட்சைகள் பற்றித் தெரியும் தானே. ஒவ்வொரு விண்ணப்பதாரிகளினதும் கல்வித் தராதரப் பத்திரங்கள், மற்றும் திறமைகளுக்கான சான்றிதழ்கள், தோட்டத்துரைமாரின் வதிவிட அத்தாட்சிக் கடிதம் இப்படி எல்லா விதமான ஒரிஜினல் சான்றிதழ்களையும் பரீட்சித்துப் பார்த்தோம்.''

''அது என்ன அப்படி உறுதியாகப் பார்த்தோம் என்று கூறுகின்றீர்கள்?''

''வேறு என்ன; நானும் ஒரு பிராந்தியக் கல்வி அதிகாரி. நேர்முகப் பரீட்சை நடத்தியவர்களுள் நானும் ஒருவன். எந்த விதமான தில்லு முல்லுகளும் இல்லாமல் நேர்மையான முறையிலேயே மாவட்ட ரீதியாக பெயர்ப்பட்டியல்களை அமைச்சுக்கு அனுப்பினோம். இப்படித் தெரிவு செய்யப்பட்ட பட்டியலைத்தான் அமைச்சரும், செயலாளரும் ஜனாதிபதியிடமே ஒப்படைத்தனர். அந்த லிஸ்ட் ஜனாதிபதியின் கைகளில் இருக்கின்றது.'' என்றார் அந்தக் கல்விமான்.

''என்ன ஐயா! இது ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டதாக நீங்கள் கூறுகின்றீர்கள். ஆனால், புதுசா வந்தவரோ அப்படி எதுவுமே இல்லை என்கிறாரே.''

''அதுதான் சார் சொல்கிறேன். தன் அமைச்சில் உள்ள கொம்பியூட்டரையே இயக்க முடியாத மனுசன், வெவரம் தெரியாம எதை எதையோ உளறிக் கொட்டுகின்றார். உதவி செய்யாவிட்டாலும் உபத்திரவமாவது செய்யாமல் இருக்கனும். ஆனால், இந்தப் புது ஆள் 'உள்ளதும் போச்சுடா நொல்லைக் கண்ணா' என்ற மாதிரி ஒரு புள்ளைக்கும் வேலை வாய்ப்பையே கொடுக்கவிடாமல் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிப்புடுவார் போல இருக்கே'' என்று தலையில் அடித்துக் கொண்டார் அந்தக் கல்விமான்.

அவர் தலையில் அடித்துக் கொள்ளக் கூடாது. இப்படியான ஆளுங்களை எல்லாம் ஓட்டுப் போட்டு அனுப்பினாங்களே! அவுங்க மண்டைகளை உடைக்கனும்.

### தனித்துவத்தின் கோரிக்கையும் ஒரு சுய நலம் தானாம்

மரநாயகனும் தனித்துத் தலைவருமானவர் தேர்தல் ஆணையாளருக்குக் காரசாரமான கடிதம் ஒன்றை அனுப்பினாராம். ஏன் தெரியுமா? வடக்கு – கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை கால வரையறை இன்றி பின்போட்டுள்ளாராம் தேர்தல் ஆணையாளர்.

இதனால் ஆத்திரமடைந்த தனித்துவநாயகன் தேர்தல் ஆணையாளரின் செய்கையைக் கண்டித்துக் கடிதம் எழுதிவிட்டார்.

இப்படி அடிக்கடி தேர்தல்களைப் பின்போடுவது நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளையே மறுக்கும் ஒரு செயல் என்றும் குறிப்பிட்டுள்ளாராம்.

இதுவெல்லாம் மக்கள் மீது கொண்ட பாசத்தினால் அல்ல என்றார் 'அன்னை' மடியில் தவழ்பவர்.

''வேறு என்ன சார் இந்த அம்மணியோ அடிக்கடி தேர்தல்களை நடத்தி கஜானாவையே காலி செய்து விட்டார். அப்படி கஜானா வரண்டு போய் இருக்கும் போது இன்னும் ஒரு தேர்தலா என்ற உயர்ந்த நோக்கத்துடன் தான் ஆணையாளர் தேர்தலைப் பின் போட்டிருக்கார். அப்படி இருக்க தனித்துவ நாயகன் ஏன் தடுமாறுகின்றார்.''

''அவருடைய தடுமாற்றத்துக்குக் காரணம் இருக்கு. ஒரு தேர்தலுக்கு வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வேளையில் அப்பிரதேசத்தில் புதிதாக எந்த ஒரு கட்சியும் பதிவு செய்ய முடியாது.

இந்த நிலையில் இப்போது தேர்தல் நடத்தினால் புதிய கட்சிகள் எதுவும் போட்டியிட முடியாது. தனது கட்சி மட்டும் போட்டியிடலாம் என்பது தான்.

ஆனால், இப்படியே பின் போடப்பட்டு வந்தால் ஒரு வேளை வேட்பு மனுக்களும் ரத்துச் செய்யப்பட்டுவிட்டால் புதிய கட்சிகளும் களம் இறங்கிவிடுமே என்ற சுயநலம் தான் தனித்துவத் தலைவரின் அலர்ஜிக்கு காரணமாம். அது அப்படித்தான் இருக்குமோ.

### மண்மாதாவைக் காப்போம் என்ற போஸ்டர் வீரர்களுக்கு பே! பே!

'அடுத்த நாட்டவருக்கு அரை அங்குல நிலத்தையும் கொடுக்கமாட்டோம். தாய் மண்ணைக் காப்பாற்ற தலையைத் தியாகம் செய்யவும் தயங்க மாட்டோம்' என்று வீரவசனம் பேசிய சிவப்புச் சட்டை போஸ்டர் காரர்கள் இப்பொழுது தலைக்கு உள்ளே இருந்ததை இழந்து விட்டார்கள் எனக் கிண்டலடித்தார் முன்னாள் காணிக்காரரான டாக்டர்.

''என்ன டாக்டர் அப்படிக் கூறி விட்டீர்கள்?'' என்று சீண்டினார் நண்பர்.

''எப்படிசார் இவுங்க முட்டாள் தனத்தைப் பார்த்துச் சிரிக்காமல் இருப்பது. வெளிநாட்டவர் காணி பெற்றால் நூறு வீத வரி விதிக்கப்பட வேண்டும் என்ற சட்டமூலம் அதி உயர் மன்றத்தில் வாதம் பண்ணப்பட்ட போது இந்த போஸ்டர் வீரர்கள் ஆள் ஆளுக்கு காட்டுக் கூச்சல் போட்டுக் கத்தினர். வாய்கிழியப் பேசினர். பச்சைக் கட்சியினரும் எதிர்க்கவில்லை சட்டம் பாசானது.

ஆனால், நடந்தது என்ன தெரியுமா? நிதி அமைச்சர் விரும்பினால் முதலீட்டுச் சபையின் சிபார்சுடன் ஒரு சதமேனும் வரி அறவிடாமல் வெளிநாட்டவர்களுக்கு காணிகளை வழங்க முடியும் என்ற உள்விதி ஒன்றைப் பொடி வைத்து ஊதிவிட்டாராம் நிதிக்குப் பொறுப்பான டாக்டர்.

இதை வைத்துக் கொண்டுதான் ஹைதராபாத் கம்பெனிக்கு பரங்கியா கும்புரயை தாரை வார்த்து விட்டதோடு, போஸ்டர் காரர்களுக்குப் பே! பே! காட்டி விட்டாராம். இது எப்படி இருக்கு.

## சொற்சிலம்பம் போட்டி இல. 128

சொற்சிலம்பம் 128 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் ஒக்டோபர் 10 ஆம் திகதி ஆகும். விடைகள் ஒக்டோபர் 17 ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஒக்டோபர் 24 ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.126க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 126

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 பி | 2 ர | 3 கா | 4 ச | ம் | ■ | 5 சா | 6 தி |
| 7 கு | ம் | ப | ம் | ■ | 8 ச | வு | ரி |
| ■ | 9 மி | ன் | சா | 10 ர | ம் | ■ | கை |
| 11 ச | ய | ■ | 12 ர | ம் | ப | ம் | ■ |
| 13 க | ம் | 14 ப | ம் | ■ | ந் | ■ | 15 க |
| வா | ■ | து | ■ | 16 அ | தி | 17 ப | ன் |
| 18 ச | ர் | க் | 19 க | ரை | ■ | 20 த | னி |
| ம் | ■ | 21 கு | டா | ■ | 22 சி | வி | கை |

## சொற்சிலம்பம் - 125 பரிசு பெறுவோர்.

1. செல்வி. மு. தர்மினி,
41/2, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

2. திருமதி. எம். சீ. ஆரோக்கிய நாதர்,
8ஆம் வாய்க்கால்,
கிளிநொச்சி.

3. ப. அபிராமி,
37/2, கணேசபுரம்
கிளிநொச்சி.

### பாராட்டுப் பெறுவோர்

1. வி. இராஜவினோதன்,
வெல்லிக்கம் தோட்டம்,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.
2. தெ. ஜனந்தன்,
5ஆம் வட்டாரம்,
குமுளமுனை,
முள்ளியவளை.
3. ரீ. சந்திரமோகன்,
நேரிய குளம்,
வவுனியா.
4. எஸ். சண்முக லிங்கம்,
71/9, காலி வீதி,
தெகிவளை.
5. த. தர்மினி,
உக்குளாங்குளம்,
வவுனியா.
6. மா. மயூரதன்,
3ஆம் வட்டாரம்,
முள்ளியவளை.
7. க. நிரஞ்சன்,
22, பிரதிபிம்பராம வீதி,
களுபோவில.
8. ம. துஷ்யந்தினி,
470, 6ஆம் வட்டாரம்,
இராமநாதபுரம்,
கிளிநொச்சி.
9. வ. மன்னர் அன்ரனி,
16, சென்ஜேம்ஸ் மேற்கு வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.
10. வி. கோமிளா,
பாரதிபுரம்,
கிளிநொச்சி.

## சொற்சிலம்பம் போட்டி இல. 128

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ | 4 | 5 |
| | ■ | 6 | | ■ | 7 | | |
| 8 | 9 | | | 10 | ■ | 11 | |
| 12 | | ■ | 13 | | 14 | | ■ |
| | ■ | 15 | ■ | 16 | | ■ | 17 |
| ■ | 18 | | 19 | | ■ | 20 | |
| 21 | | | | ■ | 22 | | |
| 23 | | ■ | 24 | | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 128

**இடமிருந்து வலம்**

1. மயிர்க்கொட்டி போன்றவற்றை இரையாக்கும் பறவை.
4. உள்.
6. மறி.
7. வெட்டும் ஆயுதம்.
8. ஒன்றை சுக்குநூறாக்கி அழிப்பு.
11. நிலம்.
12. ஏழ்மை/ வறுமை.
13. வாழ்க்கை நெறியைப் போதித்தவர்.
16. செல்வம்/ தமிழ் 'மிஸ்டர்'.
18. ஒரு மரக்கறி இனம்.
20. அடவி.
21. அமைச்சன்.
22. தீட்டும் கருவி.
23. பெருங்கதை.
24. தாம்பூலத்துக்கும் சேர்ப்பர்; [illegible]

**மேலிருந்து கீழ்**

1. தூய எம் மொழி.
2. உள்ளீடு இல்லாத அற்பம்.
3. அகங்காரம்/ எரிவு/ கொதிப்பு/ சினம்.
4. ஒரு வாசனைப் பொருள்.
5. நாற்காலி.
9. வாயால் கவ்வு.
10. மகள்.
14. மரம்.
15. தந்திரோபாயம்.
17. ஊர்வன வகையைச் சேர்ந்தது. பிடித்தால் விடாது.
18. இதுவானாலும் கசக்கிக் கட்ட வேண்டும்.
19. பயன்படுத்தப்படாத நிலம்.
20. உறைப்புச் சுவை.
21. பெரிய.
22. இந்தியாவில் பணத்தின் சிறிய அளவு. ரூபாவுக்குப் பதிலான பெறுமதி இது. இப்போது இச் சொல்லின் பாவனை அருகி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்

# தென்னாபிரிக்க அணி இந்தியா வரத் தயக்கம்

விசாரணைக்குப் பயந்து தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியினர்இந்தியா வரத் தயக்கம் காட்டுகிறார்கள் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இந்த ஆண்டு இறுதியில் இந்தியாவிற்குச் சுற்றுப் பயணம் செய்து 2 டெஸ்ட் ஆட்டங்களை ஆட வுள்ளது. அதிக எதிர்பார்ப்பை உண்டாக்கி யிருக்கும் இந்தத் தொடரில் இருந்து முன் னணி தென்னாபிரிக்க வீரர்கள் அனை



வரும் விலக முடிவு செய்திருக்கிறார்கள்.

கடைசியாக கடந்த 2000ஆம் ஆண்டு குரோன்ஜி தலைமையிலான தென்னா பிரிக்க அணியே இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடியது.

அப்போது அந்த அணி மீது சூதாட்ட சர்ச்சை கிளம்பியது. பின்னர் குரோன்ஜியி டம் அந்நாட்டுக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நடத்திய விசாரணையில் சூதாட்டத்தை அவர் ஒத்துக்கொண்டார். அதனால் அவ ருக்கு கிரிக்கெட் விளையாட ஆயுள்தடை விதிக்கப்பட்டது. இதன்பின்னர் அவர் விபத்தில் சிக்கி மரணம் அடைந்தார். இந்த சூதாட்டப்பிரச்சினையில் கிப்ஸ் மற்றும் போஜே ஆகியோர்களும் மாட்டினர். இவர் களுக்கும் தென்னாபிரிக்க கிரிக்கெட் கட்டுப் பாட்டுச்சபை 6 மாதத்தடை விதித்தது.

இந்தப்பிரச்சினை தொடர்பாக டெல்லி பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். சம்பந்தப்பட்ட வீரர்கள் இந்தியா வரும் போது அவர்களிடம் விசாரணை நடத்தவும் முடிவு செய்திருக்கிறார்கள். இதனால், வீரர்களிடம் எந்த விசாரணையும் நடக்காது என்று உத்தரவாதம் அளிக்கும்படி தென்னா பிரிக்க கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை, இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையி டம் கேட்டுக்கொண்டது. ஆனால், இந்தியக் கட்டுப்பாட்டுச்சபை இதற்கு மறுத்து விட்டது.


இந்நிலையில், முன்னைய சுற்றுப் பயணத்தின்போது அணியில் இடம்பிடித் திருந்த பொலக், கலிஸ், குளூஸ்னர், புட்சர் ஆகியோர்களிடம் விசாரணை நடத்த வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது. எனவே, இவர்கள் இந்தியப் பயணத்தை புறக் கணிக்க முடிவு செய்திருக்கிறார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னணி வீரர் கள் அனைவரும் இவ்வாறு அணியிலி ருந்து விலகிவிட்டால் திட்டமிட்டபடி போட்டி நடக்குமா? என்பது சந்தேகமே.

இந்தப்பிரச்சினை தொடர்பாக தென்னா பிரிக்க கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை, சர்வதேசக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை யிடம் கூறி இருக்கிறது. இந்த விவகாரத்தில் ஐ.சி.சி. முடிவு எதனையும் அறிவிக்க வில்லை. இந்திய அரசு எடுக்கும் முடிவில் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தலையிட எந்த அதிகாரமும் கிடையாது. எனவே, இந்தியா– தென்னாபிரிக்க அணிகளுக் கிடையிலான கிரிக்கெட் தொடர் நடப்ப தில் இழுபறி நிலை எட்டியுள்ளது.

# சினிமாப் பித்துப்பிடித்துள்ள டெனிஸ் வீராங்கனை செரீனா

அமெரிக்க டெனிஸ் வீராங்கனையான செரீனா வில்லியம்ஸை ஒரு சினிமாப் பைத்தியம் என்று கூடச் சொல்லலாம். அந்த அளவுக்குச் சினிமாவில் நடிக்க வேண்டும் என்று வெறித்தனமாக இருக்கிறார். டெனிஸ் உலகில் அக்கா, தங்கையாக தனி முத்திரை பதித்தவர்கள் வீனஸ் – செரீனா வில்லியம்ஸ் சகோதரிகள். இவர்கள் டெனிஸ் உலகில் நீண்டகாலமாக முதல் இரண்டு இடத்தைத் தங்களுக்குச் சொந்த மாக்கிக் கொண்டிருந்தனர். இந்த விளை யாட்டின் மூலம் இவர்கள் சம்பாதித்தது பலகோடி.

டெனிஸ் ஆட்டத்தின் உச்சத்தில் இருந்த போது, வீனஸ் ஆடை அலங்காரம் மற்றும் வீட்டு அலங்காரம் போன்ற துறைகளில் ஆர்வம் காட்டினார். டெனிஸ் பந்தயங்க ளுக்கு நடுவே 'மொடலிங்' மற்றும் 'இண்டீ



ரியர்' தொழில்நுட்பம் தொடர்பான படிப் பையும் அவர் முடித்தார்.

செரீனாவுக்கு டெனிஸ் மட்டையை விட நடிப்பு மீதுதான் தீராத காதல் இருந்து வருகிறது. நடிப்புப் பயிற்சி பெற்றுள்ள இவர் ஓய்வு நேரத்தில் நாடகங்களிலும், தொலைக்காட்சித் தொடர்களிலும் ஆர்வ மாக நடித்துவருகிறார்.

இருந்தாலும் ஒரு சினிமாப் படத்தில்



முழுமையான கதாநாயகியாக நடிக்க வேண்டும் என்ற இவரது ஆசை மட்டும் நிறை வேறாமல் உள்ளது. கடந்த இரு வருடங்க ளுக்கு முன்வெளிவந்த 'அனகொன்டா' படத்தில் கதாநாயகியாக நடிக்க செரீனாவுக் குத்தான் முதலில் வாய்ப்புக்கிடைத்தது. ஆனால், அந்த நேரத்தில் டெனிஸ் பந்தயங் களில் ஆட ஏற்கனவே ஒத்துக்கொண்டு இருந்ததால் அவரால் நடிக்க முடியாமல் போனது.

'அனகொன்டா' படத்தில் நடிக்க முடியா மல் போன வருத்தம் செரீனாவுக்கு இன்ன மும் இருக்கிறது. ''சினிமாவில் கதாநாயகி யாக நடிக்க வேண்டும் என்று தீவிரமாக இருக்கிறேன். அந்த ஆசை விரைவில் நிறை வேறும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது'' என்று கண்களில் கனவுகளுடன் கூறுகிறார் செரீனா.

இந்த நிலையில் 'விம்பிள்டன்' என்ற பெயரில் தயாராகும் படம் ஒன்றில் நடிக்க செரீனாவுக்கு அழைப்பு வந்தது. ஆனால், அதை ஏற்க மறுத்துவிட்டார். என்ன காரணம்? என்று கேட்டதற்கு – 'அப்படத்தில் டெனிஸ் வீராங்கனை செரீனாவாக நடிக்கும்படி கேட்டார்கள். எனக்கு அது பிடிக்கவில்லை. அதனாலேயே அப்படத்தில் நான் நடிக்க வில்லை' என்று கூறினார்.

# கால்பந்து வீரர் பெக்காமின் திருமணவாழ்வில் விரிசல்

இங்கிலாந்து கால்பந்து அணித்தலைவர் டேவிட் பெக்காம் – 'பொப்' இசைப் பாடகியும், அவரது மனைவியுமான விக்டோரியா பெக்காமின் திருமண வாழ்கை தற்போது மீண்டும்ஆட்டம்காணத்தொடங்கிஇருக்கிறது.

கால்பந்து ஆட்டத்தில் பெக்காமின் திறமை குறைந்தமை, முன்னாள் உதவி யாளர் ரெபேக்காவுடன் அவர் வைத்திருந்த தவறான உறவு, பிரபல சட்டத்தரணி



ஒருவரின் மகள் சாரா என்ற பெண்ணுடன் ஏற்பட்ட தொடர்பு போன்றவை பெக்காம் – விக்டோரியா திருமண உறவில் விரிசலை ஏற்படுத்தியுள்ளன.

இரு தரப்பு நண்பர்களின் தீவிர சமரச முயற்சிக்குப் பிறகு கருத்து வேறுபாடுகளை மறந்து தம்பதிகள் ஒன்று சேர்ந்தனர். இந்நிலையில், விக்டோரியா மீண்டும் கர்ப்பம் ஆனார். இந்தத் தம்பதிகளுக்கு ஏற்கனவே 5 வயதில் புரூக்ளின் என்ற மகனும், 2 வய தில் ரோமியோ என்ற மகளும் உள்ளனர்.

தற்போது மீண்டும் கர்ப்பம் ஆகியுள்ள விக்டோரியா வுக்கு எதிர்வரும் மார்ச் மாதம் குழந்தை பிறக்கும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

இந்த நிலையில் கண வன் – மனைவி இடையே மீண்டும் பிணக்கு ஏற்பட் டுள்ளது. ''பெக்காமின் தோற்றம் கிறுக்குத்தனமாக உள்ளது. உடலில் பல இடங்களில் பச்சை குத்தி இருப்பதை என்னால் சகிக்க முடியவில்லை. எதற்கு எடுத்தாலும் எரிந்து விழுந்து கோபப்படுகிறார். எங்களது உரையாடல்கள் எல்லாம் சண்டையில் தான் முடிகிறது'' என்று விக்டோரியா தனது நண் பர்களிடம் புலம்பி இருக்கி றார்.

கால்பந்து ஆட்டங்க ளில் திறமையை வெளிப் படுத்த இயலாமை காரண மாகவே, பெக்காம் மன விரக்தி அடைந்து கோபத் தில் கத்துகிறார். தன் மீதுள்ள தவறை ஏற்க மறுத்து மற்றவர்கள் மீது அவர் எரிந்து விழுகிறார். இதுதான் கணவன் – மனைவி உறவைப் பாதித் துள்ளது. இதே நிலை நீடித் தால் அது விவாகரத்தில் முடிந்தாலும் ஆச்சரியப்படு வதற்கில்லைஎன்கின்றனர் இருதரப்பு நண்பர்கள் வட் டாரம்.


## உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

எப்பேர்ப்பட்ட வியாதியானாலும் சரி, உடனே என்னை வந்து சந்தியுங்கள்

K. சிவசுப்பிரமணியம்
M.I.H.Ind-S.M.P.



எவ்வளவு நாட்பட்ட வியாதியானாலும் சரி, கால தாமதம் செய்யாமல் கீழ்க் கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசி யுங்கள். நேரில் வரமுடியாது போனால் கடிதமூலம் தெரி வித்துக் கொள்ளுங்கள்.

ஆஸ்மா, க்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி, சிரங்கு, பாண்டு, சோகை, காக்கை வலிப்பு, வாதம், நீரிழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்புவலி, நெஞ்சு எரிவு, குடல் வாய்வு, நரம்புத்தளர்ச்சி, வீரியக்குறைவு, இரத்தமின்மை, சொப்பன ஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன், பின் காணுதல், சூதகவலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

RAJA BAJEEKARANA (Rasayana) LEGIUM
ராஜ வஜீகரண (ரசாயன) லேகியம்

(முஸ்லிம் முறைப்படி ஆட்டு மாமிசத்தில் பக்குவமாய் தயாரிக்கப்பட்டது)



சாலாமிசிரி, பாதாம் பருப்பு போன்ற விலையுயர்ந்த மருந்து கள் சேர்த்துத் தயாரானது. உல்லாச வாழ்விற்கு உறுதுணையானது. ஸ்திரி, புருஷர்களின் பலவீனங் களைப் போக்கி, தளர்ந்த நரம்பு களுக்கு முறுக்கேற்றி, சுறுசுறுப் பையும், தேகாந்தியையும் உண் டாக்க வல்லது. உடல் பூரிக்கும். எலும்பும் தோலுமானவர்களின் சரீரத்தை ஆச்சரியப்படத்தக்க வகையில் புஷ்டியாக்கும். கணைச் சூடு தணியும், மூலச்சூட்டைப் போக்கும், இருமல், மார்பு, இடுப்பு வலி, கால், கை நடுக்கம் மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த ரசாயனம் இதுவே. உடல் பருத்தவர்களுக்கும், நீரிழிவு, பிளட்பிரஷர் உள்ளவர் களுக்கும் சிறுவர், சிறுமியருக்கும் சிறந்தது.

நாட்பட்ட பீனிசம், இளைப்பு, இருமல், மூல ரோகங்கள் உள்ளவர்களும் பயமின்றி பலனடை யலாம். பத்தியமில்லை.

500 gram 300/-, 250 gram 150/-
வி.பி.பி. ஆடர்கள் கவனிக்கப்படும்.

வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் 12 மணி வரையிலும் வைத்தியரைச் சந்திக்கலாம்.

Ayur Dr. K. Sivasubramaniam, முருகானந்தா வைத்தியசாலை
G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கட், மீன்கடை மேல் (நிலமாடி)
கொழும்பு – 11. Tel: 2384645.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அப்பா

''பருத்தித்துறை பரியாரி என்ன சொன்னவர்?''

''என்னை மகரகம புற்றுநோய் ஆஸ்பத்திரிக்குப் போகட்டாம்''

''ஆ...! ஏனாம்.''

''தான் தந்த மருந்துகளுக்கு ஒரு மாற்றத்தையும் காணேல்லையாம்....''

''அதுக்காக?''

''அங்கை சோதித்துப் பார்த்தால்தானாம் நோய் என்ன எண்டு விளங்குமாம்.''

''கடவுளே...! அப்பிடி என்ன நோய்? புற்றுநோயாக இருக்குமோ? ஐயோ! நாம் என்னபாவம் செய்தோம். செய்த புண்ணியம் எல்லாம் எங்கே போயிற்று!''

''அப்பிடிச் சொல்லாதை; நடக்கிறது நடந்தே தீரும்...''

''அப்ப என்ன செய்யப் போறியள்?''

''நாளைக்கு மகரகம ஆஸ்பத்திரிக்கு போகவேணும். பரியாரியார்; டொக்டர் பசுபதிக்கும் கடிதம் தந்துள்ளார்.... பிள்ளையைக் கவனமாகப் பார்த்துக்கொள்..''

''வரக்கனநாள் ஆகுமோ..''

''ஓம்.... எட்டுநாள்.''

''எட்டுநாள் எனக்கு எட்டுயுகம் போலை இருக்கப்போகுது....''

''அப்போ, நானும் பிள்ளையும் உங்களோட வாறம்.''

''இல்லை; வாரணனுக்கு பிரயாணம் ஒத்துப்போகாது; நீங்கள் அலைய வேண்டாம்... எனக்குச் சுகம் வந்துவிடும்.''

ஆம்.. இது என்வாழ்வில் ஆறுவயதுப் குழந்தைப் பருவத்தில் மனதைப்பாதித்த நினைவழியா நிகழ்வு..... பசுமரத்தில் ஏற்றிய ஆணிபோல என்பிஞ்சு உள்ளத்தில் ஊடுருவிப் பதிந்த சம்பவம்.

எனக்கு வயது ஏறி அனுபவம் கூடக்கூட கோடிக்கணக்கான புதுப்புது அர்த்தங்களை வாழ்வில் புகட்டிக் கொண்டிருக்கும்; படிப்பினையூட்டும் இந்த நிகழ்வு என்உடலோடும், உதிரத்தோடும் சங்கமமானதொன்று.... ஒவ்வொரு ஜீவராசிகளுக்கும் முதலில் பதியும் 'பதிவுகள்' காலத்தால் அழிக்க முடியாதவை. அதே போல்தான் எனக்கு இந்த நிகழ்வு என்னைப் பெற்றெடுத்த தாயும் தந்தையும் பேசிக்கொண்ட அந்த வார்த்தைகள்.... என்றும் என் வாழ்வில் எனக்குப் புதுப்புது அர்த்தங்களை அனுபவரீதியாகத் தந்து கொண்டிருக்கின்றன.

அவர்களின் நடைமுறைச் செயற்பாடுகள் எனது சிந்தனையில் திரைப்படமாக ஓடிக்கொண்டிருக்கின்றன.

அம்மாவின் பொறுப்பில் பணத்தை ஒப்படைக்கும் அப்பாவின் செயற்பாடுகள் என்னைக்கவரும். அதனை இன்று நினைக்கையில்; எவ்வளவு அனுசரணையாக; ஆழமான அன்புடன் விட்டுக் கொடுத்து புரிந்துணர்வுடன் அவர்கள் வாழ்ந்துள்ளனர்; என்று நினைக்கையில் சே....! எனக்குப் பெருமிதந்தான். அவர்களுக்குப் பிள்ளையாய் பிறந்ததையிட்டு நான் சந்தோசமடைகின்றேன்.

அப்பா முகம், கை, கால்கள் கழுவிவிட்டு சாமிபடத்திற்கு முன்னால் நின்று தேவாரம் பாடும் போது; அம்மா என்னையும் கூட்டிக்கொண்டுபோய்; சாமிபடத்துக்கு முன்னால்; அப்பாவுக்குப்பின்னால் நின்றவாறே கைகூப்பித் தெய்வதரிசனம் செய்வது வழக்கம்.

நானும் அப்படியே நிற்பேன். பூசை முடிந்து விபூதி பூசிவிட்டுத்தான் அப்பா மறுவேலை பார்ப்பார். இது மூன்று வேளையும் நடக்கும் தினசரி நிகழ்வு.

அப்பா தனித்திருந்து சாப்பிடுவதை நான் கண்டதில்லை. சப்பாணிகட்டி பாயில் இருந்தபடி வருவோருக்கும் கொடுத்து சாப்பிடுவார்.

அப்பாவை, தேடி பலபேர் வருவார்கள். அனைவரையும் அன்போடு அரவணைத்து அனுசரிப்பது அவரது வழக்கம். எந்தச் சந்தர்ப்பத்திலும் கோபப்படவோ, உணர்ச்சி வசப்படவோ, எடுத்தெறிந்து பேசவோ மாட்டார். அன்போடுதான் பேசுவார். வசதி வாய்ப்பும், உதவும் குணமும் இருந்ததால் ஊரவரால் மதிக்கப்பட்டார்.

எமது கிராமத்தில் சமாதானம் பண்ணுதல் தொடக்கம், நல்லநாள், துக்கநாள் நிகழ்வுகள் அனைத்திலும் அப்பாவையே முன்நிறுத்துவார்கள்.


அவர் தொட்டால் துலங்கும் என்ற நம்பிக்கை எம் ஊர்மக்களுக்கு உண்டு. அவரும் அதற்கேற்ப மனம் விட்டுப் பழகுவார். அந்த அளவிற்குச் சமூக அந்தஸ்தையும் பெற்றிருந்தார்.

அப்பாவுக்கேற்ற பாக்கியவதிதான் அம்மாவும். அப்பா எள்ளென்றால்; அம்மா எண்ணையாக இருப்பார். அம்மா யாருடனும் வாதாடியதை நான் இன்றுவரை காணவில்லை. அப்படியான சோடிகள் அவர்கள். நான் விருத்தெரிந்த காலப்பகுதியில் நடந்த சம்பவங்களை என் மனதைப்பாதித்த விடயங்களை; இன்றைக்கும் தொடரும் நினைவுகளாக; என் இதயத்தைக் கசக்கிப்பிழியும் அந்த நிகழ்வுகளை மீட்டுப் பார்க்கிறேன்.

''தம்பி வாரணன், அப்பாவட்டை வாங்கோ...''

''என்னப்பா''

என்னைத்தூக்கி தனது மடியில் இருத்தியவர் ''பெரியோரை மதிக்கவேணும், கூடாத கூட்டங்கள் கூடக்கூடாது, பஞ்சமா பாதங்கள் புரியக்கூடாது, அம்மா அப்பாவை நேசிக்குமாப்போல்; அனைவரையும் நேசிக்க வேணும்; இதுதான் தமிழரின் பண்பாடு.'' இந்தப் போதனைகள் தான் அன்று அப்பாவின் வாயிலிருந்து எனக்குக் கிடைத்தன. அதுவே இன்று எனக்கு வேதவாக்காகி என்னை வாழ்வித்துக்கொண்டிருக்கிறது. புரியாத வயதில் அவர் கூறிய பொன் மொழிகள், புரிகிற காலத்தில் எனக்கு அவரை உயரத் தூக்கிப் பார்க்க வைக்கிறது.



''ஐயா! ஐயா! எங்களுக்கு பொம்பிளைப் பிள்ளை பிறந்து விட்டுது.''

''தம்பி, தாயும் பிள்ளையும் சுகம் தானே?''

''ஓமையா...''

''திண்ணவேலி, முத்தனுக்கு பொம்பிளைப்பிள்ளை பிறந்திருக்காம்; ஏதாவது கொண்டுவந்து குடுத்துவிடு'' அம்மாவின் சின்னம்மா; என்ற பெயரை ஏகவசனத்தில் கூப்பிடவிரும்பாத அப்பா; ஊரின் பெயரில் அம்மாவை செல்லமாக திண்ணவேலி என்று கூப்பிடுவார்.

அம்மாவும் அப்பாவின் சொல்லுக்காக எதிர்பார்த்திருப்பவர் போல்; உடனை ''ஓமப்பா குடுக்கிறன்.''

''பெயரையும் ஐயாதான் வைக்க வேணும்'' முத்தன் பவ்வியமாக....

''தம்பி; திண்ணவேலி தந்ததை இப்போதைக்கு சிலவுக்கு வைச்சிரும்.. பிள்ளைக்கு திரவியமெண்டு பெயர் வையும்.''

அந்தக் காலத்திலையே அப்பா; தூய தமிழ்ப் பெயர்களைத் தான் சூட்டுவார்.

இன்றைக்கும் பண்டிதர் இரத்தினம், சைவப்புலவர் முத்துமணி; போன்றவர்கள் தமது பேட்டிகளில் சொன்ன குறிப்புகள்; படிக்காத மேதை, தூமணித் தமிழன் என்ற அந்த வார்த்தைகள் இன்னமும் இப்படி எத்தனை எத்தனை; சொல்லாமலும் நான் கேட்காமலும் இருக்கின்றதோ...?

மொழி, கலாசார விழுமியங்களில்; அவர் ஈடுபாடு கொண்டிருந்ததை; இன்றும் நான் நினைத்துப் பெருமிதம் அடைகிறேன். இன்றும்; அவர் சூட்டிவிட்ட பெயர்கள் தமிழன் தமிழனாக வாழும்வரை முதுமைக் காலத்திலும் ஒலிக்கின்றன. அன்று அப்பெயர்களை பட்டிக்காட்டார், தாழ்த்தப்பட்டவர்கள் என்று வெறுத்து ஒதுக்கிய மனிதர்கள்கூட இன்று போற்றிப்புகழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தமிழனின் விடுதலைப் போராட்டத்தால்; பழமைவாதிகளுக்கு யதார்த்தங்கள் புரியவைக்கப்பட்டன. தமிழினம் செய்த பாக்கியம்தான். இதை நினைக்கும்போது மனதுக்கு ஆறுதல்தான்.

''வல்லியப்பா இண்டைக்கு தேர்தல் கூட்டம் நடக்கப்போகுதாம்; உங்கடை காணியிலை கூட்டத்தை நடத்த இடம்கேட்டு வருவினம் போலை.''

''சம்மாட்டியார், எங்கடகிராமத்திலை; தமிழரசுக் கட்சிக்குத்தான் இடம். எம் இனம், மொழிதானே எமக்குத்தேவை?''

''வல்லிபுரத்தார்.... வல்லிபுரத்தார்..''

''யார்? வாத்தியார்; வாத்தியார் வந்திருக்கிறாரப்பா.''

அம்மா சொல்லிவிட்டு அடுக்களைக்குச் சென்றுவிட்டாள்.

அப்பா வெற்றிலையை வாயில் போட்டபடி

''கனகசபை வாத்தியார் வாங்கோ; கண்டு கனநாள்.''

''முக்கியவிடயமாக வந்தனான்.''

''விடயமில்லாமல் வாத்தியார் வரமாட்டாரென்று எனக்குத் தெரியும்; சொல்லுங்கோ வாத்தியார் விடயத்தை.''

''உங்கடை நாடகம் பார்க்க; சனமெல்லாம் ஒரே கரைச்சல்; போடுமன் ஒரு நாடகத்தை.''

''வாத்தியார் எனக்கு வயது போட்டுது; ஆரையெண்டாலும் ஒழுங்குபண்ணிவிடுறன்; சரிதானே?''

''அது சரிப்பட்டுவராது புரத்தார்; உங்கடை நாடகம்தான் பார்க்கவேணும்.''

''ஆ... அந்தச் சரீரம்... வேசப்பொருத்தம் இன்றும் என் கண்ணுக்கை நிக்குது.''

வாத்தியார் விடாக்கண்டனாக அப்பாவைச் சம்மதிக்க வைச்சுவிட்டார்.

''சரி வாத்தியார்; உங்கடை வற்புறுத்தலுக்காகவும், ஊருக்காகவும் இதுதான் என் கடைசி நாடகமாக இருக்கும்.''

''என்ன நாடகம் போடப் போறியள்.''

''இலங்கை வேந்தன்.''

''ஏன் அரிச்சந்திரன், சத்தியவான் சாவித்திரி போடேல்லையே?''

''இல்லை. இந்த நாட்டின்ரை முதல் அரசன் இராவணன். அதனால், இலங்கை வேந்தனையே போடுவம். அத்தோடு இதுதான் என்ரை கடைசி நாடகமாகவும் இருக்கும்.'' இப்படி அவர் சொன்னபோது அதுபற்றி கனகசபை வாத்தியார் அதிகம் சிலாகிக்கவில்லை. ஆனால், பிறகு கொழும்புக்கு சென்று வந்தசேதிகள் அறிய ஓடோடி வந்தவராம். அவர்வந்தபோது எல்லாம் முடிந்த கதையாகிப் போனது. அந்த முற்றுப்பெறாத காவியநாயகனைப்பற்றி; யார் எழுதப் போகிறார்கள்? வரிக்கு வரி இலங்கை வேந்தன் நாடகத்தில் தமிழ் உணர்வூட்டிய ஒரு மகான்; தனது கடைசி நாடகம் இதுதான் என்று அன்று அறுத்துறுத்துச் சொன்னது ''சே.... பலித்துதான் போச்சுது.''

அப்பா மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு அப்பாவின் தம்பியோடை சென்றார். மாமா உதவிக்குச் சென்றதால் அம்மாவுக்கு ஓரளவு நிம்மதி. ஒருவாரத்துக்கு மேல் ஒரு விபரமும் கிடைக்காததால்; அம்மா என்னையும் கூட்டிக்கொண்டு; உறவினர்களுடன் மகரகம வைத்தியசாலைக்குச் சென்றார். செந்தேசிப்பழம் போன்ற அப்பாவின் நிறமும், வாட்டசாட்டமான உடலும் வாடிவதங்கி களையிழந்தன; முகத்திலை கரண்டு பிடித்து, பல்லுப்பிடிங்கியதால்; முகத்திலை கறுப்புத்திட்டு படிந்திருக்க; பார்த்தவுடன்; அம்மாவின் ஒப்பாரி.

இவைகளைப் பார்த்து நான் தேம்ப... உறவினரின் அழுகை, கலக்கம் இன்று நினைத்தாலும்; என் உடலை உலுக்கும். வீட்டுக்கு வந்த அப்பா. தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்குப் போய்; பிரார்த்தனை செய்யச் சென்று; அங்கையே தங்கிவிட்டார்.

''அக்கை, அக்கையென்று அன்பொழுக அழைக்கும் அப்பாவை; தம்பி தம்பி என்று அக்கை அழைப்பதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தால் ''மனிதப் பிறவியும் வேண்டுதே இந்த மானிலத்தில்'' என்று மாணிக்கவாசகர் பாடியது நினைவுக்கு வரும். அந்த மாதிரி ஒரு பாசப்பிணைப்பு; சகோதரபாசம். டேய் என்றோ, அடியே என்றோ; அந்த அன்புச் சகோதரங்களிடையே ஒரு நாளாவது ஒரு வார்த்தை கேட்டதாக; யாருமே சொல்லவும் முடியாது. சொன்னதாகக் கேட்டதும் இல்லை.

இப்படியெல்லாம் உயிருக்குயிரான சகோதரபாசத்தை இப்ப காணமுடியுமோ? என நான் கேட்டுப்பார்ப்பதுண்டு. அந்தப் பாசப்பிணைப்பின்; அக்கையென்ற சகோதரி அவருக்கு முன்னரே பரமபதத்தை அடைந்து போனார். ஒரு ஆனிமாதம் 12ஆம் நாள் வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு சந்நிதிமுருகனுக்கு பூசை ஆரம்பிக்கும் மணியும் ஒலிக்க; எனது மடியில் அவர் உயிர்பிரிந்தது. தீர்க்கதரிசனம் கொண்ட அப்பாவின் நடவடிக்கைகள் சைவத்தமிழனாக காலம் உள்ளவரை என் மனதிற்கு வழிகாட்டியது.

என் மனதில் அவரது செயற்பாடுகள் யாவும் ஒன்றின்பின் ஒன்றாக எழுந்து வந்து கொண்டிருந்தன. எங்கள் ஊர் மக்கள் அவரை முதன்மைப்படுத்தியதற்கான காரணமாக அவரின் பின்னே இருந்த அவரது தாராள மனப்பாங்கும், அதற்கூடாக அவராற்றிய உதவிகளும் அப்படியே துலாம்பரமாகத் தெரியவே செய்தன. அப்பழுக்கற்ற சேவைகளின் சொந்தக்காரன் அவர். ஓ.... ஒரே ஒரு கணம்.. என் உணர்வுகள் எல்லாமே ஒன்றாகத்திரண்டு எழுந்து என் நெஞ்சை அப்படியே அழுத்தி நெரித்தன. அவரது இந்தச் செயல்பாடுகளையும், தாற்பரியங்களையும் எனது சந்ததி கைக்கொள்ள வேண்டியது காலத்தால் அழிக்கமுடியாத; அழிக்கக் கூடாத பண்புகள் தான். விழிகளின் ஓரம் அரும்பிய நீர்த்திவலைகளை என் சுட்டுவிரல் என்னை அறியாமலேயே துடைத்துக் கொண்டபோது; சே.... அவர்காலத்தால் அழியாதவர்தான் எனவாய் முணுமுணுத்துக் கொண்டது. மனம் அழத்தொடங்கிவிட்டது. நாற்பது வருடங்களுக்கு முன் நடந்தவைகள் என் மனதில் வடிகாலாகின. என் மகன் முத்தமிழன்; என் கழுத்தைக் கட்டிக்கொண்டபோது; நான் சுயநினைவுக்கு வந்தேன்.

ஏழுமலை மூவேந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# பாசத்துக்கு கிடைத்த பரிசு




1929 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி இரவு. பட்ரீசியா வீட்டின் சமையல்காரி சுதர்லேன் சமையல் வேலையில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தாள்.

பட்ரீசியா அமர்ந்திருந்த வீட்டின் முன் அறையில் கேட்ட தொடர் துப்பாக்கி வேட்டுக்களினால் அதிர்ந்துபோன சுதர்லேன் அதனை அடுத்து எழுந்த பட்ரீசியாவின் அழுகைக்குரல் கேட்டு அப்பக்கம் ஓடிச் சென்றாள்.

அங்கே பட்ரீசியா இரத்த வெள்ளத்தில் கிடந்தாள். சுதர்லேன் இதனை லண்டன் நகர்ப் பொலிஸாருக்குத் தொலைபேசி மூலம் அறிவித்தாள். பொலிஸார் அங்கு வந்து சேரும் நேரம் பட்ரீசியாவின் உயிர் பிரிந்திருந்தது.

பொலிஸார் இம்மரணம் குறித்து முதலில் சுதர்லேனை விசாரணைக்கு உட்படுத்தினர். தான் சமையல் அறையில் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் துப்பாக்கி வேட்டுக்கள் கேட்டதாகவும், ஓடி வந்து பார்த்த போது பட்ரீசியா சுடப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்தார் எனவும் சுதர்லேன் தான் கண்டதைக் கூறினாள்.

உளவுத்துறையினர் பட்ரீசியாவின் முழு விபரத்தையும் திரட்டினர். லண்டனைப் பிறப்பிடமாகக் கொண்ட பட்ரீசியா 1905 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி லண்டனில் இருந்து அமெரிக்கா நோக்கிக் கப்பலில் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டாள்.

அதே கப்பலில் பயணம் செய்த மார்க் வெளச்சர் என்ற மின்சாரப் பொறியியலாளருக்கும், பட்ரீசியாவுக்கும் இடையில் காதல் மலர்ந்தது. சில மாதங்களில் இவர்கள் இருவரும் திருமணத்தில் இணைந்து கொண்டனர்.

திருமணத்தினை அடுத்து இவர்கள் இருவரும் நியூசிலாந்தில் வாழ்ந்தனர். இதே நேரம் மார்க் வெளச்சருக்கு ரஷ்யாவில் தொழில் புரியும் வாய்ப்புக்கிடைத்தது. இதனால் இவர்கள் ரஷ்யாவுக்கு இடம் பெயர்ந்தனர்.

அங்கு டொனால்ட் என்ற ஆண் குழந்தை ஒன்று இவர்களுக்குப் பிறந்தது. சில காலம் சென்றதும் ரஷ்யாவின் காலநிலை டொனால்டின் உடலுக்கு ஒத்துப்போகவில்லை. இதனால் கணவரின் அனுமதியுடன் பட்ரீசியா சுவிஸ்லாந்துக்குச் சென்று குடியேறினாள். மார்க் வெளச்சர் ரஷ்யாவிலிலேயே இருந்து வந்தார்.

1917 ஆம் ஆண்டு ரஷ்யாவில் ஏற்பட்ட கம்யூனிஸ்ட் புரட்சியின் போது மார்க்வெளச்சர் கொல்லப்பட்டார். பட்ரீசியா மீண்டும் நியூசிலாந்துக்குச் சென்று வசித்தாள். அங்குள்ள பாடசாலை ஒன்றில் டொனால்டைப் படிக்க வைத்தாள். 16 வயது வரையும் டொனால்ட் அங்கேயே படித்தான். பிறகு தனது சொந்த இடமான லண்டனுக்கே பட்ரீசியா மீண்டும் வந்தாள். இறுதிவரையும் அங்கேயே வாழ்ந்து வந்தாள். அங்குள்ள மல்லேவன் கல்லூரியில் டொனால்டை உயர்படிப்புக்காகச் சேர்த்தாள்.

பட்ரீசியா பற்றிய இவ்வாறான தகவல்களைச் சேர்த்தெடுத்த உளவுத்துறையினர் பட்ரீசியாவுடன் தொடர்புபட்டவர்கள், உறவினர்கள் போன்றோரைத் தொடராக விசாரணைக்கு உட்படுத்தினர். அவர்கள் பற்றிய மேலதிக விபரங்களையும் திரட்டிக் கொலையுடன் தொடர்புபடுத்திப் பார்த்தனர். எந்தத் தகவலும் இக்கொலையுடன் ஒத்துப் போகவில்லை.

இதேவேளை விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்களில் பட்ரீசியாவின் மகன் டொனால்டும் ஒருவன்.

டொனால்டின் லண்டன் வாழ்க்கை முறை சற்று வித்தியாசமானதாக உளவுத்துறையினருக்குப் பட்டது. அதனால் டொனால்டின் கடந்த கால மற்றும் நிகழ்கால வாழ்க்கை முறையை விரிவாக மோப்பம் பிடித்தனர்.

பட்ரீசியா டொனால்டைத் தனது நேரடிப் பார்வையின் கீழ் வைத்திருந்தாள். டொனால்டின் எதிர்காலம் பாழாய்ப் போய்விடக்கூடாது என்ற விடயத்தில் அவள் மிகவும் அவதானமாய் இருந்தாள்.

இருந்தும் 1926 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் டொனால்டின் நடத்தையில் மாற்றம் ஏற்படத்தொடங்கியது. காலையில் புத்தகங்களுடன் கல்லூரிக்குச் செல்லும் டொனால்ட் கல்லூரிக்குச் செல்வதில்லை. தனது நண்பர்களுடன் சேர்ந்து சில கெட்ட நடத்தையில் ஈடுபடத்தொடங்கினான்.

நைட் கிளப்பில் அதிக விருப்பம் கொண்டிருந்தான்.

இது தவிர மது, மாது, சூதாட்டம் போன்ற பழக்கங்களுக்கும் அடிமையானான். இதற்கெல்லாம் அதிக பணம் தேவைப்பட்டதால் பட்ரீசியாவிடம் அடிக்கடி பணம் வாங்கிக் கொள்வான்



- மு.ஐ.முபாறக் -

இத்தகவல்களைத் திரட்டிய உளவுத்துறையினர், டொனால்டின் ஒவ்வொரு அசைவையும் அவதானிக்கத் தொடங்கினர். அவன் போகின்ற இடங்கள், பழகுகின்ற நண்பர்கள் எல்லாவற்றையும் அவதானித்தனர்.

டொனால்ட் வீட்டில் இல்லாத ஒரு சமயம் உளவுத்துறையினர் டொனால்டின் வீட்டினுள் நுழைந்து சந்தேகத்திற்கிடமான சில பொருட்களை அங்கிருந்து கைப்பற்றினர்.

அவற்றுள் கைத்துப்பாக்கி ஒன்றும் இருந்தது. ஆறு ரவைகளை உள்ளடக்கிய அந்தத் துப்பாக்கியில் இரண்டு ரவைகள் மாத்திரமே இருந்தன.

ஆகவே, பட்ரீசியாவின் கொலைக்கு நான்கு துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டிருந்ததை உளவுத்துறையினர் உறுதிப்படுத்தினர். மூன்று ரவைகள் அவளின் உடலில் பாய்ந்திருந்தன. தேடுதலின் பின்பு நான்காவது ரவை மெத்தை ஒன்றுக்குள் புகுந்துகிடந்த நிலையில் மீட்கப்பட்டது.

இந்தவீட்டில் ஏற்கனவே கண்டெடுக்கப்பட்ட துப்பாக்கியால்தான் பட்ரீசியா சுடப்பட்டிருக்கிறாள் என உளவுத்துறையினர் நம்பினர்.

இதனையடுத்து டொனால்ட் மீண்டும் ஒரு முறை உளவுத்துறையினரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டான். அதில் துப்பாக்கி குறித்து விசாரணை நடத்தினர்.

தன்னிடம் துப்பாக்கி ஏதும் இருக்கவில்லை என டொனால்ட் கூறினான். உளவுத்துறையினர் மேற்கொண்ட தீவிர விசாரணையை அடுத்து, டொனால்ட் துப்பாக்கி தன்னுடையதுதான் என ஒத்துக்கொண்டான். தனது தாயாரைக் கொலை செய்ததும் தான்தான் எனவும் கூறினான்.

மது, மாது எனப் பல தீய பழக்கங்களுக்கு அடிமையாகி இருந்ததால் செலவுக்கு அதிக பணம் தேவைப்பட்டது. தாயார் பணம் கொடுக்க மறுக்கவே தாயாரைக் கொலை செய்து அவரது வங்கிக்கணக்கில் இருந்த பணத்தை எடுக்கத்திட்டமிட்டான்.

லண்டன் நீதிமன்றம் டொனால்டுக்கு தூக்குத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது. 1930 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் திகதி அவன் தூக்கிலிடப்பட்டான்.

# ஒரு புறம் சமாதானம் என்று...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வளவு சிக்கல்களையும் ஜனாதிபதி எப்படிச் சமாளிக்கப் போகிறார்? இன்னும் ஒரு மாதத்தில் எவ்வகையில் பட்ஜெட்டைத் தயாரிக்கப்போகிறார்?

## விலை ஏற்றம் பெரும் பிரச்சினை

இப்பொழுதே உணவுப்பொருட்கள் உட்பட எரிபொருட்களின் விலைகள் விஷம் போல் அதிகரித்துவிட்டன. இந்நிலை தொடர்ந்தால் பட்டினிச்சாவுகளுக்கு இடமாகிவிடும். ஒரு பக்கம் வரட்சி, மறுபக்கம் வெள்ளம், இன்னும் ஒரு பக்கம் யுத்தப் பாதிப்பால் அகதிமுகாம் வாழ்க்கை. இவை எல்லாம் சேர்ந்து இலங்கையை மற்றுமொரு எதியோப்பியாவாக மாற்றிவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

இவற்றை எல்லாம் தடுப்பதற்கு ஒரே வழி நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவது தான். அதன் மூலம் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளால் உறுதி அளிக்கப்பட்ட 45ஆயிரம் கோடி ரூபாவையும் பெற முடியும்.

உலக நாடுகளின் முன் நிபந்தனை என்ன? உடனடியாக சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்பது தான் ஆனால், இதற்காக ஜனாதிபதி மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள், இலங்கை மக்கள் மட்டுமல்ல, சர்வதேச சமூகமும் சந்தேகப்படும் விதத்தில் அமைந்துள்ளன. இதனால், உதவி வழங்கும் நாடுகளின் உத்தரவாதமான 45 ஆயிரம் கோடி ரூபா துருப்பிடிக்க ஆரம்பித்து விட்டது.

## நேரத்துக்கு நேரம் ஒரு பேச்சு

சர்வதேச மட்டத்தில் சமாதானம் என்று கூறும் ஜனாதிபதி, இங்கே மற்றுமொரு யுத்தத்துக்கே அடித்தளம் அமைத்திருக்கிறார். கொழும்பில் பேசும்போது ஜே.வி.பியினரின் ஆதரவின்றி அணுவையும் அசைக்க மாட்டேன் என்கிறார். அதே சூட்டோடு மஹியங்கனைக்குச் சென்று எத்தனை எதிர்ப்புக்கள், முட்டுக்கட்டைகள் வந்தாலும் சமாதானப் பேச்சை தொடர்வேன் என்கிறார். பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு இராணுவத்தை அனுப்புவோம் என்கிறார். இதில் எதை நம்புவது?

இவர்களுக்கு வக்காலத்து வாங்கும் வகையில் முப்படைகளின் கட்டளையிடும் சிரேஷ்ட அதிகாரியான வைஸ் எட்மிரல் தயா விக்கிரம குமார சந்தசிரி எந்தச் சவாலையும் எதிர் கொள்ளப் படைகள் தயார். இந்தியாவிடமிருந்து யுத்தக் கப்பல் ஒன்று வாங்கப்படும் எனப் பகிரங்கமாகவே சூளுரைத்துள்ளார்.

## இந்தியாவின் அக்கறை

இவர்களுடைய யுத்த முஸ்தீபுகளை உறுதிப்படுத்துகின்ற வகையில் இந்தியக் கடற்படைத் தளபதி அருண்குமாரின் திடீர் விஜயம் அமைந்துள்ளது. கரையோரப் பாதுகாப்புக்கும், கடற்புலிகளின் தாக்குதல்களுக்கும் முகம் கொடுக்கும் யுத்த தந்திரோபாயங்கள் தொடர்பாகவே அவர் இங்குவந்து போயுள்ளார். போர்க்கப்பல் வழங்கவும் உறுதி அளிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஆனால், ஜனாதிபதியோ இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றிப்பிதற்றுகிறார். 1987ஆம் ஆண்டில் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தத்தால், இந்திய அமைதி காக்கும் படை இங்குவந்தையும் பல ஆயிரம் தமிழர்களைக் கொன்று குவித்ததையும் இன்னும் மறக்க முடியவில்லை.

இந்தத்தழும்புகள் இன்னும் மாறவில்லை. இப்படியான நிலையில் இந்தியாவுடன் இன்னும் ஒரு பாதுகாப்பு ஒப்பந்தம் என்று கூறும்போது அது தமிழ் மக்கள் மத்தியில் இனம்புரியாத பீதியையே ஏற்படுத்தி உள்ளது.

அதேவேளை, சீனாவில் பயங்கர ஆயுதங்களைத் தயாரித்து விநியோகிக்கும் ''நொறிங்கோ'' நிறுவனத்துடனான ஆயுத ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. சீன இராணுவத்தின் உயர் அதிகாரிகளும் இங்கு வந்துபோயுள்ளனர்.

ஒரு பக்கம் சமாதானப் பேச்சு எனப் பம்மாத்துக்காட்டும் ஜனாதிபதி மறு பக்கம் ஒரு போருக்கான முஸ்தீபுகளை செய்து வருகிறார் என்பது தான் உண்மை.

இப்படியான ஒரு நிலையில் உலக நாடுகள் எப்படி உதவி செய்யும்? உதவி வழங்கும் நாடுகளினால் வழங்கப்படும் 45ஆயிரம் கோடி ரூபா நிதியைக் கையாளும் சர்வதேச நாணய நிதியம், சமாதானப் பேச்சு இன்றேல் ஒரு ரூபாவைத்தானும் வழங்க முடியாது என ஜனாதிபதியிடம் கைவிரித்துவிட்டது.

## அமைச்சர் மங்களவின் அறியாமை

உண்மை நிலை புரியாத அமைச்சர் மங்கள சமரவீர 45ஆயிரம் கோடி ரூபாவில் 70 சதவீதமானவை கிடைத்துவிட்டன, அதற்கான ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப் பட்டுவிட்டன என்று காதில் பூச்சுற்றுகிறார். இது தான் இந்த ஆண்டின் மிகப் பெரிய ஜோக்.

உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் மூலம் வழங்கப்படும், உதவிகளுக்கும், சர்வதேச நாடுகள் தனிப்பட்ட முறையில் நேரடியாக வழங்கும் உதவிகளுக்கும் வித்தியாசம் புரியாமலா இந்த அமைச்சர் உளறுகிறார்?

அமைச்சர் மங்கள சமரவீரவின் கூற்றும் உதவி வழங்கும் நாடுகளின் உதவிக்கு ஆப்பு வைத்துவிட்டது.

இப்போதாவது ஜனாதிபதி உணர வேண்டும். உறுதியாகத் தீர்மானிக்க வேண்டும். சண்டையா, சமாதானமா என்று. அரச வாகனத்தை ஓட்டிச் செல்ல எது கை கொடுக்கப் போகின்றது?

இரண்டும் கெட்டான் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள ஜனாதிபதி எப்படி அரச வாகனத்தை ஓட்டிச் செல்லப் போகின்றார் என்பது இன்னும் கேள்விக்குறியாகவே இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோசப்வாஸ் மன்றக் கலைவிழா - 2004



கொழும்பு ஜோசப் வாஸ் மன்றத்தின் கலை விழாவின் போது மன்றத் தலைவர் றொபட் பெர்னாண்டோ மங்கள விளக்கு ஏற்றுகின்றார். மன்றச் செயலாளர் மொடஸ்டஸ், வெகுஜன ஊடக இணைப்பாளர் செ. ஞானப்பிரகாசம் ஆகியோர் அருகில் காணப்படுகின்றனர்.



பாடல் நடனப் போட்டியில் கலந்து வென்ற, திருக்குடும்ப கன்னியர் மட மாணவிகளும், போட்டியில் கலந்து வென்ற, புனித அன்னம்மாள் ஆலய மாணவிகளும்.

கொழும்பு ஜோசப்வாஸ் மன்றத்தின் 2004 ஆம் ஆண்டுக்கான வருடாந்தக் கலை விழா சமீபத்தில் மருதானை 'டவர்' மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இதில் பேச்சுப் போட்டி, அறிவிப்பாளர் போட்டி, நடனப் போட்டி, பாடல் போட்டி என போட்டி நிகழ்ச்சிகள் அத்தனையும் சிறப்பாக நடைபெற்றன.

கடந்த ஆடி மாதம் ஆரம்பிக்கப்பட்ட இப்போட்டி நிகழ்ச்சிகளில் 350 போட்டியாளர்களுக்கு மேல் கலந்து கொண்டனர். இவர்களைக் கொண்டு நடத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகள் முதலாம், இரண்டாம், மூன்றாம் சுற்றுக்கள் என சுற்றுக்கள் இடம் பெற்று தெரிவு செய்யப்பட்டவர்கள் இறுதிச் சுற்றுக்காக அழைக்கப்பட்டிருந்தனர். இறுதிச் சுற்று நிகழ்வுகளே கலை விழாப் போட்டியாக இடம் பெற்றன.

போட்டி நிகழ்ச்சிகள் அத்தனையும் மிகவும் தரமான நிகழ்ச்சிகளாக அமைந்திருந்தன. நடைபெற்ற பேச்சுப் போட்டியில் இறுதிச் சுற்றுக்காக நான்கு போட்டியாளர்கள் பங்கு பற்றியிருந்த போதிலும் அத்தனை பேச்சுக்களும் ஒன்றை விட ஒன்று விஞ்சியதாய் அமைந்திருந்தது பாராட்டத்தக்கது.

பாடல் போட்டியில் பங்கு பற்றியிருந்த 15 வயதுக்கு கீழ்ப்பட்ட குழுவில்; பாடப்பட்ட பாடல்கள் அத்தனையும் தரமான பாடல்களாகவே அமைந்திருந்தன. ஆனபோதும் இன்றைய நாட்டின் சூழ்நிலையினை படம் பிடித்துக் காட்டிய - 'அகதி மக்களின்' பாடல் உள்ளத்தைக் கிள்ளியதென்பது உண்மையே. அதே போன்று 'சகோதரர் ஒருமித்து' என்று ஆரம்பிக்கும் பாடலும் சிறப்பானதே.

நடனப் போட்டியைப் பொறுத்தவரை 15 வயதுக்கு உட்பட்ட கீழ்ப்பிரிவு நடனத்தில் 'கதை ஒன்று சொல்லப் போறேன்' என்ற பாடலுக்கான குழு நடனம் மிகவும் சுவையாக அமைந்திருந்தது.

மேற்பிரிவு நடனத்தில் (பயர் போய்ஸ்) நடனக்குழுவின் நடனம் முதலாம் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. புதிய சிந்தனைகளுடன் புதிய வடிவங்கள் உட்புகுத்தப்பட்டமை சிறப்பானது. அந்த வகையில் நடனத்தின் ஆரம்பத்தில் ஒருவர் மீனாகத் தோன்றி மேடையில் நீந்திக் குதித்த காட்சி அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

கலை விழாவின் பிரதான அம்சமாக; இறைபணிக்காக அதிக காலம் தம்மை கன்னியாஸ்திரிகளாக ஒப்புக் கொடுத்து இறைபணி செய்த மூன்று அருட்சகோதரிகள் ஜோசப் வாஸ் மன்றத்தால் பொன் ஆடை போர்த்திப் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். இதில் ஓர் அருட்சகோதரி 90 வயதுடையவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுடன் ஆன்மீக வாழ்விலும், கல்விப் பணியிலும் தம்மை ஈடு படுத்தி வரும் சபை உறுப்பினர்களான தம்பதிகளும் மன்றத்தினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

ஜோசப் வாஸ் மன்றக் கலை விழா மண்டபம் நிறைந்த ரசிகர்களை உள்ளடக்கி விமரிசையாக நடைபெற்றதுடன் வருடா வருடம் இந்நிகழ்வு நடைபெற்று வருவது சிறப்பான பணியாகும்.

-பாபு-

கலை அமுதம்

# அபூர்வ வாய்ப்பாட்டு அரங்கேற்றம்

சங்கீத உருப்படிகளை வாயாலும் (சாகித்தியம்), பல வகையான இசைக்கருவிகள் மூலமும், அதே சாகித்தியத்தை அதற்கேற்ப சுர வரிசைகளைக் கையாள்வதன் மூலமும் வெளிப்படுத்தலாம்.



தமிழ் உருப்படிகள், தெலுங்கு அல்லது வேறு பாஷை உருப்படிகள் இவை எல்லாம் வாத்தியங்களைப் பொறுத்தவரை ஒன்றுதான். வாய்ப்பாடு அப்படி அல்ல. சுத்த ரிஷபத்தையும், சதுஷ்ர ரிஷபத்தையும் குரலினால் வெளிப்படுத்துவதற்கு அதீத பயிற்சியும், குரல் வளமும் தேவை.

ஆக வாய்ப்பாட்டு மொழியும், குரலினாலே சுரஸ்தானங்களை சரியாகக் கையாளும் முறையும் மிக முக்கியம். உதாரணத்துக்கு ''சுட்டும் விழிச்சுடர் தான் கண்ணம்மா'' என்ற பாடலை ''சுற்றம் விளிச்சுடர் தான் கண்ணம்மா'' என்று பாடினால் வித்தியாசமான கருத்தைத் தரும். இந்த வித்தியாசம், சுர வரிசைகளை மீட்டி வாசிக்கும் வாத்தியங்களில் காண முடியாது.

புலம்பெயர்வு தொடங்கிய எண்பது காலப்பகுதிகளில் லண்டனில் வருடத்துக்கு ஒன்று, இரண்டு அரங்கேற்றங்களைச் சந்திப்போம் நாம், இப்போது ஜூன், ஆகஸ்ட் மாதங்கள் வந்து விட்டால் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் லண்டனில் அரங்கேற்றம் களை கட்டி வருகிறது.

எமது இளம் தலைமுறையினர் இசைக் கருவிகள், நாட்டியம் என்று அரங்கேற்றினாலும் வாய்ப்பாட்டில் அரங்கேறுவது மிகக் குறைவு. வாய்ப்பாட்டு அரங்கேற்றமெனில், நான் அதைத் தவறவிடுவதில்லை. காரணம் அது ஒரு அபூர்வ கொடை.

கடந்த ஜூலை மாதம் 24 ஆம் திகதி திருமதி சிவசக்தி சிவனேசனின் மாணவி பைரவி ராஜேந்திரனின் Becktheatre இல் நடந்த வாய்ப்பாட்டு அரங்கேற்றத்தைக் கண்டு, கேட்டுக்களிக்கும் பாக்கியம் கிடைத்தது.

14 வயதுடைய இச்சிறுமி, தனது குரல் வளத்தினால் சாகித்தியங்களையும், ராக ஆலாபனைகளையும், கற்பனா சுரங்களையும் தாளப்பிசகில்லாமலும், பிரமிக்கத்தக்க வகையிலும் கையாண்ட விதம் பாராட்டுக்குரியது.

இவர் கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி கஜேந்திரனின் மூத்த புதல்வி.

ஒரு வாய்ப்பாட்டு அரங்கத்தில் தேர்ந்து எடுக்கப்படும் உருப்படிகள் இப்படி, இப்படித்தான் இருக்க வேண்டும் எனச் சில வரைமுறைகள் உண்டு. இந்த வரைமுறை தப்பாது பல்வகையான இராகங்களையும், அட, கண்டசாப்பு, மிஸ்ர சாப்பு, கண்ட திரிபுட, ஆதி எனக் கலந்து தாளங்களையும், எல்லா உருப்படிகளையும் சமத்தில் தொடங்காமல் சில உருப்படிகளை ஒன்று(1), ஒன்றரை(1,1/2) எனத் தள்ளி எடுத்தும், பல்வகையான இசை மேதாவிகளின் பாடல்களைத் தெரிந்தெடுத்த குரு சிவசக்தி சிவனேசன், அரங்கேற்றம் சிறப்புற அமைந்ததற்கு மிகப் பெரும் பங்காற்றியிருக்கிறார்.

ஒரு விமர்சனம் என்னும்போது, பிழைகள் இருந்தால், அதை ஆரோக்கியக் கண்ணோட்டத்தோடு சுட்டிக்காட்ட வேண்டும் என்ற மரபுக்கிணங்க, என்னால் முடிந்தவரை, பிழைகளைத் தேடிப்பார்க்கிறேன். முடியவில்லை. எப்படியும் பிழை பிடித்தேயாக வேண்டும் என முயற்சித்த போது, என் அறிவுக்கெட்டிய சிறு பிழை இதுதான்.

ஒவ்வொரு இராகங்களுக்கும் சில உயிர் அல்லது ஜீவ ஸ்வரங்கள் உண்டு. இந்த ஜீவ ஸ்வரங்களைக் கையாளும்போது அந்த இராகம் அடையாளம் காணப்படுகிறது. இதே போல சில ராகங்கள் கீழ்ஸ்தாயில்சோபிக்கும், சில மத்திய அல்லது மேல்ஸ்தாயி சுரங்களில் சோபிக்கும், பைரவியின் குரல் வளத்திற்கு கீழ்ஸ்தாயி சுரங்களைக் கையாளும்போது, அவை மத்திய ஸ்தாயி அல்லது மேல்ஸ்தாயி சுரங்கள் போல் வனப்பு அளிக்கவில்லை. பைரவியின் குரு இதனை அவதானித்து கீழ்ஸ்தாயி சுரங்களைத் தவிர்த்திருக்கலாம் என்பது எனது தனிப்பட்ட அபிப்பிராயம்.

அரங்கேற்ற ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு என்பது அரங்கேற்றம் செய்யும் குடும்பத்தினரது தனிப்பட்ட சேகரிப்பு. இருப்பினும் வருங்காலத்தில், வாய்ப்பாட்டில் அரங்கேறும் இளம் கலைஞர்களுக்கு, பைரவியின் அரங்கேற்றம் ஒரு எடுத்துக்காட்டு, (Reference) என்ற வகையில், பைரவியின் பெற்றோர்கள் இந்த அரங்கேற்ற பதிவு நாடாக்களை தேவைப்படுவோருக்கு கொடுத்துதவ வேண்டும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

– அல்வையூர் பதஞ்சலி நவேந்திரன் –



அண்மையில் நடைபெற்ற மாமாங்கேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தில் கல்லடி-சரவணா வீதியைச் சேர்ந்த 'நீதாரகாஸ்' இசைக்குழுவினர் தொடர்ந்து மூன்று மணித்தியாலங்கள் தனிபக்திப் பாடல்களை இசைத்தனர்.

மேற்படி நிகழ்வில் கலந்து கொண்ட இசைக் குழுத் தலைவி செல்வி. ஜனனி வேலாயுதம்பிள்ளை குழுவின் மற்றொரு பாடகர் செல்வகுமார் உட்பட இசைக் குழுவினரைப் படத்தில் காணலாம் (259)



கண்டி மலையகக் கலை கலாசார இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற ரத்தின தீப விருது வழங்கும் நிகழ்வில் தனியார்துறை கல்விச் சேவை ஆசிரியர் ஐ. ஜனுடீன் பிரபல நடிகை விசாகா ஸ்ரீவர்தன விடமிருந்து விருது பெற்றுக் கொள்வதையும், அருகில் கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத் தலைவர் இரா.சு.இராமன் நிற்பதையும் படத்தில் காணலாம். (265)



வானொலி அறிவிப்பாளர் ஏ.ஆர்.எம்.ஜிப்ரி எழுதிய 'வியத்தகு விஞ்ஞானிகள்' நூல் வெளியீட்டு விழாவின் போது, நூலின் முதல் பிரதியை ஊடகத்துறை பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீனிடமிருந்து புரவலர் ஹாஷிம் உமர் பெற்றுக் கொள்கிறார். நூல் ஆசிரியர் ஏ.ஆர்.எம்.ஜிப்ரியும் காணப்படுகிறார். (135)



புத்தளம் பிரதேச சாஹித்திய தின நிகழ்வுகள் புத்தளம் நகர மண்டபத்தில் சமீபத்தில் இடம் பெற்றன. பலாவி கனிஷ்ட பாடசாலை மாணவிகள் கண்டிய நடனம் ஆடும் காட்சி. (256)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அறிந்து கொள்ளுங்கள்

1. சூரியகாந்திப் பூ எந்த பூ குடும்பத்தைச் சார்ந்தது? செவ்வந்தி
2. அமெரிக்காவில் எந்த நகரத்தை 'வாத்து நகரம்' என்று அழைப்பர்? பிலடெல்பியா
3. ரஷ்யாவின் தேசிய மிருகம் எது? கரடி
4. பாதரசம் அதிகமாக கிடைக்கும் நாடு எது? இத்தாலி
5. எப்போதும் புயல் வீசிக் கொண்டிருக்கும் கோள் எது? வெள்ளி
6. எந்த மொழியில் இருந்து காசு என்ற சொல் உருவானது? சமஸ்கிருதம்
7. உலக சந்தன உற்பத்தியில் இந்தியாவின் பங்கு எவ்வளவு? 65 சதவீதம்

*எஸ்.வி.எஸ். கவி, அளுத்மாவத்தை, கொழும்பு 15.*

## வெளிநாட்டு அலுவலர்கள்

ஜெனரல் ட்ருக்வே ரெலவ்ஸன்: இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவர்

ஆஸ்லி வில்ஸ்: இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர்

ஜோன் வெஸ்போர்க்: இலங்கைக்கான நேர்வேத் தூதுவர்

யசூசி அகாஷி: இலங்கைக்கான ஜப்பான் தூதுவர்

பேணாட் குணதிலக: இலங்கையின் சமாதான செயலகப் பணிப்பாளர்

நிச்சார்ட் ஆர்மிரேஸ்: அமெரிக்காவின் பிரதி வெளிவிவகார செயலாளர்.

ஜோன் பிற்றர்சன்: நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர்.

*சு.புஸ்பரதி*

*2006 கலைப்பிரிவு, கிளி/பளை மத்திய கல்லூரி.*

## மூன்றின் முக்கியங்கள்

1. பேணி வளர்க்க வேண்டுய மூன்று? திருப்பதி, தைரியம், மனமகிழ்ச்சி
2. போற்ற வேண்டிய மூன்று? அறிவு, அழகு, பண்பு
3. ஆதரிக்க வேண்டிய மூன்று? வாக்குறுதி, நட்பு, பண்பு
4. விரும்ப வேண்டிய மூன்று? கருணை, நற்குணம், மன அமைதி
5. அஞ்ச வேண்டிய மூன்று? களவு, கோள், பொய்
6. எதிர் கொள்ள வேண்டிய மூன்று? கவலை, மரணம், பயணம்

*இ.பேபிநிஷாந்தினி தரம் 10 கிளி/அக்கராயன் மகா வித்தி.*


## சிறார் கைவண்ணம்



ப.ராஜ் முல்/ புதுக்குடியிருப்பு ம.வித்தியாலயம்



கே. சுபாஸ் சத்தியநாதன் கிளி/கனகாம்பிகை கு.அ.த.கவித்.



ர. ராம்கி தரம் 9 யா/இயாணன் அ.த.க.வித்தி.




பி. ஜெயதீஸ்வரன் தரம் 9



இ.ரோகினி தரம் 10. கி/ அ.ம.வி.

## படம் சொல்லும் பழமொழி










அன்பான தம்பி, தங்கைகளே! மேலே உள்ள படங்கள் ஏதோ ஒரு பழமொழியை நினைவூட்டுகின்றன. அவை என்ன பழமொழிகள் என்பதை கண்டுபிடித்து விடையை தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள். சரியான விடையை மாத்திரம் எழுதி ஒக்டோபர் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடை எழுதும் 5 பேரின் பெயர் விவரம் சுடர் ஒளி வாரமலரில் பிரசுரமாகும். கடந்த செப்டெம்பர் 19 ஆம்திகதி சுடர் ஒளியில் உள்ள பழமொழிகளுக்கு சரியான விடைகள் வருமாறு.

1. மதில் மேல் பூனை போல
2. யானைக்கும் அடி சறுக்கும்
3. ஆற்றில் போட்டாலும் அளந்து போடு
4. ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்

செப்டெம்பர் 19 ஆம் திகதி சரியான விடையை எழுதி அனுப்பியவர்களது பெயர் விபரம் வருமாறு:
1. எஸ். புஸ்பகுமாரி, 02, கொழும்புகாமம், இரத்தினபுரி. 2. த.வசந்தகுமாரி, வட்டக்கச்சி மகா வித்தி. 3. ஸ்ரீ. மிறோமினா, கிளி/ பளை மத்திய கல்லூரி. 4. சி. சயந்தன், கி/வட்டக்கச்சி மகா வித்தியாலயம். 5. நி. வினோஜா, புத்தளம் வீதி, நீர்கொழும்பு.

அனுப்பவேண்டிய முகவரி: *'படங்கள் சொல்லும் பழமொழி', சுடர் ஒளி வாரமலர், 85, ஜயந்த மல்லி மாராச்சி மாவத்தை, கொழும்பு - 14*

## ஆடு கற்றுத்தந்த பாடம்

முன்னொரு காலத்தில் கருங்காடுஎன்றகாட்டில்முனிவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அங்கு நிறைய மிருகங்கள் வசித்து வந்தன. அந்த இடத்தில் குடில் ஒன்று அமைத்து தன்னை ஒரு மாமுனிவர் போல் காட்டிக் கொள்வார் அவர்.

மிகவும் மண்டைக்கனம் பிடித்தவர். தன்னை எல்லாரும் மதிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார். மொத்தத்தில் ஒரு போலிச் சாமியார் என்று சொன்னால் மிகையாகாது.

ஒரு நாள் ஆற்றில் குளிப்பதற்காக வேகமாக சென்று கொண்டிருந்தார். எதிரில் காட்டு ஆடு ஒன்று வந்தது. அந்த ஆட்டை கண்டதும் ஒதுங்கி செல்லாமல் திமிராக நடந்து வந்தார். மாமுனிவரான தன்னை கண்டு ஆடு ஒதுங்கிச் செல்லட்டும் என்று நினைத்தார்.

அப்போது ஆடு வேகமாக ஓடிவந்து அவர் முன் குனிந்தது. உண்மையில் ஆடு அவரை முட்டி தள்ளுவதற்காக குறி பார்த்துப் பாய்வதற்காக அப்படி செய்தது. ஆனால், முனிவரோ ஆடு தன்னுடைய வல்லமையை கண்டு பயந்து தன்னை பணிந்து வணங்குவதாக நினைத்து கொண்டார்.



உடனே, ஆட்டைப் பார்த்து தன்னுடைய கைகளை உயர்த்தி, ''உனக்காவது என்னுடைய அருமை தெரிந்துள்ளதே... பிழைத்துப் போ! என்று சொன்னார்.

சிறிது நேரத்தில் நிமிர்ந்த ஆடு ஒரே பாய்ச்சலாக பாய்ந்து முனிவரை முட்டி தள்ளிவிட்டு ஓடியது. தலைகுப்புற விழுந்த முனிவருக்கு அப்பொழுது தான் ஆடு தன்னை முட்டுவதற்காக குறி பார்த்த விஷயமே புரிந்தது.

தன்னைப்பற்றிய மிதமிஞ்சியபெருமை தான் இந்த உதைக்கு காரணம் என்பதை அறிந்தார் முனிவர். அத்துடன் தன்னுடைய மண்டைகனத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தார் முனிவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பார்ப்புகள் ஏமாற்றமாகலாமா?

இது இயந்திர யுகம். எங்கும் அவசரம். எதிலும் அவசரம். மக்களின் வாழ்க்கை முறை மாறிப்போய்விட்டது. இங்கு உறவுக்கு முக்கியத்துவம் கொடுப்பதைவிட்டு, பணத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கிவிட்டனர். அதுமட்டுமல்லாது, தவறான உறவுகளுக்கான வாய்ப்புகளும் அதிகரித்துள்ளதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு, தகாத உறவுகள் குறித்துப் பேசுவதே கூடாது என்ற எண்ணம் இருந்தது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு அதில் என்ன தவறு இருக்கிறது என்ற மனப்பக்குவம் தோன்றியது. இப்போது அதை சர்வசாதாரணமாக நினைக்கும் நிலை காணப்படுகிறது என்கிறார் ஒரு மருத்துவ நிபுணர்.

தனது குடும்பம் என்று வாழ்ந்தவர்கள் பலர் இப்போது மாறிய பயணத்தால் தனது குடும்பத்தைத் தவிக்கவிட்டு, தமது நற்பெயரையும் இழந்து, நடுத்தெருவில் நிற்கின்றனர்.

குடும்பம் நன்றாக இருக்க வேண்டும். அந்த உறவுகளே நீடிக்க வேண்டும் என்ற நிலை ஒரு காலத்தில் இருந்தது. பொருளாதாரத் தேவைகளும், இயந்திர வாழ்க்கையும் அந்நிலையை மாற்றி இருக்கின்றன.



வசதியாகவும் சொகுசாகவும் வாழ வேண்டும் என்று ஒவ்வொருவரும் நினைக்கிறார்கள். தன்னை விட உயர்ந்தவர்களோடு ஒப்பிட்டு, அதைப்போல் வாழ ஆசைப்படுகின்றனர். அதன் விளைவு வீட்டை மறந்து உழைக்க வேண்டிய நிலை ஆண்களுக்கு ஏற்படுகிறது. அல்லது கணவன், மனைவி இருவரும் வேலைக்குப் போக வேண்டிய சூழ்நிலை உருவாகிறது. இது தவிர்க்க முடியாததாகவும் மாறிவிட்டது.

இதனால் ஒருவருக்கொருவர் மனம் விட்டுப் பேசுவதற்கு நேரம் கிடைப்பதில்லை. உணர்வுகளைப் புரிந்துகொள்வதற்கான சூழ்நிலை ஏற்படுவதில்லை. கிடைக்கும் நேரத்தையும் தொலைக்காட்சி ஆக்கிரமித்து விடுகிறது.

திருமணம் நடைபெறும்போதே, கணவன் மீது மனைவிக்கும், மனைவி மீது கணவனுக்கும் எதிர்பார்ப்புக்கள் ஏற்படுவது இயல்பானது.

குழந்தைகளையும், தன் பெற்றோரையும் மனைவி கவனித்துக்கொள்வாள், தன் இன்ப, துன்பங்களை முழுமையாகப் பகிர்ந்துகொள்வாள். எப்போதும் வாழ்க்கை இன்பமயமாக இருக்கும் என்று ஒவ்வொரு கணவனும் நின்னைக்கிறான். அதே போல் தன் விருப்பப்படி கணவர் நடந்துகொள்வார் என்று ஒவ்வொரு மனைவியும் எதிர்பார்க்கிறாள்.

ஆனால், நிஜ வாழ்க்கை எதிர்பார்த்தபடி அமைந்துவிடுவதில்லை. தினமும் அலுவலகப் பரபரப்பு, பொருளாதாரப் பிரச்சினை போன்றவற்றால் இந்த எதிர்பார்ப்புக்கள் பாதியிலேயே கானல் நீராய் மறைந்து போய்விடுகின்றன. இருவருக்கும் இடையில் ஏற்படும் இந்த ஏமாற்றம் பிரச்சினையாக வெடிக்கிறது.

அலுவலகத்தில் அதிக நேரம் கணவன் செலவிடும் வேளையில் மனைவி தனிமையிலேயே இருக்க வேண்டி ஏற்படுகிறது. சந்தர்ப்ப சூழ்நிலைகள் பிற ஆண்களுடன் அவர்களைப் பழக வைக்கிறது. அலுவலகம் செல்லும் பெண்கள், ஆண்களுக்கும் இச்சூழ்நிலைகள் ஏற்படுகின்றது. இப்பழக்கம் வழக்கமாகி பாதை மாறும் போது தான் பிரச்சினை வெடிக்கிறது.

பிரபலமானவர்களின் முறையற்ற உறவுகளை தற்கால ஊடகங்களே பிரபல்யப்படுத்தும்போது, அவர்கள் அப்படி இருக்கும் போது நாம் ஏன் அவ்வாறு இருக்கக் கூடாது என்று சாதாரண மக்கள் நினைக்கின்றனர். இதில் என்ன தவறு இருக்கிறது என்ற மனப் போக்குக் காணப்படும்போது, தகாத உறவுகளும் சாதாரணமாகிவிடுகின்றன.

எனவே, வாய்ப்புக்கிடைத்தாலும் கூட, பாதை மாறாத மனநிலையை சிறு வயதிலேயே ஏற்படுத்த வேண்டும். பணம் வாழ்க்கைக்குத் தேவை தான் என்றாலும், உறவுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அத்தியாவசியத் தேவைக்கும், அனாவசியத் தேவைக்கும் இடையில் உள்ள வேறுபாட்டைப் புரிந்துகொள்ள வேண்டும்.

மற்றவர்களின் வாழ்க்கை முறையோடு ஒப்பிட்டு, அது கிடைக்கவில்லையே என்று வருத்தப்படக் கூடாது. ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள வேண்டும். மனம் விட்டுப் பேச வேண்டும். அதற்கான நேரத்தை ஒதுக்கிக் கொள்ள வேண்டும்.

வாழ்க்கை வாழ்வதற்கே! அதைப்புரிந்து கொண்டு செயற்பட்டால் ஏது சங்கடம்?

## இவ்வார பொன்மொழி

மிகவும் மோசமான சூழ்நிலையை அப்படியே ஏற்றுக்கொள்ளப் பழகுங்கள். அதனுடனேயே சென்று அந்தச் சூழலை எப்படி அழகாக மாற்ற வேண்டும் என்று சிந்தியுங்கள். அதற்கான உபாயங்கள் தானாகவே தோன்றும். இல்லையெனில் நீங்கள் சூழ்நிலைக்கைதியாகிவிடுவீர்கள்.




## மாத்திரை வேண்டாமே!

தடிமன் என்றாலே உடனே மருந்துக் கடைகளைத் தேடிப் போகிறவர்களே ஏராளம். தடிமன் என்றாலே தங்களுக்கு இருக்கும் பிரச்சினைகளை எல்லாம் சொல்லி மாத்திரை கேட்பார்கள். அவர்களும் தங்கள் அறிவுக்கு எட்டியவரை மாத்திரை வழங்குவார்கள். பொதுவாக அத்தகைய மாத்திரைகளைத் தொடர்ந்து உண்ணும்போது பக்க விளைவுகள் ஏற்படக்கூடும். மாத்திரை உண்ணாமலே இத்தகைய சின்னச் சின்ன வருத்தங்களுக்கு நிவாரணம் பெற வாய்ப்பிருக்கிறது.

தொண்டைவலி, தடிமன் இருப்பவர்கள் சுக்குத் தேநீர் தயாரித்துப் பருகலாம். ஒரு துண்டு சுக்கைத் தூளாக்குங்கள். சிறிதளவு துளசி இலையை எடுத்துக் கொள்ளுங்கள். சிறிதளவு மல்லி, மிளகையும் இடித்துக் கொள்ளுங்கள். இதனை 2 கப் தண்ணீரில் கலந்து தேநீர் தயாரியுங்கள். இதில் ஒரு தேக்கரண்டி தேநீர் தூள் கலந்துகொள்ளலாம். அல்லது சீனியிலும் தயாரிக்கலாம். 2 கப் தேநீர் 1/2 கப் தேநீர் கப்பாக வற்றியதும் அதனை வடிகட்டி மிதமான சூட்டில் பருகுங்கள். தடிமன் நீங்கும்.

தடிமனால் ஏற்படும் காய்ச்சல், தலைவலி, உடல் வலி போன்றவை நீங்க வேப்பங் கசாயம் சிறந்தது. வேப்ப மரத்தின் தோலைச் சீவி எடுத்து நன்றாக இடித்து அதில் மல்லி, மிளகை இடித்துச் சேர்த்து அரை லீட்டர் தண்ணீர் கலந்து கொதிக்க விடுங்கள். வற்ற வைத்து, மிதமான சூட்டில் பருகுங்கள்.

தண்ணீரில் புளியம் இலையை வைத்து, அந்த நீரை உடலில் ஊற்றுவது நல்லது. தடிமன் தொடர்பான உடல்வலி இதன் மூலம் நீங்கும்.

தடிமனுக்கு மிளகு இரசம் ஏற்றது. மிளகு, சீரகம், பூண்டு போன்றவைகளை அரைத்து சிறிதளவு புளியும் சேர்த்து உப்பும் கலந்து தண்ணீர் சேர்த்துக் கொதிக்க விடுங்கள். கொதிக்கும்போது சிறிதளவு கறிவேப்பிலை கலந்து அடுப்பில் இருந்து இறக்கி விடுங்கள். இதனை தெளிய வைத்துப் பருகலாம். சாப்பாட்டிலும் சேர்த்து உண்ணலாம். தடிமன் மூலமான இருமலை கட்டுப்படுத்த மூன்று மிளகு, மூன்று துளசி இலையைச் சேர்த்து மென்று தின்று விடுங்கள். இருமல் தானாகக் குறைந்துவிடும்.

# குழந்தைக்கு தலைக்கனமா?

சில தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு மீன் எண்ணெய் என்று சொல்லப்படும் 'விட்டமின் ஏ' மாத்திரைகளை கண் பார்வைக்கு நல்லது என்று தாங்களே கடைகளில் வாங்கி அளவுக்கதிகமாகக் கொடுப்பது உண்டு.

இவ்வாறு அன்றாடம் கொடுக்கப்படும் மாத்திரைகள் குழந்தைகளுக்கு, குறிப்பாக பள்ளி செல்லும் வயதுள்ள சிறுவர் சிறுமியர்களுக்குத் தீராத தலை வலி மற்றும் சத்தியை ஏற்படுத்தும். இதற்காக, கண் பரிசோதனையில் ஆரம்பித்து ஸ்கான் வரைக்கும் பரிசோதனை செய்துள்ள பெற்றோர்களை நாம் பார்ப்பதுண்டு. ஆனாலும் தலை வலி தீராது.



இதற்குக் காரணம், 'விட்டமின் ஏ' மாத்திரைகள், மூளையில் கட்டி இல்லாமலேயே, கட்டி இருப்பது போன்ற நிலைமையை ஏற்படுத்திவிடும். இதனைத் தெளிவாகக் கூறுவதானால் இதை ஒருவிதமான தலைக்கனம் என்றும் சொல்லலாம். இதனை ஆராய்ந்து கண்டறிந்து, 'விட்டமின் ஏ' மாத்திரைகள் சாப்பிடுவதை நிறுத்திவிட்டாலே, இந்த உபாதைளில் இருந்து உடனடி நிவாரணம் கிடைக்கும்.

'விட்டமின் ஏ' குறைபாடு இருக்கும் குழந்தைகள் கண்பார்வையை இழந்துவிட கூடிய நிலைமையும் இருக்கிறது. மருத்துவரின் ஆலோசனை பெற்றுத் தேவையான அளவே உட்கொள்ள வேண்டும். அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்பது 'விட்டமின் ஏ' மாத்திரைக்கே பொருந்தும்.

இதே போல், கருவுற்ற ஆரம்ப நிலையிலிருக்கும் பெண்கள் ஆர்வ மிகுதியில் விட்டமின் ஏ மாத்திரைகளை அதிகம் உட்கொண்டாலும், குழந்தைகள் குறைபாட்டுடன் பிறக்க வாய்ப்புள்ளது.

பால், முட்டை, பச்சைக்காய்கறிகளான கரட், சிவப்புப் பூசணி, பப்பாளிப்பழம், மாம்பழம் என்பவற்றில் மலிந்துள்ள 'விட்டமின் ஏ' எவ்வளவு உட்கொண்டாலும், இந்தத் தலைக்கன விளைவுகள் ஏற்படாது.

# அந்த சில நாட்களில்...

மாதத்தில் சில நாட்கள் வந்தாலே முகத்தைச் சுழிக்கும் பெண்கள் பலரை நாம் பார்த்ததுண்டு. அப்படி அவதிப்படும் பெண்களுக்காய் இன்று பயனுள்ள சில அம்சங்களைப் பார்ப்போம்.

பழச்சாறுகள், மூலிகை, தேநீர், சுத்தமான குடிநீர் போன்றவற்றை அதிகமாகச் சேர்த்துக் கொள்ளுங்கள். பழங்கள், காய்கறிகள் அதிகம் சாப்பிடுங்கள்.

இந்த நாட்களில் அதிகமான வேலைப்பழு இருந்தால், அவ்வப்போது சிறிதுநேரம் ஓய்வெடுத்துவிட்டு வேலைகளைத் தொடருங்கள். இது பெரிய விடயம் அல்ல என்று நினைத்து சுலபமாக்கிக் கொண்டால், அன்று முழுவதும் புத்துணர்ச்சி[illegible]ன் இருப்பீர்கள்.

நீங்கள் அணியும் உடை உங்களுக்கு வசதியானதாக இரு[illegible]டும். தளர்வான உடைகளை அணியுங்கள். உள்ளாடைகள் பருத்தியாக இருந்தால் ந[illegible]

புத்துணர்ச்சி கிடைக்கும் வகையில் சுத்தமான காற்றைச் சுவா[illegible]ள். அப்போது மூச்சை நன்கு இழுத்துவிட வேண்டும்.

வலி மிகவும் கடுமையாக இருந்தால், முதுகுக்கு ஒத்தடம் கொடுங்கள். உங்கள் கால்களை குறிப்பாக கணுக்காலையும், முழங்காலையும் நன்கு தேய்த்து விடுங்கள். அப்[illegible]து தான் பக்ரீறியாத் தாக்குதல் இல்லாமல் பாதுகாக்க முடியும்.

தினமும் வெதுவெதுப்பான நீரில் குளித்து வந்தால் மாத விலக்கு நாட்களில் வலி இருக்காது.

மற்றப் பெண்களிடம் அவர்களது மாதவிலக்கு நேர அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டாலும் வலி குறைவது போன்ற உணர்வு உங்களுக்குக் கிடைக்கும்.

# டிப்ஸ்

வாழைப் பூ, வாழைத்தண்டு போன்றவற்றை நறுக்கும் போது, எமது கைகளில் ஒட்டிக் கொள்ளும் அதன் பிசுபிசுப்பு எளிதில் போகாமல் இருக்கும். இதைத் தவிர்க்க இவற்றை நறுக்கிய பின்பு கைகளில் சிறிது எண்ணெய் தடவி, பின்பு நன்கு சவர்க்காரம் போட்டுக் கழுவ பிசுபிசுப்புப் போய்விடும்.

வெங்காயத்தை உரித்து நறுக்கும்போது, கண்களில் இருந்து கண்ணீர் பெருகி, கண்கள் எரியும். இதைத் தவிர்க்க, வெங்காயத்தை 10,15 நிமிடங்கள் தண்ணீரிலிட்டு பின்பு எடுத்து நறுக்க வேண்டும்.

பூண்டை சிறிது நேரம் தண்ணீரில் ஊற வைத்த பின்பு உரித்தால் சிரமமில்லாமல் உரிக்கலாம்.

கூடுதலானவரை சமையலில் மிளகுத் தூள் சேர்ப்பது மிகவும் நல்லது. ஆரோக்கியம் தருவதுடன் காய்கறி, கீரைகளில் படிந்துள்ள நச்சுத் தன்மையையும் குறைக்கவல்ல இந்த மிளகு, சமையலின் சுவையையும், மணத்தையும் கூட்டும் திறன் கொண்டது.

தினமும் கூடுமானவரை வெந்நீர் குடித்து வாருங்கள். தொடர்ந்து இப்படிக் குடித்துவர உடல் எடை தானாகக் கட்டுப்படுவதுடன் குறையவும் ஆரம்பிக்கும். அன்றாட உணவில் உள்ள கொழுப்பு உடலில் சேராத வண்ணம் தடுக்கும் திறன் வெந்நீருக்கு உண்டு.

வெந்தயம் நார்ச்சத்து மிகுந்த ஒரு சிறந்த பொருள். குறைந்த விலையில் உடலுக்கு மிகவும் பலன் தரக்கூடிய இதைத் தவறாமல் அன்றாடம் உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். சாம்பாரைத் தாளிக்கும் போது சிறிதளவு வெந்தயம் சேர்த்தால் சாம்பாரின் சுவையும், மணமும் கூடும். வாயுத் தொல்லைகளுக்கு வெந்தயம் நல்லது.

தோடம்பழத்தின் தோலையும், சுண்டைக் காய் வற்றல், சிறிது சுக்கு, பெருங்காயம் என்பவற்றையும் எண்ணை விடாது வெறுமையான சட்டியில் வறுத்துப் பொடி செய்து, உப்புப் போட்டுக் கலந்து வைத்துக்கொண்டால், தேவையான போது சூடான சாதத்தில் சிறிது எண்ணெயும், நெய்யும் ஊற்றிப்பிசைந்து சாப்பிடலாம். வயிற்று வலி, வயிற்றுப் பொருமல், வாயுத் தொல்லை நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் அத்துமீறிய குடியேற்றமும் காணிப்பிரச்சினைகளும்

வவுனியா மாவட்டத்தில் அண்மைக்காலமாக காணிப்பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருந்து வருவதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் கணேஷ் தெரிவிக்கிறார்.

தற்போது வவுனியா மாவட்டத்தில் காணிகளை வாங்குவதில் மக்கள் ஆர்வம் காட்டி வருவதால் காணிகளின் விலை அதிகரித்துள்ளது.

அத்துடன் சிலர் அரசுக்குச் சொந்தமான காணிகளை ஏமாற்றி விற்றும் வருகின்றனர்.

இதனால் காணிகளைக் கொள்வனவு செய்வோரை விழிப்பாக இருக்குமாறு அரச அதிபர் எச்சரிக்கிறார்.

தனிப்பட்ட காணிகளைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் ஒரு சட்டத்தரணியின் ஆலோசனையுடன்காணி தொடர்பான முழு விடயங்களையும் பரிசீலித்துப் பார்த்துக் காணிகளைக் கொள்வனவு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

ஆகவே,எந்தக்கட்டத்திலும் அரசுக்குச் சொந்தமான காணிகளை எவரிடமிருந்து கொள்வனவு செய்வதையோ, சட்டத்தின் மூலம் உறுதி எழுதி விற்பதையோ தவிர்த்துக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

முறைகேடான வகையில் காணிகளைக் கொள்வனவு செய்து, இறுதியில் அரசாங்கத்தால் அக்காணியால் வெளியேற்றப்படும் மக்களுக்கு எந்தவித நட்ட ஈடும் கொடுக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கு இல்லை என்றும், ஆகவே அரச காணிகள் தொடர்பான எந்தவித நடவடிக்கையையும் மேற்கொள்வதற்கு முன்னதாக தத்தமது பிரதேச செயலகத்தில் உண்மை நிலையை அறிந்து கொள்ளுமாறும் வவுனியா அரச அதிபர் கேட்டுள்ளார்.

வவுனியாவின் பிரதான திணைக்களங்களுக்கென ஒதுக்கப்பட்ட காணிகளை அடாவடித்தனமாகப்பிடித்துள்ள குடும்பங்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அரச செயலகத்தில் இனம் காணப்பட்ட 'அரச காணிகள்' தொடர்பாக இடம்பெற்ற கூட்டத்தில் வவுனியா அரச அதிபர் தெரிவித்துள்ளார்.இக்கூட்டத்தில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், திணைக்களங்களின் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் வவுனியா மாவட்ட விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தி. ஞானவேல், நிர்வாகப் பொறுப்பாளர் தங்கையா மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.



குடும்பம் ஒன்றின் அவல நிலை

வவுனியா நகரிலும், அதனை அண்டிய பிரதேசங்களிலும் காணிகளை ஆக்கிரமித்து இருப்பவர்கள் கட்டாயமாக வெளியேற்றப்படுவர் என்றும், அதற்கான விபரங்களைப் பெற்று வருவதாகவும் கமநல அபிவிருத்தி உதவிப்பணிப்பாளர் கே.தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார்.

வவுனியா வைரவப் புளியங்குளத்தில் 74 குடும்பங்களும், கோவில் குளத்தில் 03 குடும்பங்களும், பண்டாரிக்குளத்தில் 56 குடும்பங்களும், தச்சநாதன் குளத்தில் 17 குடும்பங்களும், கோவில் புதுக்குளத்தில் 05 குடும்பங்களும்,பட்டாணிச்சூர் புளியங்குளத்தில் 23 குடும்பங்களும்,பட்டக்காடு குளத்தில் 10 குடும்பங்களும்,கரையான் குளத்தில் 14 குடும்பங்களும்,வெளிக்குளத்தில் 21 குடும்பங்களும்,வேப்பங்குளத்தில் 21 குடும்பங்களும் தம்பனை புளியங்குளத்தில் 22 குடும்பங்களும், பத்தினியாளர் மகிழங்குளத்தில் 13 குடும்பங்களும், நெளுக்குளத்தில் 11 குடும்பங்களும் அத்துமீறிக் குடியேறியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு எதிராக வெகு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இது பற்றி அந்த மக்களிடம் கேட்டால், "யுத்தம் காரணமாக இருக்க வீடு, வாசல் இன்றி வவுனியாவுக்கு வந்தோம். அப்பொழுது வெறுமனே கிடந்த காணிகளில் அப்போதிருந்த இயக்கப் பொறுப்பாளர்கள் குடியமர்த்தினார்கள் . நாங்கள் இனி எங்கே செல்வது'' என்கின்றனர்.''



அரச காணியில் கட்டப்பட்ட குடிசை

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
மண்டூக்குளி கிளை

மகா புவி

---

இவ்வார 'ராசிபலன்' 03—10—2004 , 09 —10—2004

பொ. சந்திரன்

# ராசி பலன்

## இவ் வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சனி |
| | | | |
| | | | சுக்கிரன் |
| | | கேது | சூரியன் புதன் செவ் குரு |

| | | |
|---|---|---|
| செவ்வாய் | அத்தம் | சந்திரன் |
| சுக்கிரன் | மகம் | கேது |
| புதன் | சித்திரை | செவ்வாய் |
| குரு | அத்தம் | சந்திரன் |
| சூரியன் | அத்தம் | சந்திரன் |
| சனி | புனர்பூசம் | குரு |

புரட்டாதி 18முதல் இருந்து 24வரை

சந்திரன் இடபம் முதல் சிங்கம் வரை

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை1.**

(1,8) உரிய செவ்வாய் 6இல் இருப்பது விசேஷம். மேலும் சந்திரசாரம் பெற்று இருப்பதும் நல்லது. எடுத்த முயற்சி வெற்றிபெறும். முன்பு இருந்த நோய் விலகி உடல் ஆரோக்கியமாக இருக்கும். (2,7) உரிய சுக்கிரன் ஐந்தில் இருப்பதால் கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. 7 இல் கேது இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. நாலாம் வீடு சுத்தமாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். (10, 11) அதாவது தொழிலுக்கும், லாபத்துக்கும் உரிய சனி மூன்றில் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். பக்க உதவி கிடைக்கும். ராசியில் ராகு இருப்பதும், குரு 6இல் மறைவதும் குறை. குரு வழிபாடு செய்யின் குறை நீங்கும்.

**இடபம் : கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் நாலில் இருப்பதுவிசேஷம். மேலும் கேது சாரம் பெற்று இருப்பது நல்லது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. வீடு, வாகனம் லாபம் தரும்.(2,5)உரிய புதன் ஐந்தில் இருப்பதால் கையில் பணம் இருக்கும். குழந்தைகளின் செயல்பாடு திருப்தி தரும்.பூர்வீகச் சொத்து சேரும். (7,12) உரிய செவ்வாய் ஐந்தில் இருப்பதால் திருமண வாய்ப்புப் பாதிக்கும். இருப்பினும் 5 இல் குரு இருப்பதால் நிலைமையில் மாறுதல் ஏற்படலாம். (9,10) தர்மகர்மாதிபனான சனி இரண்டில் இருப்பது தொழில் துறையைப் பாதிக்கலாம். அத்துடன் தர்மப்பணிக்கும் இடையூறு உண்டு. ராசியைக் குரு பார்ப்பதால் ஆறுதல் உண்டு.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் நாலில் இருப்பது நல்லதல்ல. ஆனால், செவ்வாய் சாரத்தில் இருப்பது நல்லது. எடுத்த முயற்சி தாமதமாகும். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வீடு, வாகனங்களால் லாபம் இருக்காது. ராசியில் சனி இருப்பதும் பிரச்சினை. மன அமைதி இருக்காது. இரண்டாம் வீடு சுத்தமாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். (7,10) உரிய குரு நாலில் இருப்பது நல்லதல்ல. திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். தொழில்துறையில் லாபம் இருக்காது. மேலும், இவ்விரு வீடுகளையும் சனி பார்ப்பதும் தொல்லை தான். சனி, குரு வழிபாடு செய்ய தோசம் விலகும். ராகு, கேதுக்கள் எல்லாக் கிரகங்களையும் அடைப்பதும் குறைதான்.

**கடகம்: புனர்பூசம்4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் ராசிக்கு வருவது சிறப்பு. மேலும், தீய கிரகங்கள் ராசியைத் தாக்காமல் இருப்பதும் நல்லது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. மன அமைதி இருக்கும். இரண்டுக்குரிய சூரியன் மூன்றில் இருப்பது கையில் பணம் இருக்கும். (4,11) உரிய சுக்கிரன் இரண்டில் இருப்பது விசேஷம். வீடு, வாகனம் லாபம் தரும். தாய் நலம். மூத்த சகோதரத்துக்கும் நல்லது. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். (7,8) உரிய சனி 12இல் இருப்பது திருமண வாய்ப்பைப் பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. (5,10) உரிய செவ்வாய் மூன்றில் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். குழந்தைகளின் செயல்பாடு திருப்தி தரும். குரு மறைவது குறை.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிநாதன் சூரியன் இரண்டில் இருப்பது நல்லதல்ல. ஆனால், சந்திர சாரம் பெற்று இருப்பது ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2,11) உரிய புதன் இரண்டில் ஆட்சி உச்சமாக இருப்பதால் கையில் பணம் இருக்கும்.மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். (3,10) உரிய சுக்கிரன் ராசியில் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (4,9) உரிய செவ்வாய் இரண்டில் இருப்பதால் பெற்றோருக்கு கூடாது. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (6,7) உரிய சனி 11 இல் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் ராசியில் இருப்பது அவ்வளவு சிறப்பு இல்லை. மேலும், செவ்வாய் சாரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். மன அமைதி இருக்காது. தொழில் துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது. (4,7) உரிய குரு ராசியில் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். மேலும், இவ்விரு வீடுகளையும் சனி பார்ப்பது தடைகளையும் பிரச்சினைகளையும் ஏற்படுத்தக்கூடும். சனி, குரு வழிபாடு செய்யின் தாக்கம் குறைந்து நல்ல பலனை எதிர்பார்க்கலாம்.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் 11இல் இருப்பது நல்லது. மேலும், கேதுவின் சாரத்தில் இருப்பதும் நல்லது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. (2,7) உரிய செவ்வாய் 12 இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். 7 இல் கேது இருப்பது குடும்பத்தில் அமைதி இருக்காது. (4,5) உரிய சனி 9 இல் இருப்பதும் சிறப்பு இல்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். பூர்வீகச் சொத்து பாதுகாக்கப்படும். 10 ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும். ராசியில் கேது இருப்பதும், குரு 12 இல் மறைவதும் நல்ல பல பலன்கள் தடைப்படவாய்ப்புள்ளது. குரு வழிபாடு செய்வது நல்லது.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் 11 இல் இருப்பது சிறப்பானது. மேலும், சந்திரசாரம் பெற்று இருப்பதும் நல்லது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. (2,5) உரிய குரு 11 இல் இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். குழந்தைகளின் செயற்பாடு திருப்தி தரும். (3,4) உரிய சனி எட்டில் இருப்பதும் கூடாது. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (7,12) உரிய சுக்கிரன் 10 இல் இருப்பது நல்லதல்ல. திருமணவாய்ப்புப் பாதிக்கலாம். ஆனால், குரு நல்ல நிலையில் இருப்பதால் நிலைமையில் மாற்றம் வரலாம். பத்துக்குரிய சூரியன் 11 இல் இருப்பதால் தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. பக்க உதவிகள் கிடைக்கும்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு பத்தில் இருப்பது நல்லதல்ல. சிலர் மத்திமபலனைக் கொடுக்கும் என்பர். சந்திர சாரம் பெற்று இருப்பது நல்லது. எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். இவ்விரு வீடுகளையும் சனி பார்ப்பது பெரும்குறை. (2,3) உரிய சனி 7 இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்கும் நல்லதல்ல. (7,10) உரிய புதன் 10இல் இருப்பது நல்ல தல்ல. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. திருமணவாய்ப்புப் பாதிக்கலாம். 7 இல் சனி இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. ராகு, கேதுக்களை விட்டு ராசி விலகி இருப்பது நல்லது.

**மகரம்: உத்தராடம் 2,3,4,. திருவோணம், அவிட்டம் 1,2**

(1,2) உரிய சனி 6 இல் இருப்பது விசேஷம். மேலும், குருவின் சாரத்தில் இருப்பது சிறப்பானது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. கையில் பணம் இருக்கும். பிரயாண வாய்ப்பு உண்டு. (4,11) உரிய செவ்வாய் 9 இல் இருப்பது நல்லதல்ல. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். தாய்க்கும் கூடாது. மூத்த சகோதரத்துக்கும் கூடாது. நண்பர்களால் தொல்லை வரவாய்ப்பு உண்டு. 7 ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. மேலும், குரு 9 இல் இருப்பது விசேஷம். (5,10) உரிய சுக்கிரன் 8 இல் இருப்பது நல்லது. தொழில்துறை முன்னேறும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். 9 இல் உள்ள குரு ராசியைப் பார்ப்பது விசேஷம்.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி ஐந்தில் இருப்பது கூடாது. குருவின் சாரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி தடைப்படலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கப் படலாம். சயன சுகம் குறையலாம். (2, 11) உரிய குரு 8 இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. மூத்த சகோதரத்துக்கு கூடாது. நண்பர்களால் தொல்லையுண்டு. (4,9) உரிய சுக்கிரன் 7 இல் இருப்பது கூடாது. பெற்றோருக்கு நல்லதல்ல. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். 7 க்குரிய சூரியன் 8 இல் இருப்பது கூடாது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. பத்துக்குரிய செவ்வாய் 8 இல் இருப்பதால் தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. குரு வழிபாடு செய்யின் நலம் உண்டாகும்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 7 இல் இருப்பது சிறப்பானது. மேலும், சந்திரசாரம் பெற்று இருப்பதும் நல்லது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. தொழில்துறை முன்னேறும். பக்க உதவிகள் கிடைக்கும். (2,9) உரிய செவ்வாய் 7இல் இருப்பது கையில் பணம் இருக்காது. பிதாவுக்கும் நல்லதல்ல. (4,7) உரிய புதன் 7 இல் இருப்பது வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். இருப்பினும் 7 இல் குரு இருப்பதால் நிலைமையில் மாற்றம் வரவாய்ப்பு உள்ளது. ராசியைக் குரு பார்ப்பதால் சகல விதமான தோசமும் விலகும். எண்ணிய எண்ணம் ஈடேறும். ராசியைச் சனி பார்ப்பது நல்லதல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டு யுத்தம் தீர்ந்தது!

வளரும் சிறுபிள்ளைகளின் பசியைத் தூண்டும்
சுவைமிக்க விட்டமின் பானம்

**Hungry Plus**

வளரும் பருவத்திலுள்ள சிறுபிள்ளைகளுக்கு உணவு ஊட்டப்போனால் வீடே யுத்த களமாகும். அதட்டியும் மிரட்டியும் அடித்தும் அவர்களுக்கு உணவு ஊட்டுவதற்குள் தாய்மாருக்கு உயிரே போய்விடும்...ஆனால், இப்போது இப் பிரச்சினைக்குச் சிறந்த பரிகாரம் கிடைத்துள்ளது. அதுதான், ஹங்ரி பிளஸ் விட்டமின் பானம்!

சிறுவர்களின் பசியுணர்வை இயற்கையாகத் தூண்டும் லைசின் மற்றும் விட்டமின்கள் அடங்கிய சுவைமிக்க ஹங்ரி பிளஸ் பானம், பிள்ளைகளின் நலமான வாழ்வுக்கும் உற்ற துணையாகும்.




**ஹங்ரி பிளஸ்**
பசியைத் தூண்டும்...

இப்போது, முன்னணி மருந்தகங்களிலும் சுப்பர் மார்க்கட்டுகளிலும் வாங்கலாம்.

Marketed by: ARKEM PHARMACEUTICALS Tel: 011- 2470290



**திருகோணமலையில்... சுடர் ஒளி உதயன் விளம்பர பணிமனை**

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை திருகோணமலை 39, அருணகிரி வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர பணிமனையில் கையளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு:-

விளம்பர முகாமையாளர்
'உதயன்' 'சுடர் ஒளி' விளம்பரப்பிரிவு
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை, கொழும்பு - 14.
011 4734401 - 3, 011 2399666 - 70

திருகோணமலையில் தொடர்புகளுக்கான
தொலைபேசி இலக்கம் 026 2220783, 026 2221670



# 110 வகைகள் விஷேட விலையில்

110th Bata ANNIVERSARY

Bata காட்சியறைகளில் மட்டும்



## 2ம் லெப் மாலதி நினைவு நாள் 10.10.2004

# தமிழீழ பெண்கள் எழுச்சி நாள்

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில், மகளிர் படையணிகளின் போரியல் வரலாற்றை எடுத்துக் காட்டுகின்ற

- படைக்கலக் கண்காட்சி
- போர்க்கருவிகள் உற்பத்திச்சாலை
- விடியல் படைவீடு
- இராணுவ மருத்துவமனை
- சண்டைக் காட்சிகள்
- சிறப்புக் கலைநிகழ்வுகள்

வென்றிடுவீர் பரிசுகளை

பார்வையாளர்களுக்கான
- துப்பாக்கிச் சூட்டுப்போட்டிகள்
- தனி விளையாட்டுக்கள்

2ம் லெப். மாலதி நினைவுக் கேடயத்துக்கான மகளிர் உதைப்பந்தாட்டப் போட்டிகள்

தமிழீழத்தின் முன்னணி இசைக்கலைஞர்களும் போராளிக் கலைஞர்களும் இணைந்து வழங்குகின்ற இசைநிகழ்வுகள்




**காலம்:- 06.10.2004 - 10.10.2004**
**நேரம்:- காலை 9.00 -இரவு 10.00 மணி**
**இடம்:- கிளிநொச்சி மத்திய மைதானம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு – 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 ஒக். 03 ஆம் திகதி வெளியிடப்பட்டது.